# முண்டக உபநிஷதம்



பராபரம் பாடசாலை

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| **வகை** | : | உபேதசம் |
| **முதற்பதிப்பு** | : | 2019 |
| **பக்கங்கள்** | : | 188 |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |
| **விலை** | : | அக விழிப்பு |

# முண்டக உபநிஷதம்

பராபரம் பாடசாலை

# முண்டக உபநிஷதம்

## நிழலும் நிஜமும்

பரம[தன்]னை அறியக்கூடிய பல்வேறு பாடங்களில் வருகின்ற விசயங்கள் எல்லாமே, நம்முடைய சனாதன தர்மத்தின் வழியில் வந்த வேதங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் நம் வழக்கத்தில் உள்ளன.

அத்தகைய வேதங்களின் இறுதி உண்மையாக, அறுதிப்பிரமாணமாக அறியப்பட்ட மூன்று முக்கிய நூல்களின் வரிசையில், **உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம்** மற்றும் **பகவத்கீதை** என்பவைகள் ஆகும்.

இதை **பிரஸ்தானத் திரையம்** என்கின்றோம்.

அந்த வகையிலே நிறைய உபநிஷதங்கள் உள்ளன.

அதிலே நாம் இன்று பார்க்க இருப்பது, **முண்டக உபநிஷதம்** ஆகும்.

இதில், ஒவ்வொரு உபநிஷதங்களுக்கும் ஒரு **மகாவாக்கியம்** உள்ளது. அதில் மிகவும் முக்கியமாகப் பார்க்கப்படுவது **நான்கு மகாவாக்கியங்கள்** ஆகும்

<u>அந்த மகாவாக்கியங்கள் பின்வருமாறு:</u>

பிரக்ஞானம் பிரம்ம (प्रज्ञानं ब्रह्म) – **"பிரக்ஞையே (அறிவுணர்வே) பிரம்மம்"** (ரிக் வேதத்தின் ஐதரேய உபநிடதம்) அயம் ஆத்மா பிரம்ம (अयम् आत्मा ब्रह्म) – **"இந்த ஆத்மா பிரம்மம்"** (அதர்வண வேதத்தின் மாண்டூக்ய உபநிடதம்)

தத் த்வம் அஸி (तत् त्वं असि) – **"அதுவாகவே (பிரம்மம்) நீ இருக்கின்றாய்"** (சாம வேதத்தின் சாந்தோக்கிய உபநிடதம்)

அஹம் பிரம்மாஸ்மி (अहं ब्रह्मास्मि) – **"நான் பிரம்மம்"** (யஜுர் வேதத்தின் பிரகதாரண்யக உபநிடதம்) **"பிரக்ஞையே பிரம்மம்"** எனும்போது, இந்த பிரக்ஞை என்ற **உணர்வு** படைக்கப்பட்ட ஜீவராசிகளுக்கு முதன் முதலில் எங்கு தொடங்கியது என்று பார்த்தால், கல், மண் போன்ற ஜடப்பொருட்களுக்கு அடுத்ததாக, தாவரங்களில்தான் முதன் முதலாக அறியப்பட்டது.

தாவரங்களில் எப்படி அறியப்பட்டது?

அதுவே, **தொடுவுணர்வு** என்பதாக அறியப்பட்டது.

அதாவது, ஒரு தொட்டாஞ்சுருங்கிச் செடி ஏதாவது, தன்னைத் தொட்டால், அதை உடனே அறிந்துக் கொண்டு, தன்னை தற்காத்துக் கொள்ள தன்னை முழுவதுமாகச் சுருக்கிக் கொள்கின்றது.

இதிலிருந்து, தாவரங்களுக்கு தன்னை யாரோ தொடுகின்றார்கள் என்பதினால், அதை உணரும் ஒரு அறிவு உள்ளது என்பது புலனாகின்றது.

இவ்வாறு அந்த பேரறிவு தன்னை தான் அறியத் தன்னால் உண்டாக்கிக் கொண்ட உபாதிகள் (உடல்கள்) மூலம் முயற்சிக்கின்றது. அந்த முயற்சியின் முதல் நிலை இதுதான் எனலாம்.

இவ்வாறு, முயற்சித்து அறிவுப் பரிணாமத்தில், படிப்படியாக முன்னேறி, ஆறாம் அறிவு கொண்ட மனிதன் என்ற நிலையில், அது ஒரு நிறை நிலை மனிதனை உண்டாக்கி, அவன் மூலம், அவனது தனித்த தன்னுணர்வை, ஒட்டுமொத்த பேருணர்வு நிலைக்கு உயர்த்தித் தன்னைத் தான் உணருகின்ற பொழுது, அதன் முழுமைத்தன்மை நிறைவாகின்றது.

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥
ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

இறைவன் முழுமையானவர்.
இந்த உலகம் முழுமையானது.
முழுமையான இறைவனிலிருந்தே முழுமையான உலகம் தோன்றியுள்ளது.
முழுமையிலிருந்து முழுமையை எடுத்த பின்பும் முழுமையே எஞ்சியுள்ளது!

# முண்டக உபநிஷதம்

## நிழலும் நிஜமும்

இந்த முண்டக உபநிஷதம் எனும் நூல் எத்தனையோ பல ஆசிரியர்களால் எல்லா மொழிகளிலும் விளக்க உரை எழுதப்பட்டுள்ளது. இதில் நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் மொழியில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் துறவியான **ஆசுதோஷானந்தர்** அவர்களால் எழுதப்பட்ட எளிய உரை நடை ஒன்றும் உள்ளது.

ஆகவே, அந்த அருமையான நூலையே இங்கு எடுத்துக் கொண்டு, எல்லோருக்கும் இன்னும் எளிதாகப் புரியவைக்க நானும் முயற்சிக்கின்றேன்.

பொதுவாக, நம்முடைய உலகியல் வாழ்க்கை நம் ஒவ்வொருவருக்கும், ஒரு கணம் கூட இடைவெளியின்றி ஏராளமான அனுபவங்களைக் கொண்டு வந்தவாறு உள்ளது. அந்த அனுபவங்களுள் சில இன்ப அனுபவங்கள், சில துன்ப அனுபவங்கள் என இருக்கின்றன.

அதிலே, இன்பம் வரும்போது மகிழ்கிறோம், துன்பம் வரும்போது துவள்கிறோம்.

இவ்வாறு நமது வாழ்க்கை மகிழ்ச்சிக்கும், துயரத்துக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஓயாத இந்த ஓட்டத்திற்கு முடிவே கிடையாதா, விடிவே கிடையாதா? என்று மனம் சில வேளைகளில் அங்கலாய்க்கிறது.

உண்டு, விடிவு உண்டு என்கிறது முண்டக உபநிஷதம்.

'**நீ நிழலைப் பற்றிக் கொண்டு அதனுடன் யுத்தம் செய்கிறாய். அதை விட்டு விட்டு நிஜத்தைப் பற்று**' என்று கூறுகிறது இந்த உபநிஷதம்.

அதர்வண வேதத்திலுள்ள 28 உபநிஷதங்களுள் ஒன்று இது. '**முண்ட**' என்ற மூலச்சொல்லில் இருந்து வந்தது 'முண்டகம்'. '**முண்ட**' என்றால், '**நீக்குதல்**', என்பதினால், நம்முடைய அறியாமையை நீக்க இந்த உபநிஷதம் முயற்சி மேற்கொள்கின்றது.

அதாவது, நீ '**நிழலைப் பற்றிக் கொண்டிருக்கிறாய்**' என்று நமது அறியாமையைச் சுட்டிக் காட்டி, நிஜம் எது என்பதை எடுத்துக்கூறி, நமது அறியாமையை நீக்க இந்த உபநிஷதம் முயற்சி செய்கிறது. இந்த உபநிஷதத்தில் மூன்று முண்டகங்கள் (பகுதிகள்) உள்ளன. ஒவ்வொரு முண்டகத்திலும் இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. இந்த ஆறு உட்பிரிவுகளிலுமாக மொத்தம் 64 மந்திரங்கள் உள்ளன.

## உபநிஷதக் கரு

நிழலை உண்மை என்று நம்பி, அதன் பின்னால் ஓடுகிறோம் நாம். தவறான திசையில் நாம் செய்கின்ற இந்தப் பயணம்தான் நமது ஏமாற்றங்கள், துன்ப துயரங்கள் அனைத்திற்கும் காரணம். எனவே, '**நிழலை விட்டு நிஜத்தைப் பற்று**' என்று வற்புறுத்துகிறது இந்த உபநிஷதம்.

**உடல், மனம், ஆன்மா** என்று பல பகுதிகளால் ஆனவன் மனிதன். இதில் உடம்பும், மனமும் மாறக் கூடியவைகள். அவைகள் நிழல். ஆனால், ஆன்மா என்றும் மாறாதது. அதுவே நிஜம்.

நிழலுடன் நம்மை நாம் ஒன்றுபடுத்திப் பார்ப்பதை விட்டு விட்டு, நம்மை நாம் நம் நிஜத்துடன் ஒன்றுபடுத்திக் காண வேண்டும். அதனை அனுபூதியில் உணர வேண்டும் என்பது இந்த உபநிஷதத்தின் தனிக்கருத்தாக உள்ளது. அதற்கான சில சாதனை முறைகளையும் இங்கே நாம் காண்கிறோம்.

## வித்யைகள்

இறைவனை அடைவதே ஒவ்வொரு மனிதனின் லட்சியமாகக் கொள்ளும் உபநிஷதங்கள் அதற்கென பற்பல வழிமுறைகளை வலியுறுத்துகின்றன. இப்படி ஒவ்வோர் உபநிஷதமும் தனக்கென்று ஒரு குறிப்பிட்ட பாதைகளைக் காட்டுகிறது.

இந்தப்பாதை **வித்யை** அல்லது **வித்யா** எனப்படுகிறது. வித்யா என்றால், **கல்வி** என்று பொருள்.

வித்யைகள் எண்ணற்றவை.

14 முக்கிய உபநிஷதங்களிலுமாக சுமார் 35 வித்யைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. காலங்கள் பல கடந்து விட்டதாலும், வேறு பல காரணங்களாலும் இந்த வித்யைகளின் செயல் முறைகளோ, அவைகளைப் பற்றிய சரியான பொருளோ நமக்குத் தெரியவில்லை.

முண்டக உபநிஷதத்தில் நாம் காண்பது **அக்ஷர–பரா வித்யை.** இது **அக்ஷராக்ஷர வித்யை** என்றும் வழங்கப்படுகிறது.

அதை பின்வரும் மந்திரங்களின் மூலம் அறியப்பட உள்ளது. அதற்கு முன்பாக ஒவ்வொரு உப நிஷதமும் தனக்கென ஒரு அமைதி மந்திரத்தை கொண்டுள்ளது. அதை சாந்தி மந்திரம் என்று அழைக்கின்றோம்.

**சாந்தி மந்திரம்:**

எந்த ஒன்றையும் செய்யும்போது, அதற்குரிய மனநிலை இருக்கப் பெறுவது இன்றியமையாதது. எந்தக் காரியத்தைச் செய்கிறோமோ அதற்குரிய மனநிலையை வரவழைத்துக் கொண்டு, அதன்பிறகு அந்தச் செயலில் ஈடுபடுவது சிறப்பான பலனை அளிக்கும். அதுப்போல அனுபூதிக் கருவூலமான உபநிஷதங்களைப் படிக்கப் புகுமுன் நமது சிந்தனையை

அவற்றுடன் ஒன்றுப்படுத்த இந்த சாந்தி மந்திரங்கள் உதவுகின்றன.

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: ।

பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: ।

ஸ்திரைரங்கைஸ் துஷ்ட்டுவாக்ம் ஸஸ்தனூபி: ।

வ்யசேம தேவஹிதம் யதாயு: ॥

ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்த ச்ரவா: ।

ஸ்வஸ்தி ந: பூஷா விச்வ வேதா: ।

ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்ட்டநேமி: ।

ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

ஓம், தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்ல விஷயங்களை மட்டுமே கேட்க வேண்டும். பூஜிக்கத் தகுந்தவர்களே! கண்களால் நாங்கள் நல்ல விஷயங்களை மட்டுமே காண வேண்டும். உறுதியான அங்கங்களுடன் கூடிய உடலுடன் ஆயுள் முழுவதும் நாங்கள் உங்களைத் துதிக்க வேண்டும். உங்களுக்கு நன்மை செய்த வண்ணம் நாங்கள் வாழ வேண்டும்.

புகழ் பெற்ற இந்திரன் நமக்கு நன்மை செய்யட்டும். எல்லாம் அறிகின்ற சூரியன் நமக்கு நன்மை செய்யட்டும். தீமையை அழிக்கின்ற கருடன் நமக்கு நன்மை செய்யட்டும். பிருஹஸ்பதி நமக்கு நன்மை தரட்டும்.

உலகியலில் மூழ்கடிப்பதற்கான விஷயங்கள், உயர் வாழ்க்கையில் தூண்டுகின்ற விஷயங்கள் ஆகிய இரண்டுமே மனிதனின் முன்னால் வருகின்றன; அறிவாளி இரண்டாவது வகையைத் தேர்ந்தெடுக்கிறான் என்று கட உபநிஷதம் கூறுகிறது. அவ்வாறு நல்லவற்றையும் உயர்ந்தவற்றையும் தேர்ந்தெடுப்பதற்கு நமது உடம்பிற்கும் புலன்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கும், அந்த முயற்சியில் தேவர்களின் துணையை நாடுவதற்குமான மந்திரம் இது.

உயர் வாழ்க்கை வாழ வேண்டுமானால் உடலையும், புலன்களையும் அதற்குத் தகுதியானவையாக வைத்திருக்க வேண்டும், இயற்கையுடன் இயைந்து வாழ வேண்டும் என்ற பரந்த கருத்துடன் இந்த உபநிஷதம் ஆரம்பிகிறது.

## <u>சாதாரண அறிவும் உயர் அறிவும்:</u>

உலகம் நம் கண்முன்னால் தன் அழகுப் பரிமாணங்களுடன் பறந்து கிடக்கிறது. அழகு, அறிவு, ஆற்றல் என்று அதன் எந்தப் பரிமாணத்தை எடுத்துக் கொண்டாலும், மனிதன் அவைகளைப் பற்றி அறிந்துள்ளது மிகமிகக் குறைவே.

அவன் புலன்களால் அறிகின்ற கல்வி, விஞ்ஞானம், மதம் போன்றவைகள் மற்றும் அதிமன ஆற்றலால் அறிகின்ற ஜோதிடம் போன்றவைகள், ஏன் இந்த வேதங்கள் கூட சாதாரண அறிவே என்று பாகுபடுத்துகிறது இந்த முதல் அத்தியாயம்.

மனிதன் தன் அறிவையெல்லாம் செலுத்தியும் ஓர் அம்சத்தைக் கூட புரிந்து கொள்ள இயலாத இந்த உலகைப் படைத்த இறைவன் இருக்கிறார். அவரை அறிகின்ற அறிவே உண்மையில் **உயர் அறிவு** என்கின்றது இந்த உபநிஷதம். அதுவே அனைத்து அறிவிற்கும் அடிப்படை.

இந்த உயர் அறிவு என்று நம்மால் அறிந்துக் கொள்ளக் கூடிய அதற்கு ஆதாரமான பேரறிவாகிய இறைவனின் மகிமையை இந்த அத்தியாயத்தில் காண்கிறோம். இந்த உபநிஷதம் கூறுகின்ற **அக்ஷர பரா** வித்யையும் இந்த அத்தியாயத்திலே வருகிறது.

# முதல் பகுதி

## <u>அத்தியாயம் – 1</u>

ஆன்மீக அறிவே அனைத்து அறிவுகளின் அடிப்படை என்பதினால், '**எதை அறிந்தால் அனைத்தும் அறிந்ததாகும்?**' என்று 3 – ஆம் மந்திரம் ஒரு கேள்வியை எழுப்புகிறது. அந்த விளக்கத்திற்கு ஒரு முன்னுரை போல் அமைகிறது இந்த மந்திரம்.

ஓம் ப்ரஹ்மா தேவானாம் ப்ரதம: ஸம்பபூவ

விச்வஸ்ய கர்த்தா புவனஸ்ய கோப்தா ।

ஸ ப்ரஹ்ம வித்யாம் ஸர்வ வித்யா பிரதிஷ்ட்டாம்

அதர்வாய ஜ்யேஷ்ட்ட புத்ராய ப்ராஹ ॥ 1 ॥

<u>பொருள்:</u>

ஓம். பிரம்ம தேவர் தேவர்களில் முதலில் தோன்றியவர். உலகைப் படைத்தவரும் காப்பவரும் அவரே. அனைத்து

அறிவுகளின் அடிப்படையான ஆன்மீக அறிவை அவர் தனது மூத்த மகனான அதர்வனுக்கு உபதேசித்தார்.

ஓர் அறையில் நாற்காலி, மேஜை, புத்தகங்கள் என்று பல்வேறு பொருட்கள் உள்ளன. இவற்றைக் காண வேண்டுமானால் ஒளி வேண்டும். எனவே இந்த அத்தனைப் பொருட்களின் அடிப்படையாக இருப்பது ஒளியேயாகும். ஒளியில்லா விட்டால் அறையிலுள்ள எதனையும் காண இயலாது.

அதுப்போல, ஆன்மீக அறிவு அனைத்து அறிவுகளின் அடிப்படையாக உள்ளது. ஆன்மா பற்றிய அறிவு ஆன்மீக அறிவு. உடம்பையும் மனத்தையும் தவிர நம்மில் ஆன்மா என்ற ஒன்று உள்ளது. உண்மையில் நாம் உடம்போ மனமோ அல்ல; இவைகள் இரண்டையும் கருவிகளாகக் கொண்ட ஆன்மா என்ற உண்மையை அனுபவபூர்வமாக அனுபூதியில் உணர்வதே வாழ்க்கையின் லட்சியம்.

உபநிஷதங்களின் அடிப்படைக் கருத்து இது.

ஆன்மா என்ற ஒன்று இருப்பதால்தான் நாம் பார்க்க முடிகிறது, கேட்க முடிகிறது, அனுபவிக்க முடிகிறது. சுருக்கமாக சொல்வதானால், நம்மால் வாழ்க்கையை வாழ முடிகிறது.

'ஆன்மா இருப்பதால்தான் கேட்க முடியாதவற்றை கேட்க முடிகிறது; சிந்திக்க முடியாதவற்றை சிந்திக்க முடிகிறது; அறிய முடியாதவற்றை அறிய முடிகிறது' என்கிறது சாந்தோக்ய

உபநிஷதம். அதனால்தான் ஆன்மீக அறிவு அனைத்து அறிவுகளின் அடிப்படை என்று கூறப்பட்டது.

<u>பரம்பரையாக வருவது ஆன்மீக அறிவு:</u>

அதர்வணே யாம் ப்ரவதேத ப்ரஹ்மா–

அதர்வா தாம் புரோவாசாங்கிரே ப்ரஹ்மவித்யாம் ।

ஸ பாரத்வாஜாய ஸத்யவஹாய ப்ராஹ

பாரத்வாஜோ அங்கிரஸே பராவராம் ॥ 2 ॥

<u>பொருள்:</u>

பிரம்மதேவரிடமிருந்து பெற்ற ஆன்மீக அறிவை அதர்வணர் அங்கிரருக்குச் சொன்னார். அங்கிரர் பரத்வாஜரின் வழி வந்தவராகிய சத்யவஹனுக்குச் சொன்னார். இவ்வாறு ப்ரத்வாஜருக்கும், அங்கிரச்சுக்கும் அந்த அறிவு வம்சாவழியாக குருவிடமிருந்து சீடருக்கு வழிவழியாக வந்தது.

அடிப்படை அறிவு ஒன்று உண்டா?

**சௌனகோ ஹ வை மஹாசாலோ அங்கிரஸம் விதிவதுபஸன்ன: பப்ரச்ச ।**

கஸ்மின்னு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதீதி ॥ 3 ॥

<u>பொருள்:</u>

சிறந்த இல்லறத்தாராகிய சௌனகர் அங்கிரஸை முறைப்படி அணுகி, 'தெய்வத்திற்கு நிகரானவரே! எதை அறிந்தால் இந்த அனைத்தும் அறிந்ததாகும்?' என்று கேட்டார்.

பாரதம் மற்றும் பிற நாடுகளின் கலாச்சாரம், விஞ்ஞானம், மதம், ஆன்மிகம் என்று எந்தத் துறையையும் ஆழ்ந்து படிப்பவர்கள் ஒரு அற்புதமான உண்மையைக் காண முடியும். எதிலும் அறுதி ஒருமையைக் காண விழைந்தது நம்முடைய இந்திய மனம். 'பொருட்களின் ஓர் அறுதி ஒருமையைக் (ULTIMATE UNITY) காண்பதே உபநிஷதங்களின் நோக்கம். "எதை அறிந்தால் இந்த அனைத்தும் அறிந்ததாகும்?" – இந்த ஆராய்ச்சியையே உபநிஷதங்கள் தங்கள் ஒரே கருத்தாகக் கொண்டிருக் கின்றன' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

<u>இதனை விளக்குகிறார் அவர்:</u>

'ஒருமை நிலையைக் கண்டுபிடிப்பதுதான் அனைவருடைய முயற்சி என்றாலும், முழுமையான ஒருமைநிலை கிட்டியதும் விஞ்ஞானம் அதற்கு மேலே செல்லாமல் நின்று விடும். ஏனெனில், அது தன் குறிக்கோளை எட்டி விட்டது.

அதுப்போலவே, எந்த மூலப்பொருளிலிருந்து எல்லாப் பொருட்களும் படைக்கப்படுகின்றனவோ, அதைக் கண்டுபிடித்த பின்னர் வேதியியல் முன்னேற முடியாது.

எந்த மூல சக்திகளிடமிருந்து எல்லா சக்திகளும் வெளிப்படுகின்றனவோ, அதைக் கண்டறிந்ததும் இயற்பியல் நின்று விடும். மரணம் நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தில், மரணத்தைக் கடந்து நிற்கும் ஒரே உயிரைக் கண்டுபிடித்ததும், மாறிக் கொண்டிருக்கும் இந்த உலகில் மாறாத ஒரே அடிப்படையான ஒன்றைக் கண்டுபிடித்ததும், எந்த ஓர் ஆன்மாவிலிருந்து மற்ற பிற ஆன்மாக்கள் வெளிப்படுவது போன்று மாயையால் தோன்றுகிறதோ, அந்த ஆன்மாவைக் கண்டுபிடித்ததும், மத விஞ்ஞானம் பூரணமாகி விடும்.'

அத்தகைய அறிவு ஒன்று உண்டா என்று சௌனகர் அங்கிரஸைக் கேட்கிறார்.

## <u>இரண்டு வகை அறிவுகள்:</u>

அனைத்திற்கும் அடிப்படையான அறிவு ஒன்று உண்டா என்பது கேள்வி. உண்டு என்று கூறி, அந்த அடிப்படை அறிவு மட்டுமே மிக உயர்ந்தது, மற்ற அனைத்தும் இரண்டாம் பட்சமானவை, சாதாரணமானவை என்று அங்கிரஸ் சௌனகருக்கு உபதேசிக்கிறார்.

தஸ்மை ஸ ஹோவாச । த்வே வித்யே வேதிதவ்யே இதி ஹ ஸ்ம யத் ப்ரஹ்மவிதோ வதந்தி பரா சைவாபரா ச ॥ 4 ॥

<u>பொருள்:</u>

**அங்கிரஸ் சௌனகரிடம் கூறினார்:** 'உயர்ந்தது மற்றும் சாதாரணமானது என்று இரண்டு வகை அறிவுகள் உள்ளன. இவற்றை அறிய வேண்டும் என்று இறையனுபூதி பெற்ற மகான்கள் கூறுகிறார்கள்.'

தத்பரா ரிக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோ அதர்வவேத: சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருத்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி ।
அத பரா யயா

ததக்ஷரமதிகம்யதே ॥ 5 ॥

<u>பொருள்:</u>

ரிக்வேதம், யஜுர்வேதம், சாம வேதம், அதர்வண வேதம், உச்சரிப்பு சடங்குகள், இலக்கணம், அகராதி, யாப்பு, வானவியல், ஜோதிடம் போன்றவை சாதாரண அறிவைச் சேர்ந்தவை. அழிவற்றவராகிய இறைவன் எந்த அறிவால் அடையப்படுகிறாரோ அது உயர்ந்த அறிவு.

இந்து மதத்தின் ஓர் ஒப்பற்ற தனித்தன்மையை இங்கே நாம் காண்கிறோம். வேதங்களைக் கடவுளின் மூச்சாகக் கொள்கின்ற அதேவேளையில் வேதங்களும் சாதாரண அறிவே என்று கூறுவதை இந்து மதத்தில் மட்டுமே நாம் காண முடியும்.

'**வேதங்களின் சிறப்பு என்ன?**' என்று கேட்ட போது சுவாமி விவேகானந்தர் 'தங்கள் போதனைகளையும் கடந்து செல்ல வேண்டும் என்று திரும்பத்திரும்ப வற்புறுத்துகின்ற சாஸ்திரம் அது ஒன்றே.

நாங்கள் போதிப்பவை எல்லாம் குழந்தை உள்ளத்திற்கே, நீ வளர்ந்ததும் அவற்றைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்கின்றன வேதங்கள்' என்கிறார். வேதங்கள் இறை வாக்காக இருக்கலாம். இறைவனின் மூச்சாக இருக்கலாம். ஆனாலும் அவை இறைவன் அல்ல. இறைவனை அடைவது மட்டுமே உயர்ந்தது, மேலானது.

(மிக நுண்மையான கருத்தியலாக இது உள்ளது. இந்தக் காலத்தின் வேதங்கள் அறிந்தவர்களையே நாம் அரிதாகக் காண்கிறோம். ஆனால் இதன் மூலம் வேதங்கள் அறிந்தவராக அந்தக் காலத்தில் பெரும்பாலானோர் இருந்தனர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அது மட்டுமின்றி வேதங்கள் இறைவழியில் செல்லும் ஒருவனுக்கு வழிகாட்டி மட்டுமே என்பதை இது மறைமுகமாகத் தெரிவிக்கிறது. இருளில் நடந்து செல்லும் ஒருவனுக்கு எப்படி கையில் உள்ள விளக்கு வழிகாட்டுகிறதோ அதே போல்தான் இறை வழியில் செல்லும் ஒருவனுக்கு அறியாமையை நீக்கும் சாதனமாக வேதங்கள் விளங்குகின்றன. அவற்றின் துணையுடன் ஒருவன் ஆன்மத் தேடலில் ஈடுபட்டு இறைவனை அடைய இயலுமே தவிர வேதங்கள் தெரிந்திருந்தால் மட்டும் அல்ல! இதன் மூலம் வேதங்கள் சாதாரண அறிவாக அவற்றாலேயே வர்ணிக்கப்படுபதையும் அறிந்து கொள்ள முடியும்!)

<u>**உயர் அறிவு:**</u>

எந்த அறிவால் இறைவன் அடையப்படுகிறாரோ அது உயர் அறிவு (#5). அந்த இறைவன் எப்படிப்பட்டவர், அந்த அனுபூதி எப்படிப்பட்டது, அவர் எப்படி இந்த உலகைப் படைத்தார் போன்றவை பற்றித் தொடரும் 4 மந்திரங்கள் கூறுகின்றன.

## இறைவனைப் பற்றிய அறிவு

யத்ததத்ரேச்யம் அக்ராஹ்யம் அகோத்ரம் அவர்ணம் அசக்ஷு: ச்ரோத்ரம் ததபாணிபாதம் ।

நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்

ததவ்யயம் யத் பூதயோனிம் பரிபச்யந்தி தீரா: ॥ 6 ॥

பொருள்:

அந்த இறைவனைப் பார்க்க முடியாது, புரிந்து கொள்ள முடியாது. அவருக்கு ஆரம்பம் கிடையாது. அவர் நிறங்கள் அற்றவர். அவருக்குக் கண்களோ காதுகளோ, கைகளோ, கால்களோ கிடையாது. அவர் என்றென்றும் இருப்பவர், எண்ணற்ற வடிவங்கள் உடையவர், எங்கும் நிறைந்தவர், மிகவும் நுண்ணியவர், அழிவற்றவர், படைப்பிற்கு மூலகாரணமானவர். விழிப்புற்றவர்கள் அவரை எங்கும் காண்கிறார்கள்.

'**அந்த இறைவனைப் பார்க்க முடியாது**' என்று முதல் வரியும், '**விழிப்புற்றவர்கள் அவரை எங்கும் காண்கிறார்கள்**' என்ற கடைசி வரியும் முன்னுக்குப் பின் முரண்பாடுபோல் ஒலிக்கின்றன.

நமது அறிவு புலன்களுக்கு உட்பட்டது. புலன்களின் மூலமே நாம் எதையும் அறிந்து கொள்கிறோம். ஆனால் இறைவன் புலன்களுக்கு அப்பாற்பட்டவர். புலன்களால் அவரைக் கிரகிக்க முடியாது. அதனால்தான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனிடம், 'உனது இந்தக் கண்ணினால் என்னைப் பார்க்க இயலாது. எனவே உனக்கு தெய்வீகக் கண்ணைத் தருகிறேன். எனது யோக சக்தி மகிமையைப் பார்' என்கிறார். அவ்வாறு தெய்வீகக் கண்ணைப் பெற்ற அர்ஜுனன் கடவுளை எங்கும் கண்டான்.

அவ்வாறு தெய்வீகக் கண்ணைப் பெற்றவர் களையே இந்த மந்திரம் '**விழிப்புற்றவர்கள்**' என்று கூறுகிறது. விழிப்புற்றவர்கள் தெய்வீகக் கண்ணைப் பெற்று, அதன் மூலம், எங்கும் இறைவனைக் காண்கின்ற அனுபவத்தைப் பெறுகிறார்கள்.

(இது ஒரு மிகச் சிறந்த ஸ்லோகம் என்று எண்ணுகிறேன். இறைவன் என்ற மூலம்தான் அழிவே இல்லாத ஒன்று. அது உடலற்ற, நிறமற்ற, வடிவமற்ற ஒருவர் என்று சொல்லும் போதே அவர் எங்கும் உள்ளார், விழிப்புற்றவர்கள் அவரை எங்கும் காண்கின்றனர் என்றும் சொல்கிறது. இந்த இடத்தில் நாம் உருவ வழிபாடு பற்றி சிந்தித்தல் நலம். வேத காலங்களில் உருவ வழிபாடு, கோயில்கள் எல்லாம் கிடையாது. அந்த முனிவர்கள், ரிஷிகள்

எல்லாம் அனுபூதி அடைந்தவர்கள். அவர்களுக்கு அந்த உருவமற்ற நிர்க்குண கடவுளை வணங்கும் முதிர்ச்சி இருந்தது. நாளாவட்டத்தில் உலகியலின் தாக்கத்தால் அது குறைந்து போக கலியுகத்தில் அர்ச்சாவதாரம் என்ற சிலை வழிபாடு உண்டாக்கப்பட்டது. இதன் மூலம் நாம் எந்தக் கடவுளை உருவ வழிபாடு செய்தாலும் அவர் ஒருவரே தான் என்ற மனப்பான்மையை, முதிர்ச்சியை நாம் பெறுதல் நலம்.)

<u>இறைவனும் படைப்பும்:</u>

யதோர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச
யதா ப்ருதிவ்யாம் ஒஷதய: ஸம்பவந்தி ।
யதா ஸத: புருஷாத் கேச லோமானி
ததாஅக்ஷராத் ஸம்பவதீஹ விச்வம் ॥ 7 ॥

<u>பொருள்:</u>

எவ்வாறு சிலந்தி தன்னிடமிருந்து வலைநூலை வெளிப்படுத்தவும் தன்னிடமே அடக்கிக் கொள்ளவும் செய்கிறதோ, எவ்வாறு பூமியிலிருந்து செடி கொடிகள் தோன்றுகின்றனவோ, வாழ்கின்ற மனிதனில் எவ்வாறு முடி

வளர்கிறதோ அவ்வாறே அழிவற்ற இறைவனிடமிருந்து இந்தப் பிரபஞ்சம் தோன்றுகிறது.

இறைவனுக்கும் படைப்புக்கும் உள்ள தொடர்பை விளக்குவதற்கு இங்கே மூன்று உவமைகள் கூறப்பட்டுள்ளன. மூன்றும் மூன்று படிகளாக அமைந்துள்ளன.

சிலந்தியும் வலைநூலும்.

சிலந்தி வலை நூலை வெளியே கொண்டு வருவது இரண்டு காரணங்களுக்காக…

1. தான் தங்குவதற்கான வலை பின்னுவதற்காக;
2. இரை பிடிப்பதற்காக. நூலை வெளியே கொண்டு வருவதற்குச் சிலந்தியின் முயற்சியும் தேவைப்படுகிறது.

அதுப்போல, இறைவனும் உலகைப் படைத்ததில் ஏதேனும் நோக்கமோ முயற்சியோ உண்டா?

இல்லை. இதனை அடுத்த உவமை விளக்குகிறது.

பூமியிலிருந்து செடிகொடிகள் இயல்பாக வளர்கின்றன. பூமிக்கென்று ஒரு நோக்கமோ முயற்சியோ இல்லை. ஆனால் பூமி ஒரு ஜடப்பொருள், அது உணர்வற்றது. இறைவனும் அப்படிப்பட்டவரா?

இல்லை. இதனை அடுத்த உவமை விளக்குகிறது.

மனிதன் உணர்வு உடையவன். அவனது உடம்பிலிருந்து முடி வளர்கிறது. அதற்கென்று அவன் எந்த முயற்சியும் செய்வதில்லை.

இதிலிருந்து மூன்று விஷயங்கள் தெளிவாகின்றன.

1 இறைவனிலிருந்தே படைப்பு தோன்றியுள்ளது, அவரிலேயே ஒடுங்கவும் செய்கிறது.

2 இறைவன் உலகைப் படிப்பதற்கென்று சொந்த நோக்கமோ முயற்சியோ இல்லை; அவரிடமிருந்து இயல்பாகவே பிரபஞ்சம் தோன்றி ஒடுங்குகிறது.

3 இறைவன் ஒரு ஜடப்பொருள் அல்ல: உணர்வுப் பொருள்.

(பலரும் இறைவனை உருவ வழிபாட்டைக் கொண்டு அவருக்கு உடல் உள்ளதாக எல்லாம் முதிர்ச்சியற்ற தன்மைகளால் கூறுகிறார்கள்! அப்படி அவருக்கு ஒரு உடல் இருப்பதாக வைத்துக் கொண்டால், பிரபஞ்சம் என்ற வெளி உருவாகும் முன்னர் அந்த உடல் எங்கு அடங்கியிருக்கும்? அதனால் அவருக்கு பருப் பொருள் தன்மை (MATERIAL NATURE) இல்லை என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். அதே நேரத்தில் பருப் பொருளும் இல்லாமல் ஜடப் பொருளும் இல்லாமல் (இங்கு பருப் பொருள் என்பது மனித உடல் என்ற பொருளிலும் ஜடப் பொருள் என்பது அசையாப்

பொருட்களான கல், மண் போன்றவற்றையும் கொள்ளல் வேண்டும்.) உள்ள இறைவனை வேறெந்த அடிப்படையில் நாம் வகைப்படுத்துவது? அதுதான் உணர்வுப் பொருள். உணர்வுப் பொருள் என்பதற்கு உருவமில்லை. அது ஒரு உணர்வு நிலை (CONSCIOUSNESS) மனித மனம் ஒரு உணர்வு நிலை. அதை இயக்கும் ஆன்மா ஒரு உணர்வு நிலை. ஆனால் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த இறைவன் பேருணர்வு நிலை (SUPREME CONSCIOUSNESS). இப்படி வகைப்படுத்தி இறைவனைப் புரிந்து கொள்ள முயன்றால் அது தியானம் பழகுகையில் பேருதவி செய்யும்.)

<u>இறைவனின் தவத்தால் தோன்றிய உலகம்:</u>

தபஸா சீயதே ப்ரஹ்ம ததோஅன்னமபிஜாயதே I

அன்னாத் ப்ராணோ மன: ஸத்யம் லோகா: கர்மஸுசாம்ருதம் II 8 II

<u>பொருள்:</u>

இறைவன் தவத்தால் வளர்கிறார். முதலில் அவரிலிருந்து தோன்றாநிலை வெளிப்பட்டது. அதிலிருந்து பிராணன், பிறகு மனம், அடிப்படை மூலங்கள், உலகங்கள், கர்மங்கள், வினைப் பயன்கள் எல்லாம் தோன்றின.

இந்தப் பிரபஞ்சம் படைக்கப்படுவதற்கு முந்தைய நிலையே தோன்றா நிலை. எல்லாம் விதையாக ஒடுங்கி இருக்கின்ற நிலை அது. அதிலிருந்தே படைப்பு தோன்றியது.

இறைவன் உலகை எப்படிப் படைத்தார்?

**தவத்தின் மூலம்.**

தவத்தைப் பற்றிய அடிப்படைக் கோட்பாடு ஒன்றை இங்கே காண்கிறோம். செய்கின்ற தவம் எதுவானாலும் அது ஒருவனை வளரச் செய்வதாக இருக்க வேண்டும்.

அதாவது ஒருவன் வளர்வதற்கான ஆற்றலைத் தர வேண்டும். இது முதல் நிபந்தனை.

அடுத்தது, தவம் மகிழ்ச்சியைத் தருவதாக இருக்க வேண்டும். இதனை ஸ்ரீசங்கரர், '**எவ்வாறு ஒரு விதை முளையை வெளிப்படுத்துகிறதோ, எவ்வாறு ஒரு தந்தை மகிழ்ச்சியுடன் ஒரு மகனை உருவாக்குகிறானோ அவ்வாறு இறைவன் (தம்மிலிருந்து பிரபஞ்சத்தை வெளிப்படுத்துவதற்காக) வளர்ந்தார்**' என்று எழுதுகிறார்.

எனவே ஆற்றல், மகிழ்ச்சி ஆகிய இரண்டையும் தருவதாக தவம் அமைய வேண்டும்.

பாரதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்று இங்கே கூறப்படுகிறது.

சிவபெருமானைக் கணவனாக அடைய எண்ணிய பார்வதி தவம் செய்தாள்.

அவரைப் பெற்றாள்.

மந்திரபூர்வமான ஆயுதங்களைப் பெற விரும்பிய அர்ஜுனன் தவத்தின் மூலமே அவற்றைப் பெற்றான். எந்த உயரிய முயற்சிக்கும் தவம் அடிப்படையாகிறது. தவத்தின் மூலம் செய்யப்படுகின்ற முயற்சிகளே அரியனவற்றைச் சாதிக்கிறது. தவம் பற்றிக் கீதை விரிவாக ஆராய்கிறது.

## <u>இறைவனின் தவம் என்றால்:</u>

(இறைவன் தவம் செய்து வளர்ந்தார் அதன் மூலம் பிரபஞ்சம் உருவானது போன்ற சென்ற கருத்தை விளக்கும் வகையில் கொஞ்சம் சுதந்திரம் எடுத்துக் கொண்டு உபநிஷத்தை தாண்டி சிறிய விளக்கத்தை தர விழைகிறேன்.

**தவம் என்றால் என்ன?**

**தியானம் என்றால் என்ன?**

நம் கணக்கில் அனேகமாக பண்டைக் காலத்தில் காடுகளில் ரிஷிகள், முனிவர்கள் இறைவனை ஏதேனும் நோக்கத்துக்காக எண்ணி இயற்றுவது தவம் (PENACE). இன்னும் யோக சாத்திரத்தின் அடிப்படையில் செய்யக் கூடியதை, நம் போல சாதாரண மனிதர்கள் தினமும் ஒரு

குறிப்பிட்ட நேரம் செய்யக் கூடிய கண்மூடி மௌனமாக இறைவனை துதிக்கும் முறையை, அல்லது ஓங்காரம் ஜெபிக்கும் முறையை தியானம் (MEDITATION) என்று கொள்வோம்.

இதையும் தாண்டிய விளக்கம் ஒன்றும் உண்டு!

சாந்தோக்ய உபநிஷதம் தியானம் செய்யுங்கள் என்கிறது!! சரி அப்படியானால் தனிமையில் அமர்ந்து தியானம் செய்வதா என்றால் அது இல்லை!

அந்த உபநிஷதக் கருத்தின் மையம் இறைவனைப் பற்றி சிந்திப்பதே தியானம் என்கிறது.

இறைவனைப் பற்றிய பேச்சுக்கள் கேட்டல், நூல்கள் படித்தல், சத்சங்கத்தில் ஈடுபடுதல், இன்னும் இறைவன் தொடர்பாக தினம் கொஞ்சம் நேரம் யோசிப்பது இவையெல்லாம் கூட ஒரு வகையில் தியானம் தான்!

அப்படிப் பார்த்தால் சிந்தனை கூட ஒரு வகைத் தியானமே! இன்னும் ஏகாக்கிரக சிந்தனை அதாவது எப்போதுமே அதே சிந்தனையாக உள்ளதை தவம் என்றும் கொள்ளலாம்.

இந்த அடிப்படையில் பரம்பொருள் குறித்து எப்போதோ நான் படித்த ஒரு வர்ணனையை கூற விழைகிறேன்!

அது ஒரு இருட்டான கானகம்! அல்ல அல்ல, கானகம் எதுவுமே அப்போது உருவாகவில்லை! ஆனால் இது ஒரு உருவகம் மட்டுமே.

இருள் சூழ்ந்த வெளி என்று கொள்ளலாமா? அல்ல வெளியும் கூட அப்போது உருவாகவில்லையே! சரி அப்படியானால் அதை எப்படித்தான் சொல்ல?

அது ஒரு மனவெளி என்று கொள்வோம்! அதாவது மனம் அப்படி ஒரு இருட்டான கானகத்தில் இருள் சூழ்ந்த இடத்தில் இருப்பதாக எண்ணிக் கொள்கிறது!!

அங்கு அவன் நின்றிருந்தான்; தனியாக நின்றிருந்தான்! அவன் அங்கு தான் தனியாக இருப்பதை உணர்ந்தான்; காலங்களை எல்லாம் தாண்டி தான் தனியாக நிற்பதை அவன் உணர்ந்தான்!

காலங்களை எல்லாம் தாண்டி என்று சொல்ல இயலுமா?

இயலாது;

ஏனென்றால் காலம் என்ற ஒன்றே அப்போது இல்லையே!!

அப்படியானால் வேறென்ன சொல்ல?

சரி அவன் எப்போதும் இருந்தான் என்று சொல்லலாமா?

ஆம் எப்போதுமே தனியாக இருந்தான்.

அவன் பெயர் 'புருஷன்'

அவன் அந்தக் கானகத்தில் ஒரு பெரும் மிருகம் போல தனியாக நின்று கொண்டிருந்தான். பெரும் மிருகம் போல என்ற உருவம் அவனுக்கு பொருந்துமா?

அல்ல பொருந்தாது!

ஆனால் அது அவன் உணர்வு நிலைக்கு பொருந்தும்!!

அந்தப் பெரும் மிருகம் தன் தனிமையை உணர்ந்தது.

தன் தனிமையைப் பற்றி அது துக்கப்பட்டது!

தன் தனிமை நீங்க வேண்டுமென்று எண்ணியது.

தான் விரிய வேண்டும் என்று சிந்தித்தது.

அது எப்போதும் அதையே சிந்திக்க அது கொஞ்சம் கொஞ்சமாக விரிய ஆரம்பித்தது. அதனிடம் இருந்து பிரஜாபதிகள் வெளிப்பட்டனர்.

பஞ்ச பூதங்கள் அதனிடம் இருந்து விரிந்தன.

இந்திரன் வெளிப்பட்டான்.

வெளி உண்டானது. நீர் உண்டானது. நீரிலிருந்து நிலம் உண்டானது. அவன் மூச்சிலிருந்து காற்று உண்டானது. அவன் கண்களில் இருந்து சூரியனும் நாபியிலிருந்து வெளியும் உண்டானது. அவன் விரிய விரிய மகாப் பிரபஞ்சம் விரிந்தது.

அந்த பிரஜாபதிகளும், இந்திரனும் சேர்ந்து தங்கள் சக்திகளைப் பெற அந்தப் புருஷனை பலி கொடுக்கும் மிருகமாக

வைத்து ஒரு யாகத்தை செய்தனர். இதன் தொடர்ச்சியான பகுதிகள் புருஷ சூக்தத்தின் வர்ணனையை ஒத்தவை.

அதன் தொடர்ச்சியாகவே மீன்கள், ஒரு வரிசைப் பற்களுள்ள மிருகங்கள், கடைவாய்ப் பற்கள் உள்ள மிருகங்கள், பசுக்கள், மனித இனம் போன்றவை படைக்கப்பட்டதாக அந்த வர்ணனைகள் இன்னும் தொடர்ந்து வரும்.

இந்த வர்ணனையை இங்கு கூறும் காரணம் இறைவன் தவம் செய்வது என்பது இறைவனின் தியானம் அல்லது சிந்தனை என்றும் கொள்ளலாம் என்பதை எடுத்துக் கூறவே!!)

## <u>இறைவனின் தவம் எத்தகையது?</u>

இறைவன் தவத்தால் உலகைப் படைத்தார். அது எத்தகைய தவம்?

ய: சர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்ய ஜ்ஞானமயம் தப: ।

தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாம ரூபமன்னம் ச ஜாயதே ॥ 9 ॥

பொருள்:

இறைவன் அனைத்தும் அறிந்தவர், அனைவரையும் தெரிந்தவர். அவரது தவம் ஞானமயமானது. அவரிலிருந்தே பிரம்ம தேவரும் பெயர்களும் உருவங்களும் உணவும் தோன்றின.

பொதுவாக தவம் என்றால் முயற்சியும் நோக்கமும் உடையது.

அதாவது ஒரு லட்சியத்தை அடைவதற்காக குறிப்பிட்ட பயிற்சிகளை செய்கிறோம்.

ஆனால் இறைவன் உலகைப் படைத்ததற்கு எந்த முயற்சியோ நோக்கமோ இல்லை என்பதை 6– ஆம் மந்திர விளக்கவுரையில் கண்டோம்.

எனவே இறைவனின் தவம் வேறுபட்டது.

அதனை '**ஞானமயமானது**' என்கிறது இந்த மந்திரம்.

இறைவன் உலகைப் படைத்தார், காக்கிறார், ஒடுக்குகிறார், ஆனால் இவை எவற்றையும் சொந்த நோக்கத்திற்காக, சுய லாபத்திற்காக அவர் செய்யவில்லை.

தெளிவாகச் சொல்வதானால், இறைவன் பற்றின்றி செயல்படுகிறார்.

இதனையே ஸ்ரீகிருஷ்ணர், '**செயல்கள் என் மீது ஆதிக்கம் செலுத்துவதில்லை. வினைப்பயனிலும் எனக்கு ஆசையில்லை**' என்கிறார்!

ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மஃ பலே ஸ்ப்ருஹா – கீதை 4.14.

இவ்வாறு இறைவன் பற்றின்றிப் படைத்து இயக்குவதாலேயே இந்த உலகம் எவ்வளவு அழகாக இருக்கிறது என்று வியக்கிறார் சுவாமி விவேகானந்தர்.

'இறைவன் தன்னை நன்றாக மறைத்துக் கொண்டிருக்கிறார்; அவரது செயல் மகோன்னதமாக இருக்கிறது என்கிறார் அவர்.

இவ்வாறு பற்றின்றி செய்யப்படும் தவம் ஞான மயமான தவம் ஆகிறது. இத்தகைய தவத்திலிருந்து உலகம் தோன்றியது.

(ஒரு வாதத்துக்கு இறைவன் தன்னை மறைத்துக் கொள்ளாமல் வெளிப்படையாக நம் போல மனிதர்கள் கண்களுக்கு தெரிவது போல தன்னுடைய செயல்களை செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது என்ன

ஆகும்? உலகம் பல விதமான மனிதர்களால் ஆனது. பல விதமான மனிதர்கள் பல விதமான செயல்களை செய்கிறார்கள்.

ஒருவன் எந்த நோக்கமுமின்றி நற்செயல்கள் புரிகிறான்; இன்னொருவன் சில நோக்கங்களுடன் அதையே செய்கிறான்.

ஒருவன் எந்த நோக்கமுமின்றி தீய செயல்கள் புரிகிறான்; இன்னொருவன் சில நோக்கங்களுடன் அதையே செய்கிறான்!

இறைவன் என்ற ஒருவன் தன்னை வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டால், மனிதனுக்கு கர்ம வினைகளின் பலன்கள் தமக்கு இறைவனால் வழங்கப்படுவது வெளிப்படையாகத் தெரிந்தால் உலகில் தீய செயல்கள் எதுவுமே நடைபெறாது!! அப்போது உலகின் இயற்கைத் தன்மை குலைந்து போகும்!

நன்மை/தீமை என்றும், நல்ல நோக்கம்/தீய நோக்கம் என்றும் இரட்டைகள் இல்லாமல் போகும்! அப்போது உலகம் இயங்காது!! அதனால்தான் இறைவன் தன்னை மறைத்துக் கொண்டிருக்கிறான்.

அதையும் தாண்டி அவனை நம்பிக்கையுடன் தியானித்து வாழும் மக்களுக்கு அவன் நன்மைகளைத் தருகிறான். இன்னும் இதையே வேறு விதமாகச் சொன்னால் இறைவன் நம்மைப் போல அன்றி வேறொரு அலைவரிசையில் இருக்கிறான்; அதனால் நம்மால் அவனை உணர

முடிவதில்லை!! நம் காதுகளுக்கு கேட்கும் குறைந்த பட்ச ஒலியாக இருபது டெசிபல்கள் என்று கொண்டால் அதை விடக் குறைந்த ஒலியை நம்மால் கேட்க இயலாது; ஆனால் சில மிருகங்கள் அதையும் விடக் குறைந்த ஒலியைக் கேட்கும்! அதே போல்தான் நமக்கு மரணத்துக்கு பின்னால் வேறொரு அலைவரிசையில் இறைவனை, அவனது பிரபாவத்தை உணரும் வாய்ப்பு உண்டாகலாம்.)

## அக்ஷர–பரா வித்யை:

முண்டக உபநிஷதத்தின் #1:1, 4, 5, 9 மந்திரங்களில் **அக்ஷர–பரா** வித்யை கூறப்படுகிறது.

வித்யைகள் இறைநெறிச் சாதனைகள்; மிகவும் தகுதி வாய்ந்தவர்களுக்கே வழங்கப்பட வேண்டியவை.

எனவே அவை ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டன.

குருவின் நேரடிப் பார்வையிலேயே சீடர்கள் இதனைப் பழகினர். காலப்போக்கில் தகுதி வாய்ந்தவர்கள் குறையைக் குறைய வித்யைகள் பற்றிய அறிவும் இன்று ஏறக்குறைய மறைந்தே விட்டன.

அக்ஷர–பரா வித்யையின் முதற்பகுதி (#4, 5) அறிவு பற்றிப் பேசுகின்றன. இதில் சாதாரண அறிவும், ஆன்மீக அறிவும் அடங்கும்.

சாதாரண அறிவில் வானவியல், ஜோதிடம் போன்ற உலகியல் அறிவும் அடங்குகிறது என்பது கருத்தில் கொள்ள வேண்டியதாகும்.

அதாவது உலகியல் அறிவு சம்பந்தப்பட்டவையும் ஒரு வித்யையாகச் செய்யப்பட்டன. 'இந்த வித்யைகளில் சில செல்வத்திற்காகவும், சில முக்திக்காகவும், சில செயல்திறனுக்காகவும் செய்யப்படுகின்றன என்று எழுதுகிறார் ஸ்ரீசங்கரர்.

இந்திய மனத்தின் ஓர் அடிப்படைப் பண்பை இங்கு நாம் காண்கிறோம். உலகியல் தேவைகளுக்கும் அகத்தையே நாடியது இந்திய மனம். அன்னியர்கள் பேராசை கொண்டு, படையுடன் வரும் அளவிற்கு நமது நாட்டில் செல்வவளம் கொழித்ததற்கு மூலகாரணமாக இருந்தது இத்தகைய அக நாட்டம்தான். இத்தகைய வித்யைகளின் மூலம்தான் விஞ்ஞானம், மருத்துவம், வானவியல், ஜோதிடம் என்று உலகியல் துறைகளிலும் அரிய சாதனைகளை நிகழ்த்தியது நம் நாடு.

நம்மில் உறங்கிக் கிடைக்கின்ற ஆன்மா, அக நாட்டத்தின் மூலம் விழித்தெழும்போது ஆன்மீகத்தில்

உச்சங்களை அடையலாம் என்பது போலவே உலகியலிலும் அரியவற்றை சாதிக்கலாம்.

இதையே சுவாமி விவேகானந்தர், 'வலிமையானவர்–வலிமையற்றவர், உயர்ந்தவர் – தாழ்ந்தவர் என்று ஒவ்வொருவரின் உள்ளேயும் அந்த ஆன்மா உள்ளது;

மகத்தானவர்களாக, மேலோர்களாக ஒவ்வொரு வரும் மாறுவதற்கான எல்லையற்ற வாய்ப்பும் எல்லையற்ற ஆற்றலும் அந்த ஆன்மாவில் உள்ளது. உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள், அது எவ்வாறு விழித்தெழுகிறது என்பதைப் பாருங்கள்.

உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுணர்வில் (SELF–CONSCIOUS) ஈடுபடுமானால் சக்தி வரும், எவையெல்லாம் மேலானதோ அவை அத்தனையும் வரும்' என்று கூறுகிறார்.

அக்ஷர–பரா வித்யை என்பது செல்வத்தையும் செயல்திறனையும் ஆன்ம சக்தியின் வாயிலாக, இறையருளின் வாயிலாகப் பெறுவதற்கான வித்யையாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் உலகியல் அறிவு பற்றியும் (#4, 5) கடவுள் பற்றியும் (#9) இதில் சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு **முண்டக உபநிஷதத்தின்** முதல் பகுதியில் **முதல் அத்தியாயம்** நிறைவுறுகிறது.

# முதல் பகுதி

## அத்தியாயம் – 2

### போகமும் துறவும்:

உலகம் சம்பந்தமானது சாதாரண அறிவு, கடவுளைப் பற்றியது உயர் அறிவு என்று முந்தின அத்தியாயத்தில் கண்டோம்.

சாதாரண அறிவின் துறைகள் எண்ணற்றவை. அவற்றை வளர்ப்பதற்கு இன்று எத்தனையோ எந்திரங்களும் பிறவும் உள்ளன. ஆனால் அன்று இருந்தவை கர்மங்கள், யாகங்கள், பல்வேறு சடங்குகள், வித்யைகள் போன்றவை. '**செல்வ வளத்திற்கும் செயல்திறனுக்கும்**' வித்யைகள் பயன்பட்டது பற்றி ஏற்கெனவே கண்டோம். 'இந்த உலகில் சிறப்பாக வாழ வழி இதுவே' என்று இந்த அத்தியாயம் தொடங்குகிறது. இந்த வித்யைகள், கர்மங்கள் போன்றவற்றின் மூலம் வாழ்க்கை வளத்தைப் பெருக்கி நன்றாக வாழலாம் என்பதை 1–6 வரையுள்ள மந்திரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வது மட்டும் மனிதனின் நோக்கமாக இருக்க முடியாது. ஏனெனில் எந்த வாழ்க்கையானாலும் ஒரு முடிவுக்கு வந்தே தீரும். மரணத்தை யாரும் தடுக்க முடியாது. எனவே அதற்கு முன் '**மரணமற்ற அமர**

**வாழ்க்கை அடையுங்கள்'** என்று உபநிஷதங்கள் அழைக்கின்றன. அமர வாழ்வு வேண்டுமானால் உலகின் சுகபோகங்களை விட வேண்டும். இதுவே துறவு. இந்தத் துறவு, அதன் அடிப்படை நியதிகள் பற்றி 7–13 மந்திரங்கள் தெரிவிக்கின்றன.

<u>சிறப்பாக வாழ வழி</u>

தததேத் ஸத்யம்

மந்த்ரேஷு கர்மாணி கவயோ யான்யபச்யம்–

ஸ்தானி த்ரேதாயாம் பஹுதா ஸந்ததானி ।

தான்யாசரத நியதம் ஸத்யகாமா

ஏஷ வ: பந்தா: ஸுக்ருதஸ்ய லோகே ॥ 1 ॥

<u>பொருள்:</u>

மந்திரங்களில் முனிவர்கள் கண்டறிந்த பல்வேறு கர்மங்கள் உண்மையானவை. அவை மூன்று வேதங்களில் மிகவும் புகழப்பட்டுள்ளன. உண்மையை நாடுபவர்கள் அவற்றை எப்போதும் செய்ய வேண்டும். இந்த உலகில் சிறப்பாக வாழ வழி இதுவே.

வேதங்களில் கூறப்பட்டுள்ள மந்திரங்களும், யாகங்களும் மற்ற கர்மங்களும் உண்மையானவை. அக உலகுடன் கொண்ட தொடர்பால் முனிவர்கள் அனுபூதியில் பெற்ற உண்மைகள் அவை. எனவே அவற்றைப் பின்பற்றுவது இன்றியமையாதது. வேதங்களில் கூறப்பட்டுள்ள சில சடங்குகள் இந்தக் காலத்தில் சுலபமாக செய்யத் தக்கவையாக இல்லாமல் போகலாம்.

ஆனால் அதற்காக நாம் அவற்றைச் செய்யாமல் விடக் கூடாது. அவற்றைக் காலத்திற்கு ஏற்ப எப்படிச் செய்வது என்பதை நமக்குக் காட்டவே அவதார புருஷர்கள் தோன்றுகின்றனர்.

அவர்கள் காலத்தையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு அந்தச் சடங்குகளில் தேவையான மாற்றங்களைச் செய்து நமக்குத் தருகின்றனர்.

அவற்றை நாம் பின்பற்ற வேண்டும். மந்திரங்கள், கர்மங்கள், யாக யஜ்ஞங்கள் போன்றவற்றின் துணையால் உலகில் ஒரு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்பதே இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டியது.

ரிக், யஜுர், சாம வேதங்கள் இங்கே மூன்று வேதங்களாகக் கூறப்பட்டுள்ளன. அதர்வண வேதம் காலத்தால் பிந்தியது என்று கருதப்படுகிறது.

<u>யாகம்: ஒரு காட்சி</u>

யதா லேலாயதே ஹ்யர்ச்சி: ஸமித்தே ஹவ்யவாஹனே ।

ததா அஜ்யபாகௌ அந்தரேணாஅஹூதீ: ப்ரதிபாதயேத் ॥ 2 ॥

<u>பொருள்:</u>

ஜொலித்துக் கொண்டிருக்கின்ற அக்கினியில் தீச்சுவாலைகள் ஓங்கி எழும்போது இரண்டு பக்கங்களுக்கு நடுவில் ஆஹுதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

யாகங்கள் வேத காலத்தில் முக்கிய வழிபாட்டு முறையாக இருந்தன, மந்திரபூர்வமாக வளர்க்கப்பட்ட அக்கினியில் மந்திரபூர்வமாக அளிக்கப்படுகின்ற பொருட்கள் உரிய தேவர்களை அடையும் என்று நம்பப்பட்டது. சுவாலைகளுடன் நெருப்பு ஓங்கி எரியும் போது அதில் நெய், நைவேத்தியம் போன்ற ஆஹுதிப் பொருட்களை இட வேண்டும். சுவாலைகள் அடங்கிய பிறகு எதையும் சமர்ப்பிக்கக் கூடாது.

ஆஹுதிகளை எங்கே சமர்ப்பிப்பது?

ஓங்கி எரியும் அக்கினியின் இடது மற்றும் வலது பாகங்களுக்கு நடுவில் சமர்ப்பிக்க வேண்டும். இது ஆவாப ஸ்தானம் எனப்படும்.

## <u>அக்னி ஹோத்ரம்</u>

யஸ்யாக்னிஹோத்ரம் அதர்சம் அபௌர்ணமாஸம்
அசாதுர்மாஸ்யம் அனாக்ரயணம் அதிதிவர்ஜிதம் ச ।
அஹுதம் அவைச்வதேவம் அவிதினா ஹுதம்
ஆஸப்தமாம்ஸ்தஸ்ய லோகான் ஹினஸ்தி ॥ 3 ॥

<u>பொருள்:</u>

தர்சம், பூர்ணமாசம், சாதுர்மாஸ்யம், ஆக்கிரயணம், வைசுவ தேவர் கர்மம் ஆகிய கர்மங்கள் இல்லாமலும், விருந்தினரை அழைக்காமலும், உரிய முறையில் அல்லாமலும் ஒருவன் அக்னி ஹோத்ரம் செய்தால் அவனுக்கு ஏழு உலகங்களிலும் அழிவே மிஞ்சுகிறது.

**தர்சம்:** அமாவாசையின் மறுநாள் செய்ய வேண்டிய யாகம்.

**பூர்ணமாசம்:** பௌர்ணமியின் மறு நாள் செய்ய வேண்டிய யாகம்.

**சாதுர்மாஸ்யம்:** ஒவ்வொரு பருவ காலம் தொடங்கும் போதும், அதாவது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை செய்யப்படுகின்ற யாகம். ஆனி, ஐப்பசி, மாசி மாத ஆரம்பங்களில் இந்த யாகம் செய்யப்படுகிறது.

**ஆக்கிரயணம்:** அறுவடைக் காலத்தில் செய்ய வேண்டிய யாகம்.

**வைசுவ தேவம்:** பறவை, மிருகம் முதலான உயிரனங்களுக்கு உணவளித்தல் இந்த யாகத்தின் ஓர் அங்கமாகும்.

அக்னி ஹோத்ரத்தை மேற்கண்ட யாகங்களுடனும் நியதிகளுடனும் செய்யாதவனுடைய ஏழு உலகங்கள் அழிகின்றன. பூலோகம், புவர் லோகம், சொர்க்க லோகம், மகர லோகம், ஜன லோகம், தப லோகம், சத்திய லோகம் என்பவை ஏழு உலகங்கள்.

கர்மங்களை உரிய முறைப்படி செய்யும்போது, அந்தந்தக் கர்மங்களின் பலனாக இந்த உலகங்களில் வாழ்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. கர்மங்களை உரிய முறைப்படி செய்யாத போது அவற்றில் வாழும் பேற்றை ஒருவன் இழக்கிறான்.

**<u>அக்கினியின் ஏழு பண்புகள்:</u>**

யாக குண்டத்தில் அக்கினியின் செந்நாக்குகள் கனன்றெழுந்து ஓங்கி எரியும் காட்சியை #1.2:2 இல் கண்டோம். இங்கே அந்த அக்கினியின் அழகு கூறப்படுகிறது.

காளீ கராளீ ச மனோஜவா ச
ஸுலோஹிதா யா ச ஸுதூம்ரவர்ணா ।
ஸ்ஃபுலிங்கினீ விச்வருசி ச தேவீ
லேலாயமானா இதி ஸப்தஜிஹ்வா: ॥ 4 ॥

<u>பொருள்:</u>

காளீ, கராளீ, மனோஜவா, சுலோஹிதா, சுதூம்ரவர்ணா, ஸ்ஃபுலிங்கினீ, விச்வருசி ஆகிய ஏழும் ஓங்கி எழுந்து பிரகாசத்துடன் எரிகின்ற அக்கினியின் ஏழு நாக்குகள் ஆகும்.

அக்கினிக்கு ஏழு நாக்குகள். இவை உண்மையில் அக்கினியின் ஏழு பண்புகள். காளீ = கருப்பு; கராளீ = பயங்கரம்; மனோஜவா = மனத்தைப் போல் வேகமானது; சுலோஹிதா = சிவப்பு; சதூம்ரவர்ணா = புகையுடன் கூடியது; ஸ்புலிங்கினீ = நெருப்புப் பொறிகளுடன் கூடியது; விச்வருசி தேவீ = அழகுடன் எங்கும் பரவுகின்ற ஒளி.
கருப்பும் சிவப்புமாகிய நிறத்தில், புகையுடனும் நெருப்புப் பொறிகளுடனும், பயங்கரமாக எழுந்து, அழகுடன் ஓங்கி வளர்ந்து, மனத்தைப் போல் வேகமாக எங்கும் பரவக் கூடிய அக்கினியின் அழகு இங்கே கூறப்படுகிறது.

(இந்த அளவுக்கு வேத காலங்களில் அக்கினி போற்றப்படுவதற்கு தக்க காரணங்கள் உண்டு. உலகில் விஞ்ஞான மற்றும் பொறியியல் அறிவு சாதாரணமான நிலையில் இருந்து திடீரென்று உச்சமடைந்து வளர்ந்ததற்கு ஒரு காரணத்தைக் கூறுவார்கள்.

எப்போது வட்ட வடிவம் அல்லது சக்கரம் (INVENTION OF THE WHEEL) கண்டுபிடிக்கப்பட்டதோ அப்போதிலிருந்து விஞ்ஞானம் பெரு வளர்ச்சியடைந்தது. அதைப் போலவேதான் வேத காலங்களில் அக்கினி கூறப்பட்டது. அக்கினி என்பதைப் புராதன மனிதன் முதலில் அறியாமலே இருந்தான். அதன் பின் காட்டுத் தீயில் பலர் மாண்டு போனதைப் பார்த்து பயந்தான்.

காடுகள் அல்லாத மலைப்பகுதியில், சமவெளிப் பகுதியில் வசிக்க ஆரம்பித்தான். ஆதி மனிதனின் உணவுகள் என்பது சமைக்கப்படாத உணவுதான். இன்றைய ஆராய்ச்சியாளர்கள் புலால் அல்லாது மரக்கறி உணவு சமைக்கப்படாமல் உண்பதே உடலுக்கு நல்லது என்று கூறுகிறார்கள்! ஆனால் சுவை? சமைக்காத மரக்கறி உணவுகள் மற்றும் புலால் ஆகியவற்றையே ஆதி மனிதன் முதலில் உண்டான். அதன் பின் காட்டுத்தீ அணைந்தவுடன் அங்கு செத்துக் கிடந்த மிருகங்களின் மாமிசத்தை உண்கையில் அவை சமைக்கப்பட்டு மிகப் பக்குவமாக சுவையுடன் இருப்பதைக் கண்டான்! அதன் மூலம் அக்கினியின் பயனை உணர்ந்தான்.

அதன் பிறகு காட்டுத்தீ உண்டாகும் போது அதைப் பிடித்து வைத்து சேமிக்கப் பழகினான். ஏதேனும் ஒரு இடத்தில் அக்கினி இருந்து கொண்டே இருக்கும். அதன் பின்னரே சிக்கி முக்கிக் கல்லைக் கண்டு பிடித்தான். அதன் மூலம் நெருப்பை உருவாக்கக் கற்றுக் கொண்டான். அதன் பின்னர் அவன் அறிவு முன்னேற முன்னேற அக்கினியும் சூரியனும் ஒன்று என்பதை உணர்ந்தான். அக்கினியையே கடவுளாக பண்டைய மனிதர்கள் பல நாடுகளில் வணங்கினார்கள். அதன் படியே நம் நாட்டு வேத கால மனிதர்கள் அக்கினியின் மூலம் யாகங்கள் வளர்ப்பதை கற்றுணர்ந்தனர். அதன் படி அரணிக் கட்டையைக் கடைந்து யாகத்தீயை உருவாக்கி யாகங்கள் செய்தனர். அக்கினியானது பிரபஞ்சத்தில் உள்ள எதையும் தூய்மைப் படுத்த வல்லது!)

<u>யாகங்களின் மூலம் போகங்கள்:</u>

எதேஷு யச்சரதே ப்ராஜமானேஷு
யதாகாலம் சாஹுதயோ ஹ்யாததாயன் l
தம் நயந்த்யேதா: ஸூர்யஸ்ய ரச்மயோ
யத்ர தேவானாம் பதிரேகோஅதிவாஸ: ll 5 ll

<u>பொருள்:</u>

ஒளிர்கின்ற இந்த அக்கினி நாக்குகளில் உரிய வேளையில் ஆஹுதிகளை அளித்து யார் கர்மங்கள் செய்கிறானோ, அவனை அந்த ஆஹுதிகள், சூரியனின் கிரணங்கள் போல், ஒன்றேயான தேவர்களின் தலைவர்கள் வசிக்கின்ற இடத்திற்குக் கொண்டு செல்கின்றன.

தேவர்களின் தலைவன் இந்திரன். பல்வேறு உலகங்களுக்கு செல்வதற்கான யாகங்கள் இந்திரனையும் வருணன் போன்ற மற்ற தேவர்களையும் உத்தேசித்துச் செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட தேவர்களுக்கு குறிப்பிட்ட அக்கினி நாக்குகளில் ஆஹுதிப் பொருட்களை அளிக்க வேண்டும் என்ற நியதி உள்ளது. யாகங்களில் சமர்ப்பிக்கப் படுபவற்றை அக்கினி தேவன் அந்தந்த தேவர்களிடம் கொண்டு சேர்க்கிறான்.

இதனாலேயே அக்கினி தேவன் புரோகிதன் எனப்படுகிறான்.

**அக்னிம் ஈளே புரோஹிதம் ।** – ரிக் வேதம் 1.1.1.

**'சூரியனின் கிரணங்கள் போல்'** என்கிறது மந்திரம்.

மழை பொழிவதற்கு காரணமாக இருக்கிறான் சூரியன். சூட்டினால் கடல் நீர் ஆவியாகி, மேலே சென்று மேகமாகி மழை பொழிகிறது. கடல்நீரை அப்படியே அவன் மேலே கொண்டு செல்வதில்லை. தனது கிரணங்கள் மூலம் நீரை ஆவியாக்கி மேலே கொண்டு செல்கிறான். அது போல், அக்கினி தேவனும் ஆஹுதிப் பொருட்களை அப்படியே கொண்டு செல்லாமல் சாராம்சத்தைத் தேவர்களிடம் சேர்க்கிறான்.

ஆஹுதிப் பொருட்களை மட்டுமல்ல, ஆஹுதிப் பொருட்களை அழைத்து யாகம் செய்பவனையும், உரிய காலத்தில் இந்திர லோகத்தில் சேர்க்கிறான் அக்கினி தேவன். ஆஹுதிப் பொருட்களின் சாராம்சத்தைச் சுமந்து செல்வது போல், யாகம் செய்பவன் மரணமடைந்த பிறகு, அவனது நுண்ணுடலைத் தாங்கிச் சென்று இந்திர லோகத்தில் சேர்க்கிறான் அவன்.

இந்திர லோகம் என்பது சுகபோகங்களின் எல்லை நிலமாகும். யாகங்களின் மூலம் அளவற்ற போகங்கள் அனுபவிக்கப்படுகின்றன என்பது கருத்து.

(இந்த அடிப்படையில் தான் ஹிந்து மக்கள் மரணமடைய நேர்கையில் அவர்களது பூத உடல் எரிக்கப்படுகிறது.(சிலர்

புதைப்பதும் உண்டு.). பூத உடல் சிதையில் வைக்கப்பட்டு எரியூட்டப் படுகையில் அது அக்கினிக்கு ஆஹுதியாக சமர்ப்பிக்கப்படுகிறது. அந்தப் பூத உடலின் சாராம்சம் அக்கினியால் உரிய இடத்தில் சேர்க்கப்படுகிறது. எப்படித் தங்கம் சேர்ந்த மண்ணானது பல கலங்களில் இடப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டு அதன்மூலம் தங்கம் பிரித்தெடுக்கப் படுகிறதோ அதேப்போல, இறந்த மனிதனின் பூத உடல் எரியூட்டப்பட்டு அவனுடைய ஆன்ம உடலானது 'பிரேதம்' என்ற நிலையில் பிரித்தெடுக்கப்படுகிறது என்று கொள்ளலாம். அதன் பின்னர் பல சம்ஸ்காரங்கள் மூலம் இறந்த வீட்டில் தங்கியிருக்கும் அந்தப் பிரேத உடலை அங்கிருந்து அகற்றி மேலுலகுக்கு கொண்டு செல்லும் சடங்குகள் செய்யப்படுகின்றன.)

**<u>தாங்கும் அக்கினி:</u>**

ஏஹ்யேஹீதி தமாஹுதய: ஸுவர்ச்சஸ:
ஸூர்யஸ்ய ரச்மிபிர்யஜமானம் வஹந்தி |
ப்ரியாம் வாசம் அபிவதந்த்யோ அர்ச்சயந்த்ய
ஏஷ வ: புண்ய: ஸுக்ருதோ ப்ரஹ்மலோக: || 6 ||

<u>பொருள்:</u>

ஒளிர்கின்ற அந்த ஆஹுதிகள், '**வாருங்கள் வாருங்கள்**' என்று அவனை அழைத்து, வழிபட்டு, '**இந்தச் சொர்க்கம் நீங்கள் செய்த நற்செயல்களின் பலனாக உங்களுக்குக் கிடைத்தது**' என்று இனிமையாகப் பேசி சூரியனின் கிரணங்களால் அவனைத் தாங்கிச் செல்கின்றன.

இன்ன இன்ன யாகங்களுக்கு இன்ன இன்ன உலகங்கள், இன்ன இன்ன சுகபோகங்கள் என்றெல்லாம் வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த யாகங்களைச் செய்பவனுக்கு அவை வாய்க்கின்றன. உரிமையுடன் அவன் அந்த இன்பங்களையும் சுகபோகங்களையும் அனுபவிக்கலாம். அவன் அளித்த ஆஹுதிகளே ஒளி வடிவில் அவனை வரவேற்று, இனிய மொழிகள் கூறி, உபாசரித்து அவனுக்கு அந்த இன்ப உலகங்களை அறிமுகம் செய்து வைப்பதாக கவிதை நயத்துடன் கூறுகிறது உபநிஷதம்.

சுக போகங்கள் பலவீனமான படகுகள் இவ்வுலக மறுவுலக சுகங்களுக்கென்று பல்வேறு யாகங்களைக் கூறிய உபநிஷதம், அதே மூச்சில் சுகபோகங்களின் மறுபக்கத்தைத் தெரிவிக்கிறது. 'இன்பங்கள் அனைத்தும் நிலையற்றவை. அவை மனிதனுடைய புலன்கள் அனைத்தின் ஆற்றலையும் வீணாக்குகின்றன. வாழ்க்கையோ குறுகியது' என்று எச்சரிக்கிறது கட உபநிஷதம்.

குறுகிய இந்த வாழ்நாளில் நாம் செய்து முடிக்க வேண்டியவை ஏராளம் உள்ளன; உடல்சுகமும் உள்ளீடற்ற போகங்களுமே எல்லாம் என்று கொண்டு, அவற்றைப் பெறுவதற்காகக் கர்மங்களையும் யாகங்களையும் நாடி வாழ்க்கையை வீணாக்கக் கூடாதென்று தொடரும் 4 மந்திரங்கள் கூறுகின்றன.

(இது ஆரம்பத்தில் படிக்கையில் முரணான கருத்து போலத் தோன்றலாம். ஆனால் இந்தக் கருத்து மிகச் சரியான ஒன்று. கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்று உள்ளதல்லவா? இந்த யாகங்கள், கர்மங்கள் அனைத்துமே இல்லறத்தானுக்கு உண்டானவை. இல்லறம் ஏற்ற ஒருவன் இந்தக் கர்மங்களையும் யாகங்களையும் செய்து அதன் மூலம் மறுமையில் பல சுகங்களைத் தரும் உலகங்களை அடையலாம் என்பது யாகங்களின் பலன்கள். ஆனால் ஞான மார்க்கம் அதையும் விஞ்சியது. இல்லற வாழ்வை ஏற்காமல் பிரம்மச்சர்யத்தை ஒழுகிப் பற்றற்ற துறவியாக வாழும் ஒருவன் இவை அனைத்தையும் கடந்தவனாகிறான். அவன் தியானங்கள், தவம் போன்றவற்றின் மூலம் இதையும் தாண்டிய பிறவா நிலையை அடைகிறான் என்பதையே கட உபநிஷதம் வலியுறுத்துகிறது. ஆனால் இந்தத் தன்மை அனைவர்க்கும் வாய்ப்பதில்லை. பூர்வ ஜென்மத்தில் முமுட்சுத்துவத்தை அடைந்த ஒருவனுக்கு மட்டுமே இது வாய்க்கும் என்பது வெள்ளிடை).

<u>பலவீனமான படகுகள்:</u>

ப்லவா ஹ்யேதே அத்ருடா யஜ்ஞரூபா
அஷ்ட்டாதசோக்தம் அவரம் யேஷு கர்ம ।
எதச்ச்ரேயோ யேஅபினந்தந்தி மூடா
ஜரா ம்ருத்யும் தே புனரேவாபி யந்தி ॥ 7 ॥

<u>பொருள்:</u>

பதினெட்டு பேரால் செய்யப்படுகின்ற இந்த யாகங்கள் பலவீனமான படகுகளைப் போன்றவை. ஏனெனில் இவை சாதாரண கர்மங்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை மேலானதாகக் கொண்டு மகிழும் மூடர்கள் மீண்டும் மீண்டும் மூப்பிற்கும் மரணத்திற்கும் உள்ளாகிறார்கள்.

அக்னி ஹோத்ரத்தை செய்வதற்கு 18 பேர் வேண்டும் – இல்லறத்தான், அவனது மனைவி, 16 புரோகிதர்கள். இத்தகைய கர்மங்கள் பலவீனமான படகுகள். வாழ்க்கைக் கடலைக் கடக்க இவை உதவாது. இந்தக் கர்மங்கள் மேலும் மேலும் புலனின்பத்தை நாடச் செய்பவை. புலனின்பங்கள் மேலும் மேலும் நம்மை வாழ்க்கைக் கடலில் மூழ்கடிப்பவை; வாழ்க்கைக் கடலைக் கடக்கச் செய்பவை அல்ல.

அவித்யாயாமந்தரே வர்த்தமானா:
ஸ்வயம் தீரா: பண்டிதம் மன்யமானா: ।
ஜங்கன்யமானா: பரியந்தி மூடா:
அந்தேனைவ நீயமானா யதாந்தா: ॥ 8 ॥

<u>பொருள்:</u>

உலகியலின் நடுவில் வாழ்கின்ற மூடர்கள் தங்களை அறிவாளிகள் என்றும் பண்டிதர்கள் என்றும் கருதி, மூப்பு, மரணம் ஆகியவற்றின் வசப்பட்டு உழல்கிறார்கள். குருடனால் வழிகாட்டப்பட்ட குருடர்களைப் போல் இவர்கள் மீண்டும் மீண்டும் பிறவிச் சுழலில் உழல்கிறார்கள்.

(உலகில் மேதாவிலாசமான மனிதராகத் தம்மைத் தாமே எண்ணிக் கொண்டு தற்பெருமை கொண்டு, தம்மைத் தாமே பெரிய பண்டிதராக எண்ணிக் கொண்டும், தம்மை முகத்துக்கு நேராகப் புகழும் புகழ்ச்சியைக் கேட்டுக் களிப்படையும் மனிதர்களையும் ஒரே அடியில் வீழ்த்துகின்றன இந்த ஸ்லோகங்கள். குருடனால் வழிகாட்டப்பட்ட குருடர்களின் நிலை என்னவாகும்? அதே போல்தான் இந்தப் பண்டிதர்களால் வழிகாட்டப்பட்ட மக்களும் இருப்பார்கள். இன்னும் இது போல சடங்குகள் எல்லாமே கர்மயோகம் மற்றும் இல்லறத்தானின் பாற்பட்டது என்பதும் ஞானயோகம் என்பது இதனையெல்லாம் கடந்து விஞ்சி நிற்பது என்பதை இந்த ஸ்லோகங்கள் தெளிவுபடுத்துகின்றன.)

**<u>உலகியலில் உழல்கிறார்கள்:</u>**

**அவித்யாயாம் பஹுதா வர்த்தமானா**
**வயம் க்ருதார்த்தா இத்யபிமன்யந்தி பாலா: ||**
**யத் கர்மிணோ ந பிரவேதயந்தி ராகாத்**
**தேனாதுரா: க்ஷீணலோகாத் ச்யவந்தே || ௯ ||**

<u>பொருள்:</u>

பக்குவமற்ற அவர்கள் உலகியலில் பலவிதமாக உழல்கிறார்கள். தாங்கள் லட்சியத்தை அடைந்து விட்டதாக நினைக்கின்ற அவர்கள் உண்மையை அறிவதில்லை. அவர்கள் பற்றுடன் கர்மம் செய்பவர்கள். எனவே துயருற்று, புண்ணியம் தீர்ந்ததும் சொர்க்கத்திலிருந்து கீழே வீழ்கிறார்கள்.

**இஷ்ட்டாபூர்த்தம் மன்யமானா வரிஷ்ட்டம்**
**நான்யச்ச்ரேயோ வேதயந்தே ப்ரமூடா: ||**
**நாகஸ்ய ப்ருஷ்ட்டேதே ஸுக்ருதேஅனுபூத்வா**
**இமம் லோகம் ஹீனதரம் வா விசந்தி || 10 ||**

<u>பொருள்:</u>

இந்த வடிகட்டின முட்டாள்கள் யாகங்களும் நற்பணிகளுமே எல்லாம் என்று நினைக்கிறார்கள். அதற்கு மேலான எதையும் அவர்கள் அறிவதில்லை. சொர்க்க லோகங்களில் புண்ணிய பலனை அனுபவித்த பிறகு அவர்கள் இந்தப் பூமியையோ அதை விட இழிந்த உலகங்களையோ அடைகிறார்கள்.

'இங்கே இரண்டு வார்த்தைகள் உள்ளன --- இஷ்டம், பூர்த்தம். யாகங்கள் போன்ற சடங்குகள் இஷ்டம். சாலைகள் அமைப்பது, மருத்துவமனைகள் கட்டுவது போன்றவை பூர்த்தம். " மதச் சடங்குகளும் நற்பணிகள் செய்வதும்தான் மிக உயர்ந்தவை, அதற்கு மேல் உயர்ந்தவை எதுவும் இல்லை என்று நினைப்பவர்கள் முட்டாள்களே." அவர்கள் விரும்புவதை அடைகிறார்கள். சொர்க்கங்களுக்கு செல்கிறார்கள். சுகபோகங்கள் ஒவ்வொன்றையும் அனுபவிக்கிறார்கள். கூடவே துக்கத்தையும் அனுபவிக்கிறார்கள். ஆனால் எதற்கும் முடிவு இருக்கத்தானே வேண்டும்! அவை முடிந்ததும் கீழே வருகிறார்கள், மனிதர்களாகப் பிறக்கிறார்கள், இன்னும் கீழான பிறவியை அடைகிறார்கள்' என்று விளக்குகிறார் சுவாமி விவேகானந்தர்.

(மனிதர்களின் பொதுவான குணாதிசயம் இங்கே வர்ணிக்கப்படுகிறது. போதுவாகவே இல்லறத்தில்

இருப்பவர்கள் இதைத்தான் செய்கிறார்கள். நல்லபடியாக குடும்பம் நடத்துவது, இல்லறத்தானுக்கு விதிக்கப்பட்ட கடமைகளை செய்வது, கர்மாக்களை குறைவற செய்வது இவற்றையே பலரும் செய்கிறார்கள். இன்னும் மிகவும் பணம் படைத்தவர்கள் பொதுநலம் சார்ந்த கோயில்களுக்கு திருப்பணி செய்தல், குளம் வெட்டுதல், அன்னதானம் செய்தல் போல பல நற்பணிகளை செய்கிறார்கள். அதைத்தான் அவர்களால் செய்யவும் முடியும்!! ஆனால் அதையும் தாண்டி ஞானத்தில் நாட்டம் உண்டாக வேண்டும் இல்லையென்றால் அவர்களுடைய செயல்களுக்கு கிடைக்கும் பலன்கள் தற்காலிகமானதாக இருக்கும் என்று சொல்கின்றன இந்த ஸ்லோகங்கள்.)

<u>துறவு:</u>

யாகங்கள் மற்றும் நற்செயல்கள் வாயிலாக நல்ல வாழ்க்கை வாழலாம் என்பதில் ஐயமில்லை. ஆனால் தீமை கலவாத நன்மை என்ற ஒன்று இல்லை. 'தீமையே சிறிதும் கலவாத நற்செயல் எதுவும் இல்லை. தீயைச் சுற்றிப் புகை இருப்பது போல் செயலைச் சுற்றித் தீமையும் இருந்தே தீரும்' என்கிறார் சுவாமி விவேகானந்தர். நன்மை வேண்டுமானால் தீமையை, இன்பம் வேண்டுமானால் துன்பத்தை, சுகம் வேண்டுமானால் துக்கத்தை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

சுகபோகங்களை நாடுபவன் வாழ்க்கை சுகத்திற்கும் துக்கத்திற்குமாக ஊசலாடுகிறது. இவை இரண்டும் கொண்டு வருகின்ற அனுபவங்கள் மீண்டும் மீண்டும் பிறவிக்கான காரணம் ஆகின்றன.

எனவேதான் சான்றோர் துறவை நாடினர். துன்பம் வேண்டாம் என்றால் அதன் இரட்டையான இன்பத்திலிருந்தும் ஒதுங்க வேண்டும். அதனால்தான் அவர்கள் சுகபோகங்களிலிருந்து ஒதுங்கி தவ வாழ்வை நாடினர்.

'**நமது உண்மையான வாழ்க்கையின் அடிப்படையே துறவுதான்**' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆனால் இந்தத் துறவு, உண்மையானதாக, இயல்பானதாக, வாழ்க்கையில் நிறைவாக இருக்க வேண்டும். போலித்தனமானதாக, வாழ்க்கையிலிருந்து விலகி ஓடும் முயற்சியாக இருக்கக் கூடாது.

சுகபோகங்களையும் இன்பங்களையும் முழுமையாக அனுபவித்து, அதன் நிறைவிலிருந்து வருகின்ற தியாகமோ துறவோதான் உண்மையானதாக இருக்கும்.

'போகமில்லாமல் தியாகம் இல்லை. முதலில் அனுபவி, பிறகு தியாகம் வரும்' என்கிறார் சுவாமி விவேகானந்தர். 'இல்லாமல், திடீரென்று ஒரு நாள் நாடு முழுவதும் சேர்ந்து துறவிகள் ஆகி விட்டால் இங்கும் இல்லை, அங்கும் இல்லை என்றாகி விடும்' என்று எச்சரிக்கிறார் அவர்.

இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காகவே உபநிஷதங்களில் சுகபோகங்களை அனுபவிப்பதற்கான பல்வேறு வழிமுறைகளைக் கூறுகின்ற பகுதிகளும் அது போலவே தியாகத்தை வலியுறுத்துகின்ற பகுதிகளும் காணப்படுகின்றன என்று கூறுகிறார் சுவாமி பூதேஷானந்தர். அதனால்தான் பல்வேறு சடங்குகளும் யாகங்களும் தேவை என்று கூறப்படுகின்ற அதே வேளையில் அவை 'பலவீனமான படகு' (#7) என்று எச்சரிப்பதையும், தவ வாழ்க்கையே உயர்ந்தது (#11) என்று கூறுவதையும் இங்கே காண்கிறோம்.

<u>**தவமே பலமான படகு:**</u>

தப: ச்ரத்தே யே ஹ்யுபவஸந்த்யரண்யே
சாந்தா வித்வாம்ஸோ பைக்ஷ்யசர்யாம் சரந்த: ।
ஸூர்யத்வாரணே தே விரஜா: ப்ரயாந்தி
யத்ராம்ருத: ஸ புருஷோ ஹி அவ்யயாத்மா ॥ 11 ॥

<u>பொருள்:</u>

புலக் கட்டுப்பாடு உடைய, அறிவொளி பெற்ற சான்றோர் பிச்சையேற்கும் வாழ்விலோ, காட்டில் சிரத்தையுடன் கூடிய தவ வாழ்க்கை வாழ்வதிலோ ஈடுபடுகிறார்கள். அவர்களின் வினைப் பயன்கள் அகல்கின்றன. அவர்கள் உத்தராயணப்

பாதை வழியாக மரணமற்ற, அழிவற்ற இறைவனை அடைகிறார்கள்.

முதல் அத்தியாயத்தில் கண்ட சாதாரண அறிவைப் பற்றியபடி உலகியல் வாழ்க்கைக்கான கர்மங்களில் ஈடுபடுபவர்கள் உலக இன்பங்களில் உழல்கிறார்கள். சாதாரண அறிவை விட்டு, உயர் அறிவை நாடுபவர்கள் இறைவனை அடைகிறார்கள்.

உத்தராயண பாதை எது?

சூரிய கிரணங்கள்.

இந்த மந்திரத்தை விளக்கும் போது, 'உலகைத் துறந்து புலன்களை அடக்கக் கற்றுக் கொண்டவர்கள் காடுகளில் வாழ்கிறார்கள். அவர்கள் இறந்ததும் சூரியக் கிரணங்களின் வழியாகக் சென்று பரம்பொருள் வாழும் உலகை அடைகிறார்கள் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

(உத்தராயண புண்ய காலம் மற்றும் தக்ஷிணாயன புண்ய காலம் என்று இரண்டு காலங்கள் கூறப்படுகின்றன. உத்தராயணப் புண்ய காலம் என்பது சூரியன் தெற்கிலிருந்து வடக்கில் பயணிக்கும் காலமாகும். இது தை மாதம் முதல் நாளிலிருந்து ஆறு மாதங்களை (தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி) கொண்ட ஒன்றாகும்.

தக்ஷிணாயன புண்ய காலம் என்பது ஆடி முதல் மார்கழி மாதம் வரையுள்ள ஆறு மாதங்களைக் கொண்டதாகும்.

இதில் உத்தராயணப் புண்ய காலத்தில் இறப்பது மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பது ஞானிகளின் வாக்கு. அவ்வாறு இறப்பது பெரும் புண்ணியத்தைக் கொடுக்கும். இந்த நேரத்தில் பீஷ்மரைப் பற்றி நினைவு கூறுவது பொருத்தமாக இருக்கும்.

அர்ஜுனனின் அம்புகளால் துளைக்கப்பட்டு அம்புப் படுக்கையில் உதிரம் சொட்டச் சொட்டப் படுத்திருந்தார் பிதாமகர் பீஷ்மர். ஆனாலும் அவர் மரணத்தை விரும்பும் நேரம்தான் இறக்க முடியும் என்ற வரத்தை பெற்றிருந்தமையால் அவர் உத்தராயண புண்ய காலம் வரும் வரை காத்திருந்து தை மாதம் முதல் நாளில் மரணத்தை ஏற்றுக் கொண்டார் என்று மகாபாரதம் கூறுகிறது.

மகாபாரதப் போர் தக்ஷிணாயன புண்ய காலமான மார்கழி மாதத்தில் நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சரி அப்படியானால் உலகிலுள்ள மனிதர்களில் உத்தராயணப் புண்ய காலத்தில் இறப்பவர்கள் அனைவரும் மோட்சத்தை அடைவார்கள் என்று கொள்ள முடியுமா? கண்டிப்பாக இல்லை!

தவ நெறியுடன் கூடிய பற்றற்ற வாழ்வை யார் வாழ்கிறார்களோ அவர்கள் உத்தராயணப் புண்ய காலத்தில் இறந்து போனால் மட்டுமே மோட்சத்தை பெற இயலும். நம் போல சாதாரண மனிதர்கள் அக்காலத்தில் இறந்து போனால் அடுத்த பிறவியில் நல்ல பிறப்பு வாய்க்கும் என்று வேண்டுமானால் கொள்ளலாம்.

பீஷ்மர் ஒரு புண்யாத்மா! இது போல ஒரு சபதத்தை உலகில் எவனும் மேற்கொள்ள இயலுமா என்று ஐயப்படும் அளவு சபதத்தை ஏற்று பிரம்மச்சாரியாகவே அரச பதவி ஏற்காமல் துறவியாக வாழ்ந்த மகான் அதனால்தான் அவர் விரும்பி உத்தராயண புண்ய காலத்தில் இறந்ததால் மோட்சத்தை அடைந்தார் என்றுதான் இதை நாம் கொள்ள வேண்டும்!)

## முதற்படிகள்:

தவ வாழ்க்கை அல்லது துறவு வாழ்க்கையின் அடிப்படைகள் பற்றி இந்த இரண்டு மந்திரங்கள் பேசுகின்றன.

பரீக்ஷ்யலோகான் கர்மசிதான் ப்ராஹ்மணோ
நிர்வேதமாயாத் நாஸ்த்யக்ருத: க்ருதேன ।
தத்விஜ்ஞானார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்
ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்ட்டம் ॥ 12 ॥

பொருள்:

சான்றோன் ஒருவன், தான் செயல்களின் பலனாகப் பெற்ற உலக அனுபவங்களை முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அதன் விளைவாக, 'கர்மங்களால் இறைவனை அடைய முடியாது, பற்றின்மையால்தான் அடைய முடியும்' என்பதை உணர்ந்து பற்றின்மை பெற வேண்டும். பிறகு, இறைவனை அறிவதற்காக, வேதங்களை உணர்ந்த இறைவனில் நிலைபெற்ற குருவையே கையில் சமித்துடன் நாட வேண்டும்.

தவ வாழ்க்கை அல்லது துறவு வாழ்க்கைக்கான ஐந்து முக்கியப் படிகளை இந்த மந்திரம் கூறுகிறது. அவை நல்லொழுக்கம், ஆராய்ச்சி, பற்றின்மை, தெளிவான நோக்கம், குருவை நாடுதல்.

(துறவு வாழ்க்கையை நாடுவது என்பது சாதாரண மனிதர்களால் அத்தனை சுலபமாக செய்யக் கூடிய செயல் அல்ல. மனதில் வைராக்கிய சிந்தனையுடன் திரும்ப உலகியலுக்கு வராத எண்ணங்களை உடையவன் மட்டுமே காவி அணிந்து தவ வாழ்வில் ஈடுபட முடியும். இது குறித்து ஒரு சிறு கதையைப் பார்க்கலாம்.

ஒரு இளைஞன் நல்ல ஒழுக்கத்துடனும், நல்ல கல்வி மற்றும் வேலையுடன் வாழ்ந்து வந்தான். சிறு வயதில் துறவு வாழ்க்கைக்கு செல்ல வேண்டும் என்ற ஆசை அவனுக்கு உண்டானது. ஆனால் அவனுக்கு வைராக்கிய உணர்வு கிடையாது. அவன் துறவு வாழ்க்கைக்கு செல்லும் எண்ணத்தை வலுப்படுத்தும் முன்னரே அவன் பெற்றோர் அவனுக்கு திருமணம் செய்யும் பொருட்டு ஏற்பாடுகளை செய்தனர்.

அவனோ இந்த நேரத்தில் எப்படி துறவு ஆசையை பெற்றோரிடம் கூறுவது என்று குழம்பி அவர்களிடம் ஒன்றும் கூறாமல் இருந்தான். ஆனாலும், துறவு சென்று விட வேண்டும் என்ற எண்ணம் மனதின் ஒரு மூலையில் இருந்தது.

அவன் பெற்றோர் அவனை அழைத்து சென்று ஒரு பெண்ணைக் காண்பித்தனர். அந்தப் பெண்ணின் அழகில் மயங்கிய இளைஞன் துறவு எண்ணத்தை ஒரு மூலையில் வைத்து விட்டு அவளை மணந்து கொண்டான்.

திருமணம் நடந்த பின் துறவு ஆசைக்கு விடை கொடுக்கவில்லை. ஒரு குழந்தை பிறக்கட்டும் அப்புறம் துறவு ஏற்போம் என்று எண்ணினான். ஆனால், அதன் பின் ஒரு ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டான்.

அதன்பின் துறவு ஏற்க நினைத்தால் சிறு குழந்தைகளை வைத்துக் கொண்டு மனைவி கஷ்டப்படுவாளே என்ற எண்ணத்தில் குழந்தைகள் பெரிதானவுடன் துறவு ஏற்போம் என்று எண்ணிக் கொண்டான். குழந்தைகள் வளர்ந்தன. மகளுக்கும், மகனுக்கும் திருமணம் செய்து விட்டான். அதன் பின் துறவு ஏற்கலாம் என்று ஒரு சிறிய எண்ணம் மனதில் இருந்தது.

ஆனால், உள்ளுக்குள் ஒரு பேரன் பேத்தியை பார்த்து விட்டு துறவு ஏற்கலாம் என்ற எண்ணம் வந்து விட்டது. சரி இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும் என்று விட்டான். அவன்

ஆசைப்படி ஒரு பேரனும், பேத்தியும் பிறந்தார்கள். அதன் பின் பேரக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டே இருந்ததில் அவனுடைய துறவு ஆசை அழிந்தே போனது.

இதனால்தான் உலகியலில் வாழ்ந்து பல அனுபவங்களைப் பெற்று அதன் பின் அவற்றை நினைத்துப் பார்த்து, பற்றுக்களைத் துறந்துதான் துறவு வழிக்கு செல்லுதல் இயலும் என்று கூறப்படுகிறது.)

**ஐந்து படிகள்:**

தவ வாழ்க்கைக்கு தேவையான ஐந்து படிகளைப் பற்றிய விளக்கம் இது.

**நல்லொழுக்கம்:**

தவ வாழ்க்கையை ஏற்பதற்கு முதலில் வேண்டியது நல்லொழுக்கத்தில் நிலை பெற்ற வாழ்வு. ஆன்மீகத்திற்கு அடிப்படை நல்லொழுக்கம். 'முதல் தேவை ஒழுக்கமான வாழ்க்கை. தெய்வங்கள் கீழே இறங்கி வர வேண்டும் என்று அத்தகையவன் விரும்பினால் அவர்கள் கீழே இறங்கி வந்து அவனுக்குக் காட்சி கொடுப்பார்கள். நமது மன நூல்கள் மற்றும் தத்துவ நூல்களின் சாரம் இதுவே' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இத்தகைய வாழ்க்கையில் நிலைபெற்றவனாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்க சான்றோன் (ப்ராஹ்மண :) என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆராய்ச்சி:**

இன்னொருவர் துறவியாக வாழ்கிறார் என்பதற்காகவோ, நூல்களில் எழுதப்பட்டுள்ளதற்காகவோ துறவு வாழ்க்கையை நாடக் கூடாது. 'உலக இன்பங்களில் நாட்டம் எனக்குத் துளிக் கூட இல்லையா?' என்பதைத் தனக்குத் தானே ஆராய வேண்டும்.

'**இல்லை**' என்பது முற்ற முடிந்த பதிலாக இருக்குமானால், இந்த உலக இன்பங்களுக்காக, சுகபோகங்களுக்காகச் செய்யப்படுகின்ற கர்மங்கள், செயல்கள் என அனைத்தையும் விட்டு விட வேண்டும்.

ஏனெனில், அவைகள் நம்மை இறைநெறியில் செலுத்தாமல் மேலும், மேலும் பந்தங்களுக்கு உள்ளாக்குகின்றன.

(உலக இன்பங்களில் நாட்டம் இல்லை என்ற நிலை ஒருவனுக்கு முற்றாக உண்டாக வேண்டும். இல்லையென்றால், ஏற்கனவே சொன்ன கதையில் வந்த மனிதன் போலாகி விடும்)

**பற்றின்மை:**

ஆனால் செயல் புரியாமலோ, கர்மங்களில் ஈடுபடாமலோ யாராலும் இருக்க முடியாது. எனவே தவிர்க்க முடியாட அவற்றைப் பற்றின்றிச் செய்ய வேண்டும்.

**தெளிவான நோக்கம்:**

தவ வாழ்க்கை வாழ்வதும், துறவை நாடுவதும் '**இறைவனை அறிவதற்காக**' என்ற நோக்கம் எப்போதும் மனத்தில் தெளிவாக இருக்க வேண்டும். இந்த நோக்கமின்றி தவங்களில் ஈடுபடுபவர்கள் அசுர இயல்பினர் என்று கீதை பாகுபடுத்துகிறது. எந்தச் செயலில் ஈடுபடும் போதும், அது இறைவனுக்காக, இறைவனை அறிவதற்காக என்ற நோக்கம் மனத்தில் பின்னணியில் தெளிவாக இருக்க வேண்டும்.

<u>குருவை நாடுதல்:</u>

பொதுவாக, துறவு வாழ்க்கையை நாடுபவனுக்கு ஐந்து படிகளின் கடைசி படியை காண்போம்.

**குருவை நாடுதல்:**

'ஆன்மீக வளர்ச்சிக்கு, நூல்களிலிருந்து அனேகமாக ஒன்றுமே பெற முடியாது. நூல்களைப் படிக்கும் போது, சில வேளைகளில், நம் ஆன்மீக வளர்ச்சிக்கு ஏதோ உதவி

கிடைப்பது போன்றதொரு மனமயக்கம் ஏற்படுகிறது. ஆராய்ந்து பார்த்தால் நம் அறிவுக்கு உதவி கிடைத்ததே தவிர ஆன்மாவிற்கு அல்ல என்பது தெரிய வரும்.

நமக்குத் தேவைப்படும் தூண்டுதலை நூல்கள் தர முடியாது. ஆன்ம வளர்ச்சிக்கான தூண்டுதல் இன்னொருவரிடமிருந்துதான் வர வேண்டும். அவ்வாறு யாரிடமிருந்து இந்தத் தூண்டுதல் வருகிறதோ அவரே குரு' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

குரு இறையனுபூதி பெற்றவராக, இறைவனில் நிலைபெற்றவராக இருக்க வேண்டும். அத்தகைய ஒருவரிடமிருந்து மட்டுமே இறைவனை அறிவதற்கான தூண்டுதலை மற்றவர்கள் பெற முடியும் என்று இந்த மந்திரம் சுட்டிக் காட்டுவதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இறைவனில் நிலைபெற்ற ஒருவரிடமிருந்து அந்தத் தூண்டுதலை எப்பைப் பெறுவது? அவருக்குச் சேவைகள் செய்வதன் மூலம், 'வணங்கியும், கேள்விகள் கேட்டும், பணிவிடை செய்தும்' அவற்றைப் பெற வேண்டும் என்று கீதை கூறுகிறது.

வேத காலத்தில் யாகங்கள் முக்கியமான வழிபாட்டு முறையாக இருந்தன. எனவே அதற்குத் தேவையான விறகைத் (சமித்) தட்சிணையாக மாணவர்கள் கொண்டு சென்றனர். சமித்தைக் கொண்டு செல்வது மாணவனின் எளிமையையும் பணிவையும் காட்டுகிறது.

**தஸ்மை ஸ வித்வானுபஸன்னாய ஸம்யக்**
**ப்ரசாந்த சித்தாய சமான்விதாய |**
**யேனாக்ஷரம் புருஷம் வேத சத்யம்**
**ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம் || 13 ||**

<u>பொருள்:</u>

நன்றாக அமைதியுற்ற மனமும், புலக்கட்டுப்பாடும் உடைய மாணவன் குருவை அணுகும் போது, அழிவற்ற, உண்மை வடிவான இறைவனை அறிவதற்கான இறைநெறியை அவன் புரிந்து கொள்ளும் வகையில் குரு உபதேசிக்க வேண்டும்.

இத்துடன் முண்டக உபநிஷதம் முதலாம் பகுதியின் **இரண்டாம் அத்தியாயம்** நிறைவு பெறுகிறது.

# இரண்டாம் பகுதி

## <u>அத்தியாயம் – 1</u>

## ஜோதியும் சுடரும்:

முண்டக உபநிஷதத்தின் **இரண்டாம் பகுதியின் முதல் அத்தியாயம்** இங்கே ஆரம்பிக்கிறது. ஆழ்ந்த சிந்தனைக்குரிய பகுதி இது.

இந்த அத்தியாயத்தில் ஆழ்ந்த சிந்தனை பற்றிக் கூறப்படுகிறது. அடுத்த அத்தியாயத்தில் காணப்போகின்ற தியான முறைகளுக்கு இந்த ஆழ்ந்த சிந்தனை ஒரு சிறந்த அடித்தளமாக அமைகிறது.

அது என்ன சிந்தனை?

நாம் தெய்வீகமானவர்கள் என்ற சிந்தனைதான் அது.

**சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:**

'விதி என்ற எதுவும் கிடையாது. நமது வாழ்க்கை நமது முன்வினைப் பயனின், நமது கர்மத்தின் விளைவு.

இவ்வாறு நாமே நமது கர்மத்தை உருவாக்கி இருக்கிறோம் என்றால், அதை அழிக்கவும் நம்மால் முடியும் என்பது உண்மைதானே?

'வண்ணத்துப் புழு தன் உடலிலிருந்து சுரக்கின்ற பொருளால் தன்னைச் சுற்றித் தானே கூடமைத்துக் கொண்டு, அதில், தானே சிறைப்படுகிறது. அங்கே கிடந்தவாறு அது அழலாம், கதறலாம், ஓலமிடலாம்.

ஆனால், அதன் உதவிக்கு யாரும் வர மாட்டார்கள். இறுதியில் அதுவே தன் நிலை உணர்ந்து **ஞானம்** பெறுகிறது. அதனால், அது அழகிய வண்ணத்துப் பூச்சியாக வெளிவருகிறது.

நமது தளைகளைப் பொருத்தவரையிலும் இதே விஷயம்தான். யுகயுகங்களாக நாமும் பிறப்பு இறப்பு என்று சுழன்று வருகிறோம். இப்போது துன்பத்தை உணர்கிறோம், நாம் கட்டுண்டிருப்பதை எண்ணி அழுது புரள்கிறோம். ஆனால் அழுவதாலும், புரள்வதாலும் ஒரு பயனும் உண்டாகப் போவது இல்லை. இந்தத் தளைகளை உடைப்பதில்தான் நாம் முனைந்து ஈடுபட வேண்டும்.

'எல்லாத் தளைகளுக்கும் மிக முக்கியக் காரணம் நம்முடைய அறியாமை மட்டும்தான்.

மனிதன் இயல்பிலேயே கொடியவன் அல்ல, ஒரு போதும் அல்ல. அவன் இயல்பிலேயே தூயவன், முற்றிலும் புனிதமானவன். ஒவ்வொரு மனிதனும் தெய்வீகமானவன்.

நீ காண்கின்ற ஒவ்வொரு மனிதனும் இயல்பிலேயே கடவுள்தான். இந்த இயல்பு அறியாமையால் மறைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறியாமையே நம்மைக் கட்டுண்டவர்களாக ஆக்கி இருக்கிறது.

எல்லாத் துன்பங்களுக்கும் அறியாமையே காரணம். எல்லாக் கொடுமைகளுக்கும் அறியாமையே காரணம். எல்லாப் பிரச்சனைகளுக்கும் அறியாமையே காரணம்.

அறிவு உலகை நல்லதாக்குகிறது. அறிவு எல்லாத் துன்பங்களையும் ஒழிக்கிறது. அறிவு நம்மைச் சுதந்திரர்களாக்குகிறது.

எந்த அறிவு?

வேதியியலா? இயற்பியலா? வானவியலா? பூமியியலா? அவைகள் எல்லாம் நமக்கு சிறிது உதவுகின்றன, மிகச் சிறிதுதான் உதவுகின்றன.

ஆனால், இங்கு கூறும் மிக முக்கியமான அறிவு என்பது, உங்கள் இயல்பே.

**"உன்னை நீ அறிந்துக் கொள்."**

நீங்கள் உண்மையில் யார், உங்கள் உண்மை இயல்பு எது? என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும். அந்த எல்லையற்ற இயல்பை உங்களுள் உணர வேண்டும். அப்போதுதான் உங்கள் தளைகளெல்லாம் நொறுங்கி விடும்.

நாம் எப்படி தெய்வீகமானவர்கள்? ஏன் தெய்வீகமானவர்கள்?

நாம் தெய்வத்திடமிருந்து தோன்றியவர்கள், தெய்வத்தின் குழந்தைகள். தெய்வம் என்னும் மாபெரும் ஜோதியிலிருந்து தோன்றிய சுடர்கள் நாம்.

பாலில் செய்த பண்டங்கள் அனைத்திலும் பாலின் தன்மை இருப்பதுப் போல, தெய்வத்திலிருந்து தோன்றிய நம்மிடமும் தெய்வீகம் உள்ளது. நாம் தெய்வீகமானவர்கள்.

நாம் மட்டுமல்ல, மற்ற உயிரினங்கள் மட்டுமல்ல' கடவுளிடமிருந்து தோன்றியதான இந்தப் படைப்பிலுள்ள ஒவ்வொன்றும் ––– மரமும், கொடியும், மண்ணும், விண்ணும், கடலும், மலையும் ––– என எல்லாம் தெய்வீகம்.

**<u>நாம் தெய்வீகமானவர்கள்:</u>**

**தததேத் ஸத்யம் – யதா ஸுதீப்தாத் பாவகாத்**
**விஸ்ஃபுலிங்கா: ஸஹஸ்ரச: ப்ரபவந்தே ஸரூபா: ।**
**ததாஅக்ஷராத் விவதா: ஸோம்ய பாவா:**
**ப்ரஜாயந்தே தத்ர சைவாபி யந்தி ॥ 1 ॥**

<u>பொருள்:</u>

இனியவனே! இது உண்மை. கொழுந்துவிட்டு எரிகின்ற நெருப்பிலிருந்து அதே இயல்புடைய ஆயிரக்கணக்கான நெருப்புப் பொறிகள் எவ்வாறு உண்டாகின்றனவோ, அவ்வாறே அழிவற்ற இறைவனிலிருந்து பலவிதமான உயிரினங்கள் உண்டாகின்றன. அவரிலேயே ஒடுங்கவும் செய்கின்றன.

இறைவன் என்னும் மாபெரும் ஜோதியிலிருந்து தோன்றிய சுடர்கள் நாம். அதாவது நாம் தெய்வீக அம்சம் உடையவர்கள், தெய்வத்தின் குழந்தைகள். இதன் பொருள் என்ன? இது நமக்குத் தரும் செய்தி என்ன?

**சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:**

'தான் எதற்கும் உபயோகமற்றவன் என்று இரவு பகலாக எண்ணிக் கொண்டிருக்கும் ஒருவனிடமிருந்து எந்த நன்மையையும் பிறக்காது.

"நான் வேதனைக்குரியவன். கீழானவன், எதற்கும் பயனற்றவன்" என்று இரவும், பகலும் நினைத்துக் கொண்டிருந்தால், அவன் ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாதவனாகத்தான் ஆகிறான்.

**"ஆம் என்னால் எதுவும் முடியும்"** என்று நீங்கள் நினைத்தால் அத்தகைய ஒருவர் ஆவீர்கள்.

அதாவது, "நான் ஒன்றுக்கும் உதவாதவன்" என்று கூறியவாறு அல்லும், பகலும் அதையே உருப்போட்டுக் கொண்டிருந்தால் அப்படியே எதற்கும் பயனற்றுப் போய் விடுவீர்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதொரு பேருண்மை இது.

நாம் எல்லாம் வல்ல இறைவனின் பிள்ளைகள். எல்லையற்றதான தெய்வீக நெருப்புப் பிழம்பின் பொறிகள் நாம், நாம் எப்படி பூஜ்யங்கள் ஆக முடியும்? நாமே எல்லாம். எதைச் செய்யவும் நாம் தயாராக இருக்கிறோம்!! எதையும் நம்மால் செய்ய முடியும்!

(மனிதர்களின் ஆன்மீக சக்தி அதிகரித்தால் அவனுடைய செயல்திறனும் கண்டிப்பாக அதிகரிக்கும் என்பது நாம் அனுபவத்தில் காணக் கூடிய பேருண்மை. இதற்கு ஒரு எளிய காரணம் சொல்லலாம். இவ்வாறு ஆன்ம சக்தியை அதிகரிக்கும் போது அது நம்முள் ஒரு நேர்மறையான சக்தி மையத்தை உருவாக்கும்! எதிர்மறை எண்ணங்கள் எல்லாம் நம்மிடமிருந்து விலகிப் போகும்.

தோல்விகளை வெற்றிக்கு படிக்கட்டாக எண்ணி மீண்டும் மீண்டும் முயற்சிக்கும் எண்ணம் தோன்றும். இதை இந்திய இளைஞர்களுக்கு பெருமளவில் உபதேசித்து அவர்கள் மனதில் ஒரு பெரும் எழுச்சியை உண்டாக்கியவர் சுவாமி விவேகானந்தர் என்பதில் எந்த ஐயமுமில்லை)

## <u>இறைவன்:</u>

இறைவன் என்ற மாபெரும் ஜோதியிலிருந்து தோன்றிய சுடர்கள் நாம். அந்த இறைவனைப் பற்றிய சிந்தனை தொடங்குகிறது.

## இறைவன் ஒளிமயமானவர்

திவ்யோ ஹ்யமூர்த்த: புருஷ: ஸபாஹ்யாப்யந்தரோ ஹ்யஜ: ।
அப்ராணோ ஹ்யமனா: சுப்ரோ ஹ்யக்ஷராத் பரத: பர: ॥ 2 ॥

பொருள்:

இறைவன் ஒளிமயமானவர், உருவமற்றவர், இதயத்தில் உறைபவர், அகமும் புறமும் நிறைந்தவர், பிறப்பற்றவர், பிராணன் இல்லாதவர், மனம் இல்லாதவர், தூயவர், மேலானவர், பிரகிருதியை விட உயர்ந்தவர்.

பிராணன், மனம் போன்றவைகள் படைப்பில் உள்ளவைகள். இறைவனோ இந்த படைப்புக்கு முந்தியவர். எனவே, அவர் பிராணனோ, மனமோ இல்லாதவர் என்று கூறப்படுகிறார்.

**அக்ஷரம்** அல்லது **பிரகிருதி** என்பது படைப்புக்கு முந்தைய நிலை. படைப்பின் போது தோற்றத்துக்கு வருகின்ற அனைத்தும் அதற்கு முன்பு தோன்றா நிலையில் அல்லது ஒடுக்க நிலையில், அதாவது அவ்யக்த நிலையில் இறைவனில் உள்ளன.

இந்தத் தோன்றா நிலையே பிரகிருதி.

இறைவன் அதற்கும் மேலானவர்.

(இறைவன்–இயற்கை தத்துவம் மிக மிக நுண்மையானது! சிந்திக்கத் தக்க ஒன்று! இறைவன் அனைத்திலும் இருக்கிறான் என்று சொல்லும்போதே இன்னொரு புறத்தில் அனைத்தும் அவனிடம் இருந்தவை என்ற கருத்தியலும் தானாக வரும்.

விஞ்ஞானத்தின் படி பெருவெடிப்பு நிகழ்ந்த பின் பல கிரகங்கள் உண்டாகின என்றெல்லாம் படித்திருப்போம். அப்படி உண்டான கிரகங்களில், பூமி போன்ற கிரகத்தில் அதன் தட்பவெப்ப நிலை காரணமாக உயிர் தோற்றம் உண்டானது என்றும் படித்திருப்போம்.

இங்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன.

ஒற்றை அணுவிலிருந்து வெப்பத்தின் காரணமாக பெருவெடிப்பு நடந்தது என்று வைத்துக் கொண்டால், அந்த ஒற்றை அணு எப்படி உண்டானது என்பதற்கு பதில் உண்டா? இல்லை!!

அதையும் தாண்டி பூமி போலக் கிரகத்தில் ஆரம்பத்தில், முதன் முதலாக ஒற்றை உயிரியான அமீபா தோன்றியது என்பதை முதலாக பார்த்தால், அந்த அமீபாவுக்கு உயிர் எப்படி உண்டானது என்ற கேள்விக்கு பதில் உண்டா? இல்லை!!

அதையும் தாண்டி, பரிணாம வளர்ச்சியில் மனிதன் என்பவன் உண்டானான் என்று கொண்டால், அந்த மனிதனென்ற பிறவிக்கு மட்டும் மனம் என்பதும், சிந்தனா சக்தியும், புத்தி என்ற பகுத்தறிவுத் திறனும் எப்படி உண்டாகின?

இன்னும் மனம் என்ற தன்மை எப்படி எந்த பௌதீக அளவீடும் இல்லாமல் உள்ளது? பௌதீக அளவீடு இல்லாத ஒன்று எப்படி நம்முடைய உடலில் சிந்தனையை உண்டாக்கி நம்மை செயல்படவைக்கிறது?

உடலில் உயிர் இருக்க இருதயம் என்ற உறுப்பு அவசியம்! சிந்தனை, செயல்பாடுகளுக்கு மூளை என்ற உறுப்பு அவசியம்!

நம் கண்கள் ஒரு பாம்பைக் கண்டால் அதை வினாடியில் மனம் உணர்ந்து அந்தத் தகவலை மூளைக்கு அனுப்பி மூளை என்ன செய்யலாம் என்று சிந்தித்து, அந்த பாம்பை அடிக்கத் தடியைத் தேட வைக்கிறது!

அப்படியானால் மூளைக்கு உணர்த்துவதன் மூலம் தகவலை அனுப்பும் மனம் எங்கே உள்ளது? மனம் என்ற பௌதீக அளவீடு இல்லாத தன்மையால் எப்படி உணர முடிகிறது? இதற்கெல்லாம் பகுத்தறிவு பதில் சொல்லாது!

ஆன்மிகம் சரியான பதிலைத் தருகிறது! இயற்கை, பிரபஞ்சம் ஆகியவையின் தோன்றா நிலை, உயிர்களின்

தோன்றா நிலை ஆகிய அனைத்திற்கும் பின்னால், அந்த அறிவு இருக்கின்றது. **அதுதான் இறைவன்.** இதுதான் அந்தப் பதில்!

இதை மறுதலித்து வேறொன்றை இதுவரை யாராலும் நிரூபணம் செய்ய இயலவில்லை! இனியும் இயலாது! அதனால்தான் **இருப்பதெல்லாம் இறைவனே** என்கின்றோம்.)

**இறைவனே அனைத்திற்கும் காரணம்:**

ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மன: ஸர்வேந்த்ரியாணி ச ।
கம் வாயுர்ஜ்யோதிராப: ப்ருதிவி விச்வஸ்ய தாரிணீ ॥ 3 ॥

பொருள்:

பிராணன், மனம், புலன்கள், வெளி, காற்று, நெருப்பு, நீர் அனைத்தையும் தாங்குகின்ற பூமி எல்லாம் அந்த இறைவனிலிருந்தே தோன்றின.

**இறைவனே பிரபஞ்சமாக உள்ளார்.**

அக்னிர்மூர்தா சக்ஷுஷீ சந்த்ரசூர்யௌ
திச: ச்ரோத்ரே வாக் விவ்ருதாச்ச வேதா:
வாயு: ப்ராணோ ஹ்ருதயம் விச்வமஸ்ய
பத்ப்யாம் ப்ருதிவி ஹ்யேஷ ஸர்வபூதாந்தராத்மா ॥ 4 ॥

<u>பொருள்:</u>

அந்த இறைவனுக்கு சொர்க்கம் தலையாக அமைந்துள்ளது. சந்திர சூரியர்கள், கண்களாக உள்ளது. திசைகள், காதுகளாக உள்ளது. வெளிப்பட்ட வாக்கு, வேதங்கள். காற்று, பிராணன். பிரபஞ்சம், மனம் என்பதாக உள்ளது. பூமி, கால்கள் என்பதாக உள்ளது. ஆக, அந்த இறைவனே எல்லா உயிர்களின் உள்ளும் உறைகிறார்.

(இந்த இடத்தில் நம் வேதநூல்களில் வரும் கருத்தியலை நாம் ஒப்பிடலாம். இறைவனின் மனம் தனிமையை உணர்ந்தது, தான் விரிய வேண்டுமென்று விரும்பியது; அது விரிய வேண்டுமென்று எண்ண எண்ண அதனிடமிருந்து பிரபஞ்சம் விரிந்து வந்தது என்று சொல்லப்படும் கருத்தியல் இங்கும் பொருந்தி வருவதைக் காணலாம்.

இதில் நாம் உணர்ந்துக் கொள்ள வேண்டிய விஷயம் பிரபஞ்சம் என்பது பௌதீக அளவீடு. மனம் என்பது பௌதீக அளவீடற்ற தன்மை! அது ஒரு **உணர்வு நிலை** மட்டுமே!

இது மிகச் சரியான முறையில் சொல்லப்பட்ட ஒன்று என்பதில் எந்த சந்தேகமும் இல்லை! பௌதீக அளவீடுகள் மட்டுமே ஒன்றை உருவாக்குதல் இயலாத காரணம்! இதற்கு உதாரணமாக, நாம் மனம், சிந்தனா சக்தி ஆகிய பௌதீகமற்ற தன்மைகளை ஒரு மனிதனிடம் இருந்து எடுத்து விடுவோம்!

(அதாவது, மனம் இருப்பதால்தான் தான்–உணர்வு உள்ளது. அப்படி இருந்தால்தான் மூளையால் சிந்திக்கவே இயலும்)

அங்கு ஒரு மனிதனின் பௌதீக அளவீடான உடல் மட்டுமே உள்ளது! இப்போது பதில் சொல்லுங்கள் அப்படி வெறும் பௌதீக அளவீடாக உள்ள உடலால் எதையேனும் ஒரு புதிய விஷயத்தை படைக்க இயலுமா?

ஒரு ஓவியம் வரைய இயலுமா? புதிய எந்திரம் ஒன்றைக் கண்டுபிடிக்க இயலுமா? கண்டிப்பாக இயலாதல்லவா?

அப்படியிருக்க உணர்வு நிலையில்லாத ஜட நிலையில் உள்ள **இயற்கை** என்ற ஒன்று எப்படித் தானாக உணர்வு நிலையுள்ள மனிதனை, அவன் உயிரைப் படைத்திருக்க இயலும்?

அதனால்தான் ஜடப் பொருட்கள் தொடங்கி, ஒரு அறிவு தாவரங்கள் என ஆறு அறிவு படைத்த மனிதர்கள் வரை பல்வேறு உடல்களை, உணர்வு நிலையாக உள்ள இறைவனால் மட்டுமே படைத்திருக்க இயலும் என்பது அறியப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.)

## இறைவனிலிருந்து வந்தவர்கள் நாம்:

நாம் தெய்வக்குழந்தைகள் என்று #2:1.1 இல் கண்டோம். நாம் தெய்வத்திடமிருந்தே வந்ததால்தான் தெய்வக் குழந்தைகள் என்று இந்த மந்திரம் காரணம் காட்டி விளக்குகிறது.

தஸ்மாதக்னி: ஸமிதோ யஸ்ய ஸூர்ய:
ஸோமாத் பர்ஜன்ய ஓஷதய: ப்ருதிவ்யாம் ।
புமான் ரேத: ஸிஞ்சதி யோஷிதாயாம்
பஹ்வீ: ப்ரஜா: புருஷாத் ஸம்ப்ரஸூதா: ॥ 5 ॥

பொருள்:

அந்த இறைவனிடமிருந்து வானுலகம் உண்டாயிற்று. சூரியன் அந்த வானுலகை ஒளிரச் செய்கிறான். சந்திரனிலிருந்து மேகங்கள் உண்டாயின. பூமியில் வளர்கின்ற செடிகொடிகள் மேகங்களின் மூலம் பெய்த மழையின் காரணமாக உண்டாயின. மனிதன் அந்த தாவரங்களை உணவாக உட்கொள்ளும் போது, உணவின் மூலம் புதிய உயிரணுக்கள் உண்டாகின்றன. அந்த உயிரணுக்களை ஒரு

ஆண் பெண்ணிடம் உறவு கொள்வதின் மூலமாக, விந்துவை விடுவதன் மூலம், உயிரணுக்கள் மனிதனாகப் பிறக்கின்றன.

இவ்வாறு அந்த இறைவனிலிருந்தே பலவிதமான உயிரினங்கள் உண்டாகின்றன.

உயிரினங்கள் எவ்வாறு உண்டாகின்றன?

அதாவது, கடவுள் எவ்வாறு நமக்கு ஆதி காரணமாகிறார் என்பதை இந்த மந்திரம் கூறுகிறது.

அதாவது, இறைவனிலிருந்து உயிரினங்கள் ஐந்து படிகளாகத் தோன்றுகின்றன.

1. இறைவனிலிருந்து வானுலகம் தோன்றுகிறது

2. வானுலகில் சஞ்சரிப்பவர்களுள் ஒருவனான சந்திரனிலிருந்து மேகங்கள் தோன்றுகின்றன.

3. மேகங்கள் பெய்கின்ற மழை காரணமாக பூமியில் செடிகொடிகள் முளைக்கின்றன.
4. பூமியிலிருந்து விடுபட்ட உயிர்கள் மழை வழியாக செடிகொடிகளில் புகுந்து, அதை உண்கின்ற ஆண்களிடம் தங்குகின்றன.

5. அந்த உயிர்கள், ஆணின் விந்து வழியாகப் பெண்ணிடம் சென்று மீண்டும் உயிரினங் களாகப் பிறக்கின்றன.

இந்த ஐந்து படிகளும் ஐந்து அக்கினிகளாகக் கொள்ளப்பட்டு, **பஞ்சாக்கினி வித்யை** என்று சாந்தோக்ய உபநிஷதத்திலும், ப்ருஹதாரண்யக உபநிஷதத்திலும் விரிவாகப் பேசப்படுகிறது.

## பஞ்சாக்கினி வித்தை

ஆறாவது அறிவு பகுத்தறிவு. இது மனிதனுக்கு மட்டுமே உள்ள சிறப்பு. மற்றைய சீவராசிகளுக்குப் பகுத்தறிவு அதாவது நல்லது கெட்டது ஆய்ந்து செயற்படும் அறிவு இல்லை. இதனால் மானிடப் பிறவி ஒரு வரப்பிரசாதமாகும்.

இதனால் தான் ஔவையார் "அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார்.

இந்த ஆறாது அறிவான பகுத்தறிவை விட வேறு என்ன சிறப்புக்கள் மானிடப் பிறவிக்கு உள்ளன?

**பேச்சுத்திறன்:**

பேச்சுத்திறன் மனிதப்பிறவிக்கு மட்டுமே உள்ள சிறப்பு. மற்ற உயிர்களுக்கு பேச்சுத்திறன் இல்லை. இதனால்தான் "தீயினால் சுட்ட புண் ஆறும், ஆனால் ஆறாது நாவினால் சுட்ட வடு" என்றும், "யாகாவாராயினும் நாகாக்க" என்றும் நாவடக்கம் பேணும்படி திருவள்ளுவர் திருக்குறளில் கூறியிருக்கிறார்.

வேறு என்ன சிறப்புகள் மனிதப் பிறவிக்கு உள்ளன?

**நீண்ட ஆயுள்:**

சில அரிதான உயிரினங்களைத் தவிர ஏனைய உயிர்கள் எல்லாம் சில நாட்களில் இருந்து சில வருடங்கள் வரை வாழ்ந்து மாய்கின்றன. ஆனால் மனிதனுக்கு மட்டும் ஆயுள் நூறு.

"வேதநூல் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேலும்" என்று ஆழ்வார் பாடுகின்றார்.

நூறு வயது என்றால், ஆங்கில நாட்காட்டிக் காலண்டரின் படி அல்ல. இது இப்போது வந்தது.

பண்டைக் காலத்தின் மனிதன் எப்படிக் காலத்தைக் கணித்தான்?

வானத்திலுள்ள சந்திரனைப் பார்த்து அது வளர்வதையும், தேய்வதையும் கொண்டு கணித்தார்கள்.

இதன்படி ஆயிரம் பிறை கண்டதும் சந்திர மாதக்கணக்கில் தொண்ணூற்றொன்பது வருடங்க ளாகின்றது.

ஜீவனானது உறக்கத்தில் இருந்து, மேக மண்டலத்தின் மழைத்துளியில் வந்து, நிலத்தில் தங்கி, உணவினூடாகத் தந்தையை அடைந்து, உதிரத்தில் கலந்து பின்னர் தந்தையின் சுக்கிலத்தில் கழித்த காலம் இரண்டு சந்திர மாதங்கள்.

"விண்ணின் றிழந்து வினைக்கீடாய் மெய் கொண்டு" என்கின்றது திருவாசகம்.

நமது சந்ததி நாம் உண்ணும் உணவினூ டாகத்தான் வருகின்றது. இதனால்தான் நமது தர்மத்தில் உண்ணும் உணவுக்கும் கட்டுப்பாடுகள் பல வைத்தார்கள்.

உணவுக்கும் ராஜச உணவு, தாமச உணவு, சாத்வீக உணவு என்று குணங்கள் வைத்தார்கள்.

உணவுப் பதார்த்தம் மட்டுமல்ல உணவு தயாரிப்பவரும், பரிமாறுபவரும் கூட இதய சுத்தியுடனும் தெய்வ சிந்தனையுடனும் இருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள்.

உணவினூடாகத்தான் உன் சந்ததி வருகின்றது.

அசுரத்தன்மையான இடத்தில் உணவு ஏற்றால் அல்லது அசுரத்தன்மை நிறைந்த உணவு உண்டால் அவ்வாறே சந்ததி உருவாகும்.

தாயின் கர்ப்பத்தில் கழித்தது பத்து சந்திர மாதங்கள் 'தக்க தசமதி தாயொடு தான்படும் துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்' என்பது திருவாசகம்.

தசம் என்றால் பத்து.

ஆகவே பிறக்கும் போதே நமக்கு பன்னிரண்டு மாதங்கள். அதாவது ஒரு வயது ஆகின்றது.

இதன்படி ஆங்கில வருடக்கணக்கில் எண்பது வருடங்கள் ஆகும்போது வேதநூல் கணக்கின்படி நமக்கு நூறு வயதாகின்றது.

அப்போதுதான் சதாபிஷேகம் செய்கிறார்கள்.

சதம் என்றால் நூறு;

இது பிரம்ம சூத்திரமும், திருமந்திரமும் விளக்கும் உயிர்ப்பிறப்பின் பெரும் இரகசியம்.

உடலை விட்டுச் சென்ற உயிர் மீண்டும் மனிதனாகப் பிறப்பெடுப்பதற்குத் திரும்பும்போது, முறையே

துறக்கம்,
மேக மண்டலம்,
நிலம்,
தந்தை,
தாய்
என்று ஐந்து இடங்களில் புகுந்து தங்கி வருவதைத் தியானிப்பது **பஞ்சாக்கினி வித்தை** என்பர்.

இவ்வாறுதான் சூல் கொண்டு இரண்டு மாதம் கருவைச் சுமப்பதை அறிந்திராதவர்கள் ஆண்கள்.

இதனால் கொண்ட சூலை அறியாத ஆண்கள் கருவுற்றதும் அதை அறிந்துக் கொள்ளும் பெண்களைவிட

அறிவில் குறைந்தவர்களே என்று தக்கையிசை இராமாயணம் பாடிய கொங்கு நாட்டுப் புலவர் எம்பெருமான் என்பவரின் மனைவி பூங்கோதையார் பாடிய பின்வரும் வெண்பாப் பாடல் கூறுகின்றது.

அறிவில் இளைஞரே ஆண் மக்கள், மாதர்
அறிவின் முதிஞரே ஆவர் – அறிகாயோ
தான் கொண்ட சூலறிவர் தத்தையர், ஆண் மக்கள்
தான் கொண்ட சூலறியார் தான்.

இதைக் கொங்கு மண்டல சதகத்தில் உள்ள 65ம் பாடலும் உறுதி செய்கின்றது.

குறுமுனி நேர் தமிழ் ஆழியுண் வாணர் குழாம் வியப்ப
அறிவில் இளைஞரே ஆண் மக்கள் என்று அறுதியிட்டுச்
சிறிய விடைச்சி எம்பெருமான் மனைவி சிறந்து வளர்
மறுவறு சங்கதி சேர்வது கொங்கு மண்டலமே,

இதிலிருந்து பஞ்சாக்கினி வித்தை என்பது ரிஷிகளின் பிரம்ம சூத்திரத்திலும், உபநிடதங்களிலும் மட்டுமல்லாது, நமது பண்டைய தமிழ்க்குடியின் பாமர மக்களும் அறிந்து உணர்ந்திருந்த ஆத்ம இரகசியங்களில் ஒன்று என்பது தெளிவாகின்றது.

ஆணில் கரு சுமக்கும் காலம் இரண்டு மாதங்கள். அதேப்போல நமது மருத்துவ விஞ்ஞானத்திலும் ஆணில் ஒரு விந்துக்கலம் உருவாக எடுக்கும் காலம் (spermatogenesis) இரண்டு மாதங்கள்.

இவை ஒருபுறம் இருக்க இப்படி பகுத்தறிவு, பேச்சுத்திறன், நீண்ட ஆயுள் என்று இவ்வளவு சிறப்புகளும் மானிடப் பிறவிக்கு உள்ளனவே, அது ஏன் என்று சிந்தித்தோமா?

பிறவிச் சுழலில் இருந்து விடுபட வாய்ப்பளிக்கும் பிறவி இது. இதனால்தான் தேவர்கள் கூட இந்த மனிதப் பிறவி எடுக்க வேண்டித் தவம் இருக்கிறார்கள்.

இதுதான் மனிதப்பிறவி எடுத்ததன் நோக்கம்.

புவனியிற் போய்ப் பிறவாமையினால் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்றவாறென்று நோக்கி.

– திருவாசகம்

கடவுள் நமக்கு **தனு, கரண, புவன போகங்கள்** என்னும் இந்த உடல், கருவி கரணங்கள், இந்த உலகங்கள், இதிலுள்ள

அனுபவப் பொருள்கள் ஆகியவற்றை அனுபவிக்கக் கொடுத்து, நல்லது கெட்டது ஆராய்ந்து அறிந்து நடக்க ஆறாவது அறிவாகிய பகுத்தறிவும் கொடுத்து, அனுபவிக்கும் சுதந்திரமும் கொடுத்திருப்பது இந்த பிறவி தோறும் வருகின்ற இந்த அனுபவ முதிர்ச்சியினால் பக்குவமடைந்த ஜீவன் ஈற்றில் இறையருளால் தனது அனாதியான மாசுக்களான மலங்களைக் களைந்து பிறவித்தளையில் இருந்து விடுபடுவதற்கேயாம்.

'நாம் மானுடப்பிறவி எடுத்ததன் நோக்கம் மனமொழி மெய்களால் முழுமுதற் கடவுளாகிய அந்த இறைவனை வழிபட்டு முத்தினியின்பம் பெறுதற் பொருட்டேயாம்'

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்து அரன் தனை அர்ச்சிப்பர்
ஊன்எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ!

– சிவஞான சித்தியார் சுபக்கம் பாடல் 182

<u>**வாழும் வழியும் இறைவனே:**</u>

மனிதனும், பூமியில் வாழும் மற்ற உயிரினங்களும், தேவர்கள் போன்ற விண்ணுலகினரும் இறைவனி லிருந்தே தோன்றினர்.

அவர்கள் வளர்வதற்கான உணவுப் பொருட்கள், மனம் வளர்வதற்கான சிரத்தை முதலிய பண்புகள், வேதங்கள், மந்திரங்கள் அனைத்தும் அவரிடமிருந்தே தோன்றியதைத் தொடரும் 3 மந்திரங்கள் கூறுகின்றன.

தஸ்மாத் ரிச: ஸாம யஜும்ஷி தீக்ஷா
யஜ்ஞாச்ச ஸர்வே க்ரதவோ தக்ஷிணாச்ச ।
ஸம்வத்ஸரச்ச யஜமானச்ச லோகா:
ஸோமோ யத்ர பவதே யத்ர ஸூர்ய: ॥ 6 ॥

<u>பொருள்:</u>

வேதங்கள், பாடல்கள், மந்திரங்கள், சடங்குகள், வேள்விகள், பல்வேறு தர்மங்கள், தட்சிணைகள், காலம், வேள்விகளைச் செய்பவர்கள், சந்திரன் வளர்க்கவும், சூரியன் துதிக்கவும் செய்கின்ற உலகங்கள் ஆகிய அனைத்தும் அந்த இறைவனிலிருந்தே தோன்றின.

தஸ்மாச்ச தேவா பஹுதா ஸம்ப்ரஸூதா:
ஸாத்யா மனுஷ்யா: பசவோ வயாம்ஸி ।
ப்ராணாபானௌ வ்ரீஹியவௌ தபச்ச
ச்ரத்தா ஸத்யம் ப்ரஹ்மசர்யம் விதிச்ச ॥ 7 ॥

<u>பொருள்:</u>

பல்வேறு தேவர்கள், சாத்யர்கள், மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், உள்மூச்சு, வெளிமூச்சு, நெல், பார்லி, தவம், சிரத்தை, உண்மை, சுயக்கட்டுப்பாடு, கடமைகள் எல்லாம் அந்த இறைவனிலிருந்தே தோன்றின.

சாத்யர்கள் பன்னிருவர். இவர்கள் தேவர்களில் ஒரு பிரிவினர்; மற்ற தேவர்களை விட உயர்ந்தவர்கள்.

<u>ஏழு ஏழாக:</u>

ஸப்த ப்ராணா: ப்ரபவந்தி தஸ்மாத்
ஸப்தார்ச்சிஷ: ஸமித: ஸப்த ஹோமா: ।
ஸப்த இமே லோகா யேஷு சரந்தி ப்ராணா
குஹாசயா நிஹிதா: ஸப்த ஸப்த ॥ 8 ॥

<u>பொருள்:</u>

அந்த இறைவனிடமிருந்தே ஏழு புலன்கள், ஏழு சுடர்கள், ஏழு எரிபொருட்கள், ஏழு ஆஹுதிகள் எல்லாம் தோன்றின. இதயக் குகையில் பிராணன் செயல்படுகின்ற உயிரினங்கள் வாழ்கின்ற ஏழு உலகங்களும் அவரிடமிருந்தே தோன்றின. அனைத்தையும் ஏழு ஏழாக அவரே படைத்தார்.

(ஆக இந்த ஏழு உலகங்கள் மற்றும் மேல்/கீழ் ஏழு உலகங்கள் அனைத்துமே நம் சனாதன தர்மத்தில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகள்தான். இதர மதங்களில் இவை எடுத்தாளப்படுகின்றன.)

**ஏழு புலன்கள்:**

கண்கள் 2, காதுகள் 2, நாசித் துவாரங்கள் 2, நாக்கு 1.

**எழு சுடர்கள்:**

சுடர் என்றால் ஒளி. ஒளி என்பது அறிதலைக் குறிக்கிறது. ஒவ்வொரு புலனும் அதற்குரிய பொருளை அனுபவிக்கும்போது அதனை அறிகிறது. உதாரணமாக நாக்கு ஒன்றைச் சுவைக்கும்போது அந்தச் சுவையை அறியவும் செய்கிறது.

இந்த அறியும்தன்மை இங்கே சுடர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஏழு எரிபொருட்கள்:**

ஏழு புலன்களுக்கும் உரிய பொருட்களே எரிபொருட்கள். கண்கள் காண்பதற்கான பொருட்கள், காதுகள் கேட்பதற்கான விஷயங்கள் போன்றவை இவை.

(மனிதனின் வயிற்றில் உண்ணும் உணவு எரிக்கப்பட்டு சத்தாக ஆகிறதல்லவா? அதே போல்தான் இதுவும்! காட்சிகள் கண்ணுக்கு விருந்து என்றால் அது பார்க்கும் விஷயங்களை சத்து போல விரிவுபடுத்திக் கொள்ள உதவுகிறது. காது கேட்கும் விஷயங்கள் தீனி என்றாலும் அப்படியே)

**ஏழு ஆஹுதிகள்:**

புலனறிவு இங்கே ஓர் ஆஹுதியாகக் கூறப்பட்டுள்ளது. வாழ்க்கை என்ற மாபெரும் வேள்வியில் புலன்கள் ஒவ்வொன்றும் தங்கள் செயல்பாட்டின் மூலம், அதாவது கண்கள் காண்பதன் மூலம், காதுகள் கேட்பதன் மூலம் ஆஹுதிகளை அளித்துக் கொண்டிருக்கின்றன.

**ஏழு உலகங்கள்:**

ஏழு புலன் மையங்கள், கண், காது, மூக்கு என்று புறத்தில் நாம் காண்பவை வெறும் வாசல் மட்டுமே. இந்த

வாசல்களின் வழியாகச் செயல்படுகின்ற உண்மையான புலன்கள் உள்ளே உள்ளன; இதயக் குகையில் உள்ளன.

இதயக்குகை என்பது பொருள் பொதிந்த சொல்லாகும். இதயம் என்றால் புத்தி. புத்தியிலுள்ள பல்வேறு மையங்களே நமது புலனறிவைக் கட்டுப்படுத்துகின்றன.

## இயற்கையின் தலைவர் இறைவன்: 9 – 10

அத: ஸமுத்ரா கிரயச்ச ஸர்வே: அஸ்மாத்
ஸ்யந்தந்தே ஸிந்தவ: ஸர்வரூபா: ।
அதச்ச ஸர்வா ஓஷதயோ ரஸச்ச
யேனைஷ பூதைஸ்திஷ்ட்டதே ஹ்யந்தராத்மா ॥ 9 ॥

பொருள்:

அந்த இறைவனிடமிருந்தே கடல்கள், மலைகள் எல்லாம் தோன்றின. பல்வேறு நதிகளும் அவரிடமிருந்தே பெருகி ஓடுகின்றன. செடிகொடிகள் அனைத்தும் அவரிடமிருந்தே உண்டாயின. இவ்வாறு அனைத்து இயற்கையாலும் சூழப்பட்டதாக உள்ளது ஆன்மா.

செடிகொடிகள், மலைகள், நதிகள் போன்றவை பஞ்சபூதங்களால் ஆனவை. இவ்வாறு பஞ்சபூதங்களால் ஆன இயற்கைக்கு ஆன்மாவாக இறைவன் விளங்குகிறார் என்பது பொருள்.

பஞ்சபூதங்களால் இயற்கை அமைந்துள்ளது போல், மனித உடம்பும் பஞ்ச பூதங்களால் ஆனது. அந்த உடம்பினுள் ஆன்மாவாக இறைவன் விளங்குகிறார் என்றும் பொருள் கொள்ளலாம்.

புருஷ ஏவேதம் விச்வம் கர்ம தபோ ப்ரஹ்ம பராம்ருதம் I
ஏதத்யோ வேத நிஹிதம் குஹாயாம்
ஸோஅவித்யா க்ரந்திம் விகிரதீஹ ஸோம்ய II 10 II

<u>பொருள்:</u>

இனியவனே, இறைவன்தான் இந்த அனைத்துமாக இருக்கிறார். கர்மங்கள், தவம் என்று மட்டுமல்ல, அழிவற்ற மேலான பிரம்மமாக இருப்பதும் அவரே. இதயக்குகையில் உறைகின்ற அவரை உணர்பவன் அறியாமைத் தளையிலிருந்து இப்போதே விடுபடுகிறான்.

**இதயக்குகையில் இறைவன் உறைகிறார். அவரை அறிபவன் அதாவது அனுபூதியில் அவரை உணர்பவன் அறியாமைத் தளையிலிருந்து விடுபடுகிறான். 'மரணத்திற்குப் பிறகு அல்ல, வாழும் போதே அவன் முக்தனாகிறான்' என்று சுட்டிக் காட்டுகிறார் ஸ்ரீ சங்கரர்.**

இத்துடன் முண்டக உபநிஷதத்தின் **இரண்டாம் பகுதியின் முதல் அத்தியாயம்** நிறைவு பெறுகிறது.

# இரண்டாம் பகுதி

## அத்தியாயம் – 2

### உன்னை அறி:

நாம் தெய்வீகமானவர்கள் என்ற ஆழ்ந்த சிந்தனையால் அடித்தளம் அமைத்த பிறகு அடுத்த சாதனைப் பகுதிக்கு வருகிறோம்.

நாம் தெய்வீகமானவர்கள் என்று மீண்டும் மீண்டும் சொல்வதாலோ, சிந்திப்பதாலோ எல்லாம் ஆகி விடாது. இவையெல்லாம் புலன்களுக்கு உட்பட்ட அனுபவங்கள் மட்டுமே. தீவிரமாக சாதனைகள் செய்து அதை அனுபூதியில் புலன்களைக் கடந்த உண்மை நிலையில் உணர வேண்டும்.

நாம் தெய்வீகமானவர்கள் என்பதன் பொருள் என்ன?

உடம்பு, மனம், பிராணன், ஆன்மா என்று பலவற்றின் தொகுதி நாம். இவற்றில் உடம்பும் மனமும் பிராணனும் மாறுபவை. ஆனால் ஆன்மா இறைவனிலிருந்து வந்தது, இறைவனின் அம்சம்.

இன்னும் குறிப்பிட்டு சொல்வதானால் இறைவனே மனிதனின் இதயக் குகையில் ஆன்மாவாக ஒளிர்கிறார். உடம்பையும் மனத்தையும் நாம் என்று கருதி வாழ்கின்ற நாம், அவை இரண்டிற்கும் அப்பாற்பட்ட ஆன்மாவே நாம் என்பதை அரிய வேண்டும்; அனுபூதியில் உணர வேண்டும்.

தன்னை அறிதல் அல்லது ஆன்மாவை அறிதல் என்றால் என்ன, அதன் தன்மை என்ன, அதன் தன்மை என்ன, அதற்கான சாதனைகள் எவை, அதன் விளைவு என்ன, இறையனுபூதி ஆகியவற்றை இந்த அத்தியாயம் ஆராய்கிறது.

## ஆன்மாவை அறி

ஆவி: ஸன்னிஹிதம் குஹாசரம் நாம
மஹத்பதம் அத்ரைதத் சமர்ப்பிதம் I
ஏஜத் ப்ராணன் நிமிஷச்ச யதேதத் ஜானத ஸதஸத்
வரேண்யம்
பரம் விஜ்ஞானாத் யத்வரிஷ்ட்டம் ப்ரஜானாம் II 1 II

<u>பொருள்:</u>

அந்த ஆன்மா ஒளிமயமானது, வேறெதை விடவும் மிக அருகில் இருப்பது, இதயக்குகையில் உறைவது, வாழ்க்கையின் மேலான லட்சியம் அந்த ஆன்மாவே. செயல்படுகின்ற, மூச்சு விடுகின்ற, இமைக்கின்ற அனைத்து உயிரினங்களும் அதனையே சார்ந்துள்ளன. தூலமானதும், நுண்ணியதும் அதுவே. உயிரினங்களின் அறிவிற்கு அப்பாற்ப்பட்டது அது. போற்றத்தக்க அந்த ஆன்மாவையே அறிய வேண்டும்.

**<u>ஆன்மாவின் பரிமாணங்கள்:</u>**

ஆன்மா அறிவிற்கு அப்பாற்பட்டது, ஆனால் ஆன்மாவையே அறிய வேண்டும் – இந்த இரண்டும் முரணாகத் தோன்றுகின்றன. அறிய வேண்டும், ஆனால் அறிய முடியாது என்றால் உலகிலுள்ள பொருட்களை அறிவதுபோல் அறிய முடியாது, புலன்களால் அறிய முடியாது என்பது பொருள். புலன்கள் வெறும் கருவிகள். அவற்றின் எல்லை சிறியது.

உள்ளது உள்ளபடி காட்டவல்லவை அல்ல நமது புலன்கள். இதனை பௌதீக பரிமாணம், திவ்ய பரிமாணம்

என்று இரண்டு பரிமாணங்களிலும் புரிந்து கொள்வோம்.

**1 பௌதீக பரிமாணம்:**

ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் நம் கண்களால் காண இயலாது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் நம் காதுகளால் கேட்க இயலாது. இது போலவே ஒவ்வொரு புலன்களும். அது மட்டுமல்ல, குறிப்பிட்ட அதிர்வு எல்லைகளுக்கு (FREQUENCY LIMITS) வெளியிலுள்ள ஒளியையோ, ஒலியையோ அவை நம் அருகில் இருந்தாலும் காணவோ, கேட்கவோ முடியாது. எனவே புலன்களின் செயல்பாடு வட்டம் மிகவும் குறுகியது.

**2 திவ்ய பரிமாணம்:**

பார்ப்பவற்றையும் கேட்பவற்றையும் உணர்பவற்றையும் கூட, அவை உள்ளது உள்ளபடி புலன்களால் அறிய இயலாது.

'ஒரு சாதாரண பூவை எடுத்துக் கொள்ளுங்கள். இது ஓர் எல்லைக்கு உட்பட்டதுதான். ஆனால், இந்தப் பூவைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும் என்று துணிந்து யாராவது சொல்ல முடியுமா?

அந்தப் பூவைப் பற்றிய எல்லாம் தெரியும் ன்ற அறுதி நிலையை அடைவது சாத்தியமே இல்லை. ஆராய்ச்சியின்

ஆரம்பத்தில் எல்லை உள்ளதாகத் தோன்றிய பூ இப்போது எல்லையற்றதாகி விட்டது.

நமது எல்லை மிகவும் குறுகியது என்கிறார்' சுவாமி விவேகானந்தர். அதாவது எல்லையற்றவற்றை எல்லை உள்ளவையாக நாம் கண்டுகொண்டிருக்கிறோம். எந்தப் பொருளையும் அதன் உண்மை நிலையில் நாம் காண முடிவதில்லை. எனவே உண்மையை அறிய வேண்டுமானால் இந்தப் புலன்களும் மனமும் போதாது. அவற்றை விட மேலான ஒன்று வேண்டும்.

அந்த மேலான ஒன்றை **தெய்வீகக் கண்** என்று பகவத் கீதை குறிப்பிடுகிறது. தெய்வீகக் கண் என்றால் மூன்றாவது ஒரு கண் என்பதல்ல. இங்கே குறிப்பிடப்படுவது நமது உணர்வு நிலையில் ஒரு மாற்றம், புத்தியின் விழிப்பு. கண்களோ, காதுகளோ இல்லாமல் காணவோ, கேட்கவோ முடியுமா? முடியும்.

இதற்கு கனவு நிலை ஒரு உதாரணம். கனவில் நமது புலன்கள் எதுவும் செயல்படவில்லை. ஆனாலும், அங்கே நாம் காண்கிறோம், கேட்கிறோம், உணர்கிறோம். நனவு நிலையில் புலன்கள் வாயிலாக நிகழ்பவை அனைத்தும் கனவு நிலையில் புலன்கள் இன்றியே நிகழ்கின்றன.

இது ஓர் உதாரணம் மட்டுமே. இவ்வாறு புலன்களின் துணையின்றி ஆன்மா அறியப்படுகிறது. அத்தகைய நிலையை அறிய வேண்டும்.

**ஆன்மா ஒளிமயமானது:**

யதர்ச்சிமத் யதணுப்யோ: அணு ச
யஸ்மின் லோகா நிஹிதா லோகினச்ச ।
ததேததக்ஷரம் ப்ரஹ்ம ஸ ப்ராணஸ்து வாங்மன:
ததேதத் ஸத்யம் ததம்ருதம் தத்வேத்தவ்யம் ஸோம்ய வித்தி ॥ 2 ॥

பொருள்:

இனியவனே; அந்த ஆன்மா ஒளிமயனானது. அணுக்களுக்கெல்லாம் அணுவானது. உலகங்களும் உயிரினங்களும் அதிலேயே நிலைபெற்றுள்ளன. அந்த ஆன்மா அழிவற்றது. அதுவே இறைவன், பிராணன், வாக்கு, மனம் அனைத்தும் அதுவே.

அது உண்மையானது, அழிவற்றது, மரணமற்றது. அதனையே அறிய வேண்டும். அதனை அறிவாய்.

## இறைவனை அறி

ஆன்மாவை அனுபூதியில் உணர்ந்த பிறகு இறைவனை அறிவதற்கு முயற்சிக்க வேண்டும். அம்பு எய்கின்ற உதாரணத்தின் மூலம் அதனை இந்த மந்திரங்கள் விளக்குகின்றன.

**தனுர்க்ருஹீத்வௌபநிஷதம் மகாஸ்த்ரம்**
**சரம் ஹி உபாஸானிசிதம் ஸந்தயீத ।**
**ஆயம்ய தத்பாவகதேன சேதஸா**
**லக்ஷ்யம் ததேவாக்ஷரம் ஸோம்ய வித்தி ॥ 3 ॥**

பொருள்:

இனியவனே! உபநிஷதங்கள் கூறுகின்ற பெரிய ஆயுதமாகிய வில்லை எடுத்து, தியானத்தால் கூர்மையாக்கப்பட்ட அம்பை அதில் வைத்து, இறை எண்ணங்கள் நிறைந்த மனமாகிய நாணை இழுத்து இலக்கை அடிக்க வேண்டும். அந்த இலக்கே இறைவன். அவரை அறி.

ப்ரணவோ தனு: சரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே ।
அப்ரமத்தேன வேத்தவ்யம் சரவத் தன்மயோ பவேத் ॥ 4 ॥

<u>பொருள்:</u>

ஓங்கார மந்திரமே வில், ஆன்மா அம்பு, இறைவனே இலக்கு என்று சொல்லப்படுகிறது. அம்பை எய்பவன் அலைபாயாத மனத்தினனாக இருக்க வேண்டும்; அம்பைப் போல் அந்த இலக்குமயமாக ஆக வேண்டும்.

(மகாபாரதத்தில் துரோணாச்சாரியார் கௌரவ பாண்டவர்களுக்கு வில்வித்தை கற்றுக் கொடுத்து அதன் பிறகு சோதனை வைத்ததை இங்கே நினைவு கூறலாம்! மரத்தில் அமர்ந்துள்ள பறவையை அடிக்க வேண்டும் என்ற இலக்கு கொடுக்கப்பட்டு, ஒவ்வொருவராக அழைக்கப்படுகின்றனர். குறி பார்த்த பிறகு என்ன காண்கிறாய் என்கிறார் துரோணர்! ஒருவன் மரம் தெரிகிறது, மரத்தின் கிளை தெரிகிறது, கிளையில் உள்ள பழங்கள் தெரிகிறது, அதனருகில் அமர்ந்துள்ள பறவை தெரிகிறது என்று சொல்கிறான்! இன்னொருவனோ மரத்தின் கிளையும், பழமும், பறவையும் தெரிகிறது என்று சொல்கிறான்! குருநாதர் அர்ஜுனனை அழைத்து குறி வைக்க சொல்லிக் கேட்கிறார் ! அர்ஜுனனோ "பறவையின் கண் தெரிகிறது" என்று இலக்கை தெளிவாகக் கூறுகிறான்! அதை

போல்தான் ஆன்மாவை அம்பாகக் கொண்டு இறைவன் மீது எய்ய வேண்டும் அதாவது ஆன்மா இறைவனிடம் சென்று சேர்ந்து விட வேண்டும் என்று இந்த மந்திரம் கூறுகிறது.)

**இறைவனை அடைவது எப்படி?:'**

இறைவனை அடைவது என்பதை வில்லில் நாண் ஏற்றி இலக்கை வீழ்த்துவதற்கு ஒப்பிட்டு 3–4 மந்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

**வில்:** ஓங்கார மந்திரம்
**நாண்:** மனம்
**அம்பு:** உடல்
**இலக்கு:** இறைவன்.

அம்பு எய்வதைப் பற்றிப் பார்ப்போம். முதலில் நாணை வில்லில் இழுத்துக் கட்ட வேண்டும். பிறகு அம்பை நாணில் வைத்துக் குறிபார்க்க வேண்டும். இலக்கும் அம்பும் ஒரே நேர்கோட்டில் வந்த பிறகு அம்பைப் பின்னால் இழுத்து எய்ய வேண்டும். இதில் ஒவ்வொரு படியும் முக்கியமானவை. நாண் வில்லில் சரியாக இழுத்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும். அம்பு

கூரியதாக இருக்க வேண்டும். அம்பு இலக்குடன் நேர்கோட்டில் அமையுமாறு பொருத்தப்பட வேண்டும். இத்தனை நிபந்தனைகளும் சரியாக இருக்கும்போது அம்பை எய்தால் இலக்கு தாக்கப்படுவது நிச்சயம்.

1. நாண் வில்லில் சரியாக இழுத்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும். இங்கே நாண் என்பது மனம். வில் என்பது ஓங்காரம். மனம் ஓங்காரத்துடன் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும். அதாவது மனம் ஓங்கார ஜபத்தில் மூழ்கியதாக பயிற்சி பெற்றதாக இருக்க வேண்டும். மனத்திற்கு பயிற்சி அளிப்பது பற்றி இரண்டு கருத்துகள் கூறப்படுகின்றன – 1 இறை எண்ணங்களால் நிறைந்த மனம் (#3); 2 அலைபாயாத மனம் (#4). மனம் அலைபாயாததாக இருக்க வேண்டும்.

**மனம் எப்போது அலைபாயும்?**

ஆசைகள் எழும்போது. ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே மனம் புறத்தில் செல்கிறது. எனவே ஆசைகளை விட்ட மனம் இங்கே குறிப்பிடப்படுகிறது. ஆசைகளை எப்படி விடுவது? அதற்கு மனத்தை எப்போதும் இறை எண்ணங்களால் நிறைக்க வேண்டும்.

2. அம்புவின் கூரிய முனை எப்போதும் பாமரித்து வர வேண்டும். அப்போது மட்டும்தான் அது இலக்கை தாக்கும்போது, அதன் பயன் முழுமை அடையும் என்பதுப்போல, இங்கே அம்பு உடல் ஆகையால், அதை நோயற்ற நிலையில் யோக சாதனைக்கு ஒத்துழைக்கும் வகையில் நன்கு பரமாரிக்க வேண்டும். அதாவது, நாம் செய்யும் சாதனைகளின் மூலம் ஆன்ம உணர்விலேயே எப்போதும் நிலைப் பெற்றிருக்க வேண்டும். இந்த நிலையே இங்கு '**கூரியது**' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பு இலக்குடன் நேர்கோட்டில் அமையுமாறு பொருத்தப்பட வேண்டும். 'தெய்வமாகி தெய்வத்தை பூஜை செய்' என்பார்கள். உடம்புடனும், மனத்துடனும் நம்மை ஒன்றுபடுத்துகின்ற சாதாரண மனித நிலையில், நாம் கடவுளை ஒரு மனிதனாக மட்டுமே நினைக்க முடியும். அதுவே, அவரை உள்ளது உள்ளபடி அறிய வேண்டு மானால், நாமும் தெய்வ நிலைக்கு உயர வேண்டும். அதாவது, ஆன்ம உணர்வு பெற்றிருக்க வேண்டும்.

அது, சாஸ்திரங்களைப் படித்து அறிவுபூர்வமாக உணர்வது அல்ல; அந்த அறிவை (ஆன்மாவை) அனுபூதியில் உணர்வதே இங்கு குறிப்பிடப்படுகிறது.

இதனை 4 ஆம் மந்திரம் '**இலக்குமயமாக ஆவது**' என்று கூறுகிறது. நாம் தெய்வ நிலையைப் பெற வேண்டும். எங்கும் நிறைந்த இறைவனே நம்மில் ஆன்மாவாக உள்ளார். எனவே, நாம் ஆன்மா என்ற நிலையை அனுபூதியில் அடைய வேண்டும். இதுவே, 'அம்பு இலக்குடன் நேர்கோட்டில் அமையுமாறு பொருத்தப்படுதல்'.

இவ்வாறு தியானத்தால் மனத்தை ஒருமைப்படுத்தி, இறை எண்ணங்களால் ஆன்ம நிலையை உணர்ந்து இறைவனை நாடினால் அவரைப் பெறலாம். அம்பு எய்யும் உதாரணத்தால், இந்த இரண்டு மந்திரங்கள் இதனைச் சுட்டிக் காட்டுகின்றன.

**ஆன்ம அனுபூதி:**

ஆன்ம அனுபூதி, அதாவது ஆன்மாவை அறிதல்; இறையனுபூதி, அதாவது இறைவனை அறிதல் ஆகியவற்றின் முன்னுரையை 1 – 4 மந்திரங்களில் கண்டோம். 5 – 7 மந்திரங்கள் **ஆன்ம அனுபூதி** மற்றும் அதற்கான வழி பற்றி கூறுகிறது.

<u>முதற்படி: பேச்சுக் கட்டுப்பாடு</u>

யஸ்மின் த்யௌ: ப்ருதிவீ சாந்தரிக்ஷமோதம்
மன: ஸஹ ப்ராணைச்ச ஸர்வை: |
தமேவைதம் ஜானத ஆத்மானம் அன்யா
வாசோ விமுஞ்சத அம்ருதஸ்யைஷ ஸேது: || 5 ||

<u>பொருள்:</u>

வானுலகம், பூமி, இடைவெளி மற்றும் மனம், பிராணன்கள், புலன்கள் என்று அனைத்தும் யாரில் நிலைபெற்றுள்ளனவோ அந்த ஒரே ஆன்மாவை அறியுங்கள். மற்ற பேச்சுக்களை விடுங்கள். மரணமிலா பெருநிலைக்கான பாலம் இதுவே.

அழகிய காட்சிகள் எவ்வளவோ இருக்கலாம். நமது கண்களும் நல்ல நிலையில் இருக்கலாம். ஆனால் ஒளி இல்லாமல் எதையும் காண முடியாது. எனவே புறத்திலுள்ள அழகிய காட்சிகளுக்கும் நம்மில் உள்ள கண்களுக்கும் ஆதாரமாக இருப்பது அந்த ஒளி. அதுப்போல, வானுலகம் போன்ற புற விஷயங்கள், பிராணன் போன்ற அக விஷயங்கள் அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது ஆன்மா. எனவே அதை அறிய வேண்டும்.

ஆன்மாவை அடைவதற்கான முதற்படியை இந்த மந்திரம் கூறுகிறது – மற்ற பேச்சுக்களை விடுங்கள். தேவையற்ற பேச்சு உயர் வாழ்க்கைக்கு என்றல்ல, சாதாரண வாழ்க்கைக்கும் பெரிய தடையாகும்.

நமது ஆற்றலின் கணிசமான பகுதி பேச்சில் செலவழிகிறது. அதனைச் செலவிடாமல் சேமித்தால், அக வாழ்க்கை போன்ற உயர் தேவைகளுக்காக அவற்றைப் பயன்படுத்த முடியும். '**பேச்சுக் கட்டுப்பாடே ஆன்மீக வாழ்வுக்கு முதற்படி**' என்கிறார் பகவான் ஸ்ரீ சங்கரர்.

மரணமிலாப் பெருநிலையாக இருப்பவர் இறைவன். அவரிடம் நம்மைக் கொண்டு போய்ச் சேர்க்கின்ற பாலமாக அமைவது ஆன்மா.

எனவே ஆன்மாவை அனுபூதியில் உணர வேண்டும். அதற்கு முதற்படியாக அமைவது பேச்சுக் கட்டுப்பாடு.

## இரண்டாம் படி: பிரணவ தியானம்

அரா இவ ரதநாபௌ ஸம்ஹதா யத்ர நாட்ய:
ஸ ஏஷோஅந்தச்சரதே பஹுதா ஜாயமான: |
ஓமித்யேவம் த்யாயத ஆத்மானம்
ஸ்வஸ்தி வ: பாராய தமஸ: பரஸ்தாத் || 6 ||

பொருள்:

ரதத்தின் அச்சில் ஆரக்கால்கள் கூடுவதுப்போல எங்கே நாடிகள் கூடுகின்றனவோ? அங்கே ஆன்மா உள்ளது. அந்த இதயத்தில் ஆன்மா பலவிதமாகச் செயல்படுகிறது. ஓம் என்ற மந்திரத்தின் மூலம் ஆன்மாவை தியானம் செய்யுங்கள். இருளைக் கடந்து ஒளிக்குச் செல்ல விரும்புகின்ற உங்களுக்கு ஆசிகள் நிறைவதாக.

ஓம் என்ற பிரணவ மந்திரத்தை ஜெபித்து ஆன்மாவை தியானம் செய்யுமாறு இந்த மந்திரம் கூறுகிறது.

**ஓங்காரத்தை ஜபிப்பது எப்படி?**

'மணியோசை போலவும், எண்ணெய் ஒழுகுப் போல இடைவிடாமலும், ஓங்காரம் உச்சரிக்கப்படுவதைக் கவனிக்க வேண்டும்.

மணியோசை என்பது அமைதியிலிருந்து மெல்ல, மெல்ல எழுந்து சப்தமாக உயர்கிறது. அதன்பிறகு, மீண்டும், அமைதியில் கரைகிறது. அதுப்போல, ஓங்காரத்தை உச்சரிக்கும் போது, முதலில் மென்மையாக ஆரம்பித்து படிப்படியாக ஒலியை அதிகரித்து, மீண்டும் மென்மையாக்கி நிறுத்த வேண்டும்.

சிறிய இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் உச்சரிக்க வேண்டும். ஒவ்வொரு முறை உச்சரிக்கும் போதும் எண்ணெய்

ஒழுகுப்போல இடைவிடாமல், ஓங்காரம் நிதானமாக ஒலிக்கும்படி, மென்மையாக ஆரம்பித்து படிப்படியாக ஒலியை அதிகரித்து மீண்டும் மென்மையாக்கி நிறுத்த வேண்டும்.

ஆரம்பத்தில் இவ்வாறு ஜெபிக்கப்பழகிக் கொண்டு, அதன் பிறகு அந்த இரண்டு ஓங்கார ஜெபத்திற்கு இடையில் உள்ள இடைவெளியை நிதானமாகக் கவனிக்க ஆரம்பிக்க வேண்டும்.

**தைல தாராம் இவாச்சின்னம் தீர்க கண்டா நினாதவத் ||**
– சாண்டில்ய உபநிஷதம்.

இவ்வாறு ஜபிப்பதன் மூலம் **ஆன்ம தியானம்** கைகூடுகிறது.

ஆன்மா எங்கே இருக்கிறது என்பதற்கும் இந்த உபநிஷதம் ஒரு விடை கூறுகிறது.

நாடிகள் கூடுமிடத்தில் ஆன்மா இருக்கிறது. நாடிகள் கூடும் இடம் என்பது இதயம் ஆகும். நூற்றொரு நாடிகள் இதயத்தில் உள்ளதாகக் **கட உபநிஷதம்** கூறுகிறது.

**சதம் சைகா ச ஹ்ருதஸ்ய நாட்ய: ||** – கட உபநிஷதம்

இதயம் என்பது பிராணனின் இருப்பிடம். உணர்ச்சிகள், செயல்பாடுகள் என்று வாழ்க்கையின் அனைத்தும் இங்கிருந்தே கட்டுப்படுத்தப்படுகின்றன.

விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை மூளை அனைத்துச் செயல்களின் மையமாக இருந்தாலும், நமது சாஸ்திரங்கள் இதயத்தையே மையமாகக் கொள்கின்றன.

'**நான்**' என்று சொல்லும்போதும் சரி, ஆழ்ந்த மனக்கவலை, அளவற்ற சந்தோசம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்போதும் சரி, இதயத்தில் கை வைத்தே நாம் பேசுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

இந்த இதயம் நாம் அறிந்த பௌதீக இதயம் அல்ல. இது மனதின் உணர்ச்சி இதயம். இந்த இதயத்திலிருந்து கண்களுக்குப் புலப்படாத நூற்றொரு நாடிகள் உள்ளன. இவற்றின் மூலமே கட்டளைகள் இடப்படுகின்றன. அதன் வாயிலாக அனுபவங்கள் பெறப்படுகின்றன.

இதயம், நாடிகள் போன்றவை சாதாரணக் கண்களாலோ, கருவிகளாலோ அறியப்படுபவை அல்ல. பிரார்த்தனை, தெய்வீக வாழ்க்கை, ஆழ்நிலைச் சிந்தனைகள் போன்றவை மூலம் தூய்மையும் ஆற்றலும் பெற்ற மனத்தினால் மட்டுமே அறியத் தக்கவை.

**ஆன்மக் காட்சி:**

ஆரம்ப சாதனைகளாலும் (#1:2, 12–13), ஆழ்ந்த சிந்தனையாலும் (#2:1), பிரணவ தியானத்தாலும் (#2:2.6) ஆன்மக் காட்சி அல்லது ஆன்ம அனுபூதி வாய்க்கிறது.

இந்த ஆன்மா யார்? எங்கும் நிறைந்த இறைவனே. அவர் நமது இதயத்தில் ஆன்மாவாக விளங்குகிறார்.

ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்யைஷ மஹிமா புவி ।
திவ்யே ப்ரஹ்மபுரே ஹ்யேஷ வ்யோம்ன்யாத்மா பிரதிஷ்ட்டித:
॥
மனோமய: ப்ராணசரீர நேதா
பிரதிஷ்ட்டிதோஅன்னே ஹ்ருதயம் ஸன்னிதாய ।
ஆனந்தரூபம் அம்ருதம் யத்விபாதி ॥ 7 ॥

பொருள்:

இறைவன் எல்லாம் அறிந்தவர், அனைத்து அறிவு வடிவானவர், ஆனந்த வடிவினர், அழிவற்றவர். இந்த உலகம் யாருடைய மகிமையோ, அந்த இறைவன் ஒளிமயமான இதயத்தினுள் உள்ள வெளியில் ஆன்மாவாக ஒளிர்கிறார்.

மனமாக அமைந்து பிராணனையும், உடம்பையும் வழிநடத்துகிறார்.

இதயத்தில் நிலைபெற்றவராக உடம்பு முழுவதும் வியாபித்திருக்கிறார். விழிப்புணர்வு பெற்றவர்கள் தங்கள் புத்தியால் அவரை அறிகிறார்கள்.

இதயம் பற்றி முந்தின மந்திரம் குறிப்பிட்டது. இது தூய்மையும், ஆற்றலும் பெற்ற மனத்தால் மட்டுமே அறியத்தக்கது என்று அங்கே கண்டோம். இந்த இதயத்தினுள் வெளி ஒன்று உள்ளது. அதில் ஆன்மா உள்ளது.

இது எந்த இதயம்? **'லப்டப்'** என்று துடித்துக் கொண்டிருக்கும் பௌதீக இதயம் அல்ல. இது ஆன்மீக இதயம்.

இதற்கு மூன்று அடையாளங்களை சொல்கிறது நாராயண ஸூக்தம்.

ஒன்று, தொப்புளுக்கு மேலே ஒரு சாண் தூரத்தில் உள்ளது. பௌதீக இதயமும் அதே தூரத்தில்தான் உள்ளது. ஆனால், அது சற்று இடதுபுறம் உள்ளது. ஆனால் ஆன்மீக இதயம் நடுவில் உள்ளது. இரண்டு, சுடர் வரிசையால் சூழப்பட்டுள்ளது. மூன்று அந்த இதயம் பிரகாசிக்கிறது.

இந்த மூன்று அடையாளங்களும் பௌதீக இதயத்துக்கு பொருந்தாது. இந்த ஆன்மீக இதயம்தான் இதயக் குகை.

ஆனால், இதனை நாம் உணர்வதில்லையே என்றாலும், அது அங்கே உள்ளது.

இதுவே புத்தி, அதாவது தீ.

இதைத்தான் இதயத் தாமரை, மூன்றாம் கண், ஞானக் கண் என்றெல்லாம் சாஸ்திரங்களில் கூறப்படுகிறது.

மிகப் பெரும்பாலோரிடம் இந்த ஆன்மீக இதயம் மலராமல் அரும்பாகவே உள்ளது. இதனால்தான் இது குகை, இருண்ட பகுதி, மறைவான இடம் என்றெல்லாம் கூறப்பட்டது.

முதலில் அதை மலரச் செய்ய வேண்டும், அதை உணர வேண்டும்.

இந்த இதயத்தின் உள்ளே உள்ளது ஒரு வெளி: 'தாமரை மொட்டுப் போன்ற இதயம் நாற்புறங்களிலும் நாடிகளால் சூழப்பட்டு தொங்குகிறது. அதன் உள்ளே நுண்ணிய ஆகாசம் உள்ளது. அனைத்தும் அதில் நிலைபெற்றுள்ளன.

சாந்தோக்ய உபநிஷதம் இதனை மிக அழகாகக் கூறுகிறது: 'இந்த உடம்பினுள் தாமரை போன்ற சிறு மாளிகை உள்ளது. அதனுள் அக வெளி உள்ளது. அதில் இருப்பதைத் தேட வேண்டும். (புறத்தில் காணப்படுகின்ற) வெளி எவ்வளவு பெரியதோ இதயத்தின் உள்ளே உள்ள வெளியும் அவ்வளவு பெரியது.

இந்த வெளியில்தான் ஆன்மா உள்ளது.

**அவரை எப்படி அறிவது?**

இரண்டு நிபந்தனைகள் இங்கே கூறப்பட்டுள்ளன ---

1 புத்தியால் அவரை அறிய வேண்டும்.

2 விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

புத்தி என்பது பற்றி ஏற்கெனவே கண்டோம்.

புத்தி அல்லது ஆன்மீக இதயம். இந்த இதயம் மலர வேண்டுமானால், அதற்கான ஆன்மவியல் பாடங்களைப் படித்தும், கேட்டும், அவைகளில் சந்தேகம் தெளிந்தும், அவ்வாறு அடைந்த ஆன்ம ஞானத்தில் திளைத்து, அந்த அறிவின் அனுபூதியில் அவசியம் நிலைப்பெற வேண்டும்.

ஆக, அந்த இதயத் தாமரையின் மலர்ச்சி என்பது, ஆயிரம் இதழ்கொண்ட தாமரை மலர் நமது தலையில் உள்ள சகஸ்ரஹாரத்தில் அறிவாக மலர்வதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறு, அறிவு மலர்ந்தவர்களால் மட்டுமே அந்த தூய அறிவை (ஆன்மாவை) உண்மையில் உணர இயலும்.

**ஆன்மக் காட்சியின் பலன்:**

பித்யதே ஹ்ருதய க்ரந்தி: சித்யந்தே ஸர்வஸம்சயா: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் த்ருஷ்ட்டே பராவரே ॥ 8 ॥

பொருள்:

உயர்ந்தது, தாழ்ந்தது என்று அனைத்துமாக விளங்குகின்ற ஆன்மாவைத் தரிசித்தால் மனக்குழப்பங்கள் அகல்கின்றன. எல்லா சந்தேகங்களும் விலகுகின்றன. வினைப்பயன்களும் அழிகின்றன.

ஆன்ம தரிசனத்தால் என்ன பயன்?

ஒரே வரியில் சொல்வதானால் ஒருவன் தன் சுயத்தை உணர்கின்றான். இதனை மூன்று படிகளாக இந்த மந்திரம் கூறுகிறது.

**1 மனக்குழப்பங்கள் அகல்கின்றன:**

மனம் தெளிவு பெறுகிறது. ஆன்ம ஒளியின் பிரகாசத்தால் மனத்தில் இருண்ட பகுதிகள் எதுவும் இல்லாமல் போய் விடுகின்றன.

ஆழ்மனத்திலுள்ள தீய சம்ஸ்காரங்கள் வெளியேற்றப் படுகின்றன. நல்ல சம்ஸ்காரங்கள் இறையனுபூதிக்கு சாதகமாகச் செயல்படுமாறு தூண்டப்படுகின்றன.

<u>2 சந்தேகங்கள் விலகுகின்றன:</u>

ஆன்ம ஞானத்தின் பேரொளி வீசாமல் சந்தேகங்கள் விலகுவதில்லை. அந்த ஆன்ம அறிவில் '**சந்தேகவாதி அழிகிறான்**' என்கிறது கீதை.

ஆன்மீக வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் சந்தேகங்கள் வருவது இயல்பு. சாஸ்திரங்களின் துணையுடனும், தூயவர்கள் உதவியுடனும் அவற்றை நிவர்த்தி செய்துக் கொள்ளலாம். அப்படியும் எல்லா சந்தேகங்களும் விலகுவதில்லை. அவையும் விலக வேண்டுமானால் ஆன்ம தரிசனம் பெற வேண்டும் என்பதை இந்த மந்திரம் சுட்டிக் காட்டுகிறது.

<u>3 வினைப்பயன்கள் அழிகின்றன:</u>

தீவிரமான மனப்பயிற்சிகளாகிய ஜபம், தியானம், தவம் போன்றவற்றால், ஒருவனின் வினைப்பயனின் வேகம்

கட்டுப்படலாம். ஆனால், அந்த வினையிலிருந்து யாரும் தப்ப முடியாது.

இதனை அன்னை சாரதா தேவி, 'வினைப்பயனை ஒருவன் அனுபவித்தே தீர வேண்டும். யாரும் அதிலிருந்து தப்ப முடியாது. ஆனால், ஓங்கார ஜபம் அதன் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறது. உதாரணமாக, ஒருவனுக்கு முன் வினையின்படி காலை இழக்க வேண்டும் என்று இருந்தால், அவனது காலில் ஒரு முள்ளாவது குத்தவே செய்யும்' என்று கூறுவார்.

அதுவே, அந்த ஆன்ம தரிசனத்தால், வினைப் பயன்களும் அழிந்து விடுகின்றன.

இறைவனை நோக்கிச் செல்வதில் இருந்த தடைகள் அனைத்தும் இவ்வாறு நீங்கப் பெற்றவன் இறைவனை நாடுகிறான்; இறையனுபூதி பெறுகிறான்.

**இறையனுபூதிக்கு ஆன்ம அனுபூதி வேண்டும்:**

ஹிரண்மயே பரே கோசே விரஜம் ப்ரஹ்ம நிஷ்கலம் ।
தச்சுப்ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ் தத்யத் ஆத்மவிதோ விது: ॥
௯ ॥

<u>பொருள்:</u>

பொன்னிறமாக ஒளிர்கின்ற மேலான உறையில் இறைவன் உள்ளார். அவர் குறைகளற்றவர், பகுதிகள் அற்றவர், தூயவர், ஒளிகளுக்கெல்லாம் ஒளியானவர், ஆன்மாவை அறிந்தவர்கள் அவரை அறிகிறார்கள்.

இறையனுபூதிக்கான நிபந்தனை என்ன?

ஆன்ம அனுபூதி. புத்தி அல்லது இதயம் இங்கே பொன்னிறமான உறையாகக் கூறப்படுகிறது.

அதில் ஆன்மாவைக் கண்டு அறிந்தவர்கள் இறைவனைத் தரிசிக்கிறார்கள்.

## ஆன்ம அனுபூதி: தன்மை

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோஅயமக்னி: ।
தமேவ பாந்தமனுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥ 10 ॥

<u>பொருள்:</u>

அங்கே சூரியன் ஒளிர்வதில்லை; சந்திரனும், நட்சத்திரங்களும்கூட ஒளிர்வதில்லை; மின்னல் ஒளிர்வதில்லை. அப்படி இருக்க இந்த அக்கினி எப்படி ஒளிர முடியும்? ஒளிர்கின்ற ஆன்மாவை அனுசரித்தே மற்ற அனைத்தும் ஒளிர்கின்றன. அனைத்தும் அந்த ஆன்ம ஒளியால் ஒளிர்கின்றன.

ஆன்ம அனுபூதி என்பது ஒரு புறக்காட்சி அல்ல என்று இங்கே கூறப்படுகிறது. அனைத்தையும் காண ஒரு விளக்கு தேவை. சூரியனைக் காண விளக்கு தேவையா? தேவையில்லை. ஏனெனில், சூரியனின் ஒளியால்தான் அனைத்தும் ஒளிர்கின்றன. அதுப்போல, ஆன்ம ஒளியால்தான் நாம் அனைத்தையும் காண்கிறோம்.

உலகப் பொருட்களைக் காண்பதற்கு உதவுகின்ற சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அனைத்தும் பிரகாசிப்பது ஆன்ம ஒளியால்தான்.

எனவே ஆன்ம ஒளியைக் காட்ட இந்த ஒளிகளால் இயலாது.

பொதுவாக ஒளி, காட்சி என்றெல்லாம் படிக்கும்போது அது சாதாரணமாக நாம் காண்கின்ற ஒளியைப் போன்றது,

அதை விடப் பேரொளியானது என்றெல்லாம் எண்ணிக் கொள்கிறோம். ஆனால் உண்மை அதுவல்ல.

'ஒரு விளக்கிலிருந்து வருகின்ற ஒளி போன்றதல்ல ஆன்ம ஒளி. அது அறிவு ஒளி. ஆக, அனைத்தையும் நாம் அறிந்துக் கொள்வது என்பது, அந்த அறிவு ஒளியாகிய ஆன்ம ஒளியால்தான். அதன் காரணமாகவே அது ஒளி என்று கூறப்பட்டது'.

இந்த ஒளி ஒரு நிலையைக் குறிக்கிறது என்று கூறுகிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்; 'இந்த நிலையை இருளுக்கும் ஒளிக்கும் இடைப்பட்ட நிலை எனலாம்.

இந்த ஒளி நாம் காண்கின்ற சாதாரண ஒளி அல்ல, பௌதீக ஒளி அல்ல' என்கிறார் அவர்.

ஆன்ம அனுபூதி, இறையனுபூதி என்பது ஓர் அனுபவம். அது உணர வேண்டியது. ஒரு புறக் காட்சிப் போல் அதனைக் காண முடியாது.

அன்பு, இரக்கம், இன்பம் போன்றவற்றை யாரும் காண முடியாது. அனுபவிக்கவே முடியும். அதுப்போல, ஆன்ம அனுபூதியையும் அனுபவிக்க முடியுமே தவிர காண முடியாது.

<u>**இறையனுபூதி:**</u>

**ப்ரஹ்மைவேதம் அம்ருதம் புரஸ்தாத் ப்ரஹ்ம**
**பச்சாத்ப்ரஹ்ம தக்ஷிணதச்சோத்தரேண ।**
**அதச்சோர்த்வம் ச ப்ரஸ்ருதம்**
**ப்ரஹ்மைவேதம் விச்வமிதம் வரிஷ்ட்டம் ॥ 11 ॥**

<u>பொருள்:</u>

முன்னால், பின்னால், வலது பக்கம், இடது பக்கம், கீழே, மேலே என்று பிரபஞ்சம் முழுவதும் மேலான, அழிவற்ற இறைவனே நிறைந்துள்ளார்.

இறைக்காட்சியின் தன்மை என்ன?

எங்கும் இறைவனைக் காண்பது.

இதனை விஞ்ஞானம் என்று விளக்குகிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

'விஞ்ஞானம் என்பது என்ன?

இறைவனைச் சிறப்பாக அறிவது.

விறகில் நெருப்பு உள்ளது என்ற அறிவுதான், என்ற நம்பிக்கைதான் ஞானம்; அந்த நெருப்பில் சோறு சமைப்பது, உண்பது, அதனால் வலிமை பெறுவது விஞ்ஞானம்.

இறைவன் இருக்கிறார் என்று உணர்வில் உணர்வது ஞானம். அவருடன் பேசுவது, அவருடன் கலந்து ஆனந்தம் பெறுவது விஞ்ஞானம். இறைவனே உயிர்களாகவும் உலகமாகவும் ஆகியிருப்பதைத் தரிசிப்பது விஞ்ஞானம்' என்கிறார் அவர். அந்த விஞ்ஞான நிலையை இந்த மந்திரம் விளக்குகிறது.

(விஞ்ஞானம் என்பது ஏதோ இறையியலுக்கு எதிரான விஷயம் போலப் பலரும் எண்ணுகிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. விஞ்ஞானக் கோட்பாடுகள் பரவ ஆரம்பித்த காலத்தில் பல விஞ்ஞானிகள் அப்படி இருந்திருக்கலாம். ஆனால் ஆழமாகப் போகப் போக இயற்கை அவர்களுக்கு சவால்களைக் கொடுத்துக் கொண்டேதான் இருக்கிறது. அதை உணரும் போதே விஞ்ஞானிகள் பலரும் இறைவனின் ஆற்றல்தான் இது என்பதை ஒத்துக் கொள்ளவே செய்கிறார்கள்! இன்னும் மனிதன் ஒரு வரையறுக்கப்பட்ட அளவையுடையவன். அவனுக்கு என்று புத்தி, மனம்போல விசேஷத் தன்மைகள் உள்ளன.

எப்படி இதர மிருகங்களுக்கு இல்லாத இவை தனக்கு வந்தது என்ற விஷயத்தை சிந்திக்கும் மனிதன் பரிணாம

வளர்ச்சி என்று சப்பைக் கட்டு கட்டினாலும் உள்ளூர "இயற்கையின் இத்தனை மர்மங்களை அவிழ்க்கும் திறன் என் புத்திக்கு உள்ளதே அப்படியானால், இத்தனை திறன் வாய்ந்த இதை யார் எனக்குக் கொடுத்திருக்க முடியும்? கண்டிப்பாக இது மனிதத் திறனை விட உயர்ந்த ஒன்றுதான்." என்று எண்ணுகிறான். அவன் இறைவனை உண்டு என்று உணர்கிறான்.

விஞ்ஞானிகளுக்கு மட்டுமல்ல, நாத்திகர்கள் போன்றோருக்கும் இதுப் போல பலப்பல அனுபவங்களின் மூலம் இறைவன் என்ற ஒருவன் இருக்கிறான் என்பது கண்டிப்பாகப் புரிந்தே தீரும்,)

இத்துடன் முண்டக உபநிஷதத்தின் **இரண்டாம் பகுதியின் இரண்டு அத்தியாயங்களும்** முடிந்தது.

# மூன்றாம் பகுதி

## <u>அத்தியாயம் – 1</u>

### நிழலும் நிஜமும்:

ஆன்ம அனுபூதி பற்றி 2.2 இல் தொடங்கிய விளக்கம் இந்த அத்தியாயத்திலும் தொடர்கிறது.

ஆன்மா என்ற ஒன்று, மாறாத ஒன்று, இறைவனின் அம்சமான ஒன்று நம்மில் இருக்குமானால், அந்த ஆன்மாவே நாம் என்பது உண்மையானால், நமக்கு இன்ப துன்பங்கள் ஏன் வர வேண்டும்?

நாம் நிழலை நிஜம் என்று நம்புவதால், என்று இந்த அத்தியாயம் பதிலளிக்கிறது.

நிழல் எது? நிஜம் எது?

**நிழல்** = 'இதுதான் நான்' என்று நாம் கருதிக் கொண்டிருக்கிற 'நான்' = **ஜீவன்.**

**நிஜம்** = உண்மை 'நான்' = **ஆன்மா**

இதனை இரு பறவை உவமையின் மூலம் விளக்க முற்படுகிறது இந்த அத்தியாயம்.

**<u>நம்முள் இருவர்:</u>**

**த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா**
**ஸமானம் வ்ருஷம் பரிஷஸ்வஜாதே ।**
**தயோரன்ய: பிப்பலம் ஸவாத்வத்தி**
**அனச்னன் அன்யோ அபிசாகசீதி ॥ 1 ॥**

<u>பொருள்:</u>

இணைபிரியாத, ஒரே போன்ற இரண்டு பறவைகள் ஒரே மரத்தில் அமர்ந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று பழத்தை ருசித்துத் தின்கிறது. மற்றொன்று தின்னாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது.

**ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்னோ**
**அநீசயா சோசதி முஹ்யமான: ।**
**ஜுஷ்ட்டம் யதா பச்யத்யன்யம் ஈசமஸ்ய**
**மஹிமானமிதி வீதசோக: ॥ 2 ॥**

<u>பொருள்:</u>

ஜீவனும் ஆன்மாவும் ஒரே உடம்பினுள் உள்ளனர். ஜீவன் அதாவது மனிதன் அறியாமையில் மூழ்கி, மோக வசப்பட்டு வருந்துகிறான். வழிபாட்டிற்குரிய தன் ஆன்மாவையும் அதன் மகிமையையும் அவன் எப்போது பார்க்கிறானோ? அப்போது மட்டுமே கவலையிலிருந்து விடுபடுகிறான்.

**<u>நிழலான ஜீவன்:</u>**

உடம்பு, மனம், பிராணன், ஆன்மா என்ற பலவற்றின் தொகுதி மனிதன். இங்கு இரு பறவைகள் உவமையைப் பொருத்திப் பார்ப்போம்.

மரம் = உடம்பு.

பழத்தைத் தின்னும் பறவை = ஜீவன் (மனம்+பிராணன்) = **நிழல்.**

பழத்தைத் தின்னாத பறவை = ஆன்மா = **நிஜம்.**

பொதுவாக, நாம் நம் ஜீவனுடன் அதாவது மனத்துடனும், உடம்புடனுமே ஒன்றுபடுத்திக் காணப் பழகியுள்ளோம்.

அவை இரண்டும் நிழல், உண்மையற்றவை, மாறக் கூடியவை. இவைகள் கொண்டு வரும் அனுபவங்களுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கொள்ளும்போது இன்ப துன்பங்களுக்கு உள்ளாகிறோம். பிறவிச் சுழலில் உழல்கிறோம்.

ஆனால் நம்முள் தோன்றிய ஆன்மா நிஜம். இறைவனிடமிருந்து தோன்றிய பொறி. எனவே இறையம்சம் கொண்டது. அதனுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கொள்ளும்போது, நாம் கவலைகளிலிருந்து விடுபடுகிறோம். நமது மகிமையில் திளைக்கிறோம்.

சுவாமி விவேகானந்தர் மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டுகின்ற உவமை இது. இருபறவைகள் உவமையைக் கூறும்போது, அவர் பரவசத்திற்கே சென்று விடுகிறார் என்றுதான் சொல்ல வேண்டும். அவரது விளக்கத்தைக் காண்போம்:

'உலகின் தத்துவங்களில் மிகச் சிறந்ததும் முழுமை பெற்றதுமான வெளிப்பாட்டையும், இந்துக்கள் சிந்தனை சாரத்தையும், முக்தி பற்றிய மனித குலத்தின் முழுக்கனவையும் வேறு எங்கு இவ்வளவு அழகிய மொழியில் இத்தனை அற்புத உவமையுடன் சொல்லி இருப்பதைக் காண முடியும்?

'ஒரு மரத்தில், அழகிய இறகுகள் கொண்ட இரண்டு பறவைகள் அமர்ந்திருக்கின்றன. இரண்டும் ஒன்றுக் கொன்று மிகுந்த நேசம் பாராட்டுகின்றன. ஒன்று பழங்களைத் தின்கிறது. மற்றொன்று உண்ணாமல் கம்பீரமாக அமைதியாக உட்கார்ந்திருக்கிறது.

கீழ்க்கிளையில் அமர்ந்திருக்கும் பறவை மாறிமாறி இனிப்பும், கசப்புமான பழங்களைத் தின்பதால் அதற்கேற்ப மகிழ்ச்சியும் வேதனையும் அடைகிறது. ஆனால் மேலே அமர்ந்திருக்கின்ற பறவையோ அமைதியாக கம்பீரமாக அமர்ந்திருக்கின்றது. அது இனிப்பையும் உண்ணவில்லை. கசப்பையும் தின்னவில்லை. எனவே சுகம், துக்கம் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தன் மகிமையிலேயே ஆழ்ந்திருக்கின்றது.

## <u>இனிப்பும் கசப்பும்:</u>

'மனிதனின் நிலை இதுதான். வாழ்க்கை தரும் இனிப்பும், கசப்புமான பழங்களை உண்கிறான்; பணத்தை நாடி, புலனின்பங்களைத் தேடி, வாழ்க்கையின் நிலையற்ற இன்பங்களைத் தேடி, பைத்தியக்காரத் தனமாக, வெறித்தனமாக, இடையீடின்றி ஓடிக் கொண்டிருக்கிறான்.

சில இடங்களில், புலன்களைக் கட்டுக்கடங்காத வெறிபிடித்த குதிரைகளுக்கும், அதைக் கட்டுப்பாடில் வைத்திருக்கும் புத்தியை தேர்ப்பாகனுக்கும் ஒப்பிட்டு உபநிடதங்கள் பேசுகின்றன.

'குழந்தைகள் ஒளிமயமான இன்பக்கனவுகளில் மிதப்பதும், பின்பு அவையனைத்தும் வீண் எனக் காண்பதும், வயதானவர்கள் தங்கள் கடந்தகாலச் செயல்களை அசை போடுவதும், எனினும் இந்த மாய வலையிலிருந்து வெளியேறிச் செல்ல முடியாமல் திண்டாடுவதும் – நிலையற்ற இன்பங்களை நாடி ஓடுகின்ற மனிதனின் வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. இதுதான் உலகம்.

'எனினும் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பொன்னான கணங்கள் வரவே செய்கின்றன. ஆழ்ந்த கவலைகளின் நடுவில், இல்லை இல்லை, பெருத்த மகிழ்ச்சியின் நடுவில் சில நேரங்கள் வருகின்றன; சூரிய ஒளியை மறைத்துக் கொண்டிருக்கிற மேகத் திரள் விலக்குவதுபோல, அப்போது தோன்றுகிறது.

அப்பால் உள்ள ஏதோ ஒன்றின் காட்சி நம்மையும் அறியாமல் கண நேரத்திற்கு நமக்குக் கிடைத்து விடுகிறது – அப்பால், புலனின்ப வாழ்க்கைக்கு அப்பால், மறுவுலக இன்பங்கலாகிய கற்பனைகளுக்கு அப்பால், புகழ், பணம்,

பெயறம் சந்ததி முதலிய அனைத்து ஆசைகளுக்கும் அப்பால் உள்ள ஒளியைக் கண நேரம் பெறுகிறோம்.

இந்தக் காட்சியில் கண நேரம் திகைத்து நிற்கிறான் மனிதன்; இனிப்பும், கசப்புமான பழங்களை உண்ணாமல் தன்னுள்ளே நிறைவு கண்டு, ஆனந்தமாக, அமைதியாக, கம்பீரமாக வீற்றிருக்கும் அந்த மற்றொரு பறவையைப் பார்க்கிறான்.

கீதை கூறுவது போல்,

யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாதாத்மத்ருப்தச்ச மானவ: ।
ஆத்மன்யேவ ச ஸந்துஷ்டஸ்தஸ்ய கார்யம் ந வித்யதே ॥

–"யார் ஆன்மாவின் மீது அன்பு செலுத்துபவனாய், ஆன்மாவைத் தவிர வேறொன்றும் வேண்டாதவனாய், ஆன்மாவிலேயே திருப்தி கொண்டவனாய் இருக்கிறானோ? அவன் செய்வதற்கு என்ன வேலை இருக்கிறது?"

**<u>இனிப்பும், கசப்பும்:</u>**

'ஏன் அடிமை போல வேலை செய்ய வேண்டும்? மனிதன் கண நேரம் அந்தக் காட்சி பெறுகிறான், ஆனால் அதை மறந்து விடுகிறான், வாழ்வின் இன்பம் துன்பமாகிய பழங்களை

உண்கிறான். சில காலத்திற்குப் பிறகு ஒரு வேளை மீண்டும் அந்தக் காட்சி அவனுக்குக் கிடைக்கிறது.

அடிமேல் அடி பெற்ற பின்னர் கீழ்ப் பறவை மேல் பறவையை நோக்கி செல்கிறது. பலமான அடி பெறுவதற்குப் பேறு பெற்றிருந்தால், தனது உயிருக்கு உயிராகவும், நண்பனாகவும் இருக்கும் மேற் பறவையின் அருகில், மிக அருகில் செல்கிறது.

அருகில் செல்லச் செல்ல, மேற்பறவையிலிருந்து கிளம்புகின்ற ஒளி தனது இறகுகளையும் முழுக்காட்டி செல்வதை அது காண்கிறது. அதனை இன்னும் நெருங்க நெருங்க, ஆகா, மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்னும் நெருங்கும் போது, தானே கரைந்து போவதுப்போல அது உணர்கிறது. மெள்ளமெள்ள அது முற்றிலும் மறைந்து விடுகிறது.

உண்மையில் கீழ்ப் பறவை வேறல்ல. மேலே அசைந்து கொண்டிருக்கும் இலைகளுக்கு இடையில், அமைதியாக கம்பீரமாக வீற்றிருந்த மேற் பறவையின் பிரதிபிம்பமே அது.

எல்லாம் மேற் பறவையின் மகிமையே.

அதன் மகிமையில் கலந்து இதுவும் பயமின்றி இருக்கிறது. பூரண திருப்தியும் அமைதியும் கம்பீரமும் பெறுகிறது.

**ஆன்ம தரிசனம்**

ஆன்மாவுடன் ஒன்றுபடுத்திக் கண்டால் மட்டுமே மனிதன் துயரங்களிலிருந்து விடுபட முடியும். ஒன்றுபடுத்திக் காண வேண்டுமானால், ஆன்ம தரிசனம் அவசியம். தொடரும் 7 மந்திரங்கள் ஆன்ம தரிசனம் பற்றிக் கூறுகின்றன.

**ஆன்ம தரிசனத்தின் விளைவு**

**யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம்**
**கர்த்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோனிம் ।**
**ததா வித்வான் புண்யபாபே விதூய**
**நிரஞ்ஜன: பரமம் ஸாம்யமுபைதி ॥ 3 ॥**

பொருள்:

பொன்னொளியுடன் ஒளிர்பவனும், தலைவனும், ஆள்பவனும், இறைவனுக்கான வழியாகவும் திகழ்கின்ற ஆன்மாவை எப்போது ஒருவன் பார்க்கிறானோ? அப்போது, அந்த மகான் புண்ணிய, பாவங்களை உதறிவிட்டு துன்பமற்ற மேலான சமநிலையை அடைகின்றான்.

## ஞானியரில் சிறந்தவன்:

ப்ராணோ ஹ்யேஷ ய: ஸர்வபூதைர்விபாதி
விஜானன் வித்வான் பவதே நாதிவாதீ ।
ஆத்மக்ரீட ஆத்மரதி: க்ரியாவான்
ஏஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட்ட: ॥ 4 ॥

பொருள்:

எல்லா உயிர்களிலும் செயல்படுவது பிராணனே என்பதை உணர்பவன் தேவையற்றவற்றைப் பேசுவதில்லை. ஆன்மாவில் களிப்பவனாக, ஆன்மாவில் இன்பம் காண்பவனாக அவன் வேலை செய்கிறான். ஆன்ம ஞானியரில் சிறந்தவன் அவனே.

திரை உள்ளது; திரைப்படம் அதில் அசைகிறது. தண்டவாளம் உள்ளது; ரயில் அதன் மேல் ஓடுகிறது. ஒன்று அசையாமல் சாட்சியாக நிற்கிறது. மற்றொன்று அதன்மீது செயல்படுகிறது. உலகின் இயக்கம் இவ்வாறே நிகழ்கிறது.

இறைவன் சாட்சிப்பொருளாக இருக்கிறார்; இயற்கை, அதாவது பிராண சக்தி அவரது சந்நிதியில் செயல்படுகிறது. ஆன்மா சாட்சிப்பொருளாக நம்முள் இருக்கிறது; ஜீவன் செயல்படுகிறான். இன்ப துன்பங்கள் அனைத்திற்கும் அவனே காரணம்.

இதே ஜீவன் தன்னை ஆன்மா என்று உணரும் போது இயற்கையின் நிகழ்சிகள் எதிலும் ஒட்டாமல் தனியாக நிற்க, சாட்சியாக இருக்க அவனால் முடிகிறது. அவன் ஆன்மாவிலும் இன்பம் காண்கிறான்.

<u>ஆன்ம தரிசனத்திற்கான சாதனை</u>

ஸத்யேன லப்யஸ்தபஸா ஹ்யேஷ ஆத்மா
ஸம்யக் ஜ்ஞானேன ப்ரஹ்மசர்யேண நித்யம் ।
அந்த: சரீரே ஜ்யோதிர்மயோ ஹி சுப்ரோ
யம் பச்யந்தி யதய: க்ஷீணதோஷா: ॥ 5 ॥

<u>பொருள்:</u>

உண்மை, தவம், உறுதியான ஞானம், பிரம்மச்சரியம் ஆகியவற்றைத் தொடர்ந்து நடைமுறையில் கொண்டுவந்தால், இந்த ஆன்மா அடையப்படுகிறது. இந்த ஆன்மா உடம்பின் உள்ளே புனிதமான தூய அறிவு ஒளிப் பொருளாக உள்ளது. புனிதமும், புலக்கட்டுப்பாடும் உடையவர்கள் அதனைக் காண்கிறார்கள்.

**நான்கு சாதனைகள்:**

இங்கே ஆன்ம தரிசனத்துக்கான நான்கு சாதனைகள் கூறப்படுகின்றன.

<u>உண்மை:</u>

விளைவுகளைக் கருத்தில் கொள்ளாமல் பிடிவாதமாக உண்மை பேசுவது என்ற கருத்தில் இதைக் கொள்ளக் கூடாது. பிறர் மனத்தை நோகச் செய்யாத உண்மையையே பேச வேண்டும். அத்தகைய பேச்சை வாக்கினால் செய்கின்ற தவம் என்று வகைப்படுத்துகிறது கீதை.

'உண்மையே எப்போதும் பேச வேண்டும். அதை இனிமையாகப் பேச வேண்டும்; இனியதல்லாதவறைப் பேசக் கூடாது. உண்மை அல்லாத இனியதையும் பேசக் கூடாது. இதுவே சான்றோர்கள் காலம்காலமாகக் கடைப்பிடிக்கின்ற தர்மமாகும்' என்றே மனுவும் கூறுகிறார்.

உண்மை என்பதை உண்மையான வாழ்வு என்ற பரந்த பொருளில் காண்கிறார் ஸ்ரீ சங்கரர். 'உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். உண்மையற்றவற்றை விட

வேண்டும்' என்கிறார் அவர். ஆன்மாவை அடைவதற்கு அனுகூலமானவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அனுகூலமாக இல்லாதவற்றை விட வேண்டும்.'

## தவம்:

மனத்திற்கும், புலன்களுக்கும் பயிற்சி அளித்தல், புற உலகை விட்டு, அக உலகை நாடுமாறு மனத்தையும், புலன்களையும் ஒருமைப்படுத்துவது மிக உயர்ந்த தவம் என்கிறது மஹா பாரதம்.

## உறுதியான ஞானம்:

ஞானம் உறுதியானதாக இருக்க வேண்டும். 'ஆன்மா உண்மை, மற்ற எதுவும் உண்மையல்ல. நான் ஆன்மாவை நாடிச் செல்கிறேன். வேறு எதிலும் எனக்கு நாட்டமில்லை' என்ற அறிவு எப்போதும் உறுதியாக இருக்க வேண்டும். இதில் எந்த சஞ்சலமும் கூடாது. இந்த உறுதியை அடிப்படையாகக் கொண்டே ஆன்மீக வாழ்வு அமைக்கப்படுகிறது.

<u>பிரம்மச்சரியம்:</u>

ஒன்றன் கீழ் ஒன்றாக துளைகள் உள்ள ஒரு ஜாடியைக் கற்பனை செய்வோம். மேலே உள்ள துளை வழியாக வேகத்துடன் நீர் பாய வேண்டுமானால் கீழே உள்ள துளைகள் அடைபட்டிருக்க வேண்டும். தியானத்தில் மனம் மேலே உயர்த்தப்படுகிறது; அது முழுமையாக உயர் லட்சியங்களை நோக்கிச் செல்ல வேண்டுமானால் காமம் போன்ற கீழான உணர்ச்சி வேகங்களின் வழியாகச் செல்வதிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். எனவே பிரம்மச்சரியம் மிகவும் அவசியம்.

உண்மை, தவம், பிரம்மச்சரியம் போன்றவற்றின் விளைவாக நாம் பெறுவது புனிதம். 'மண்ணிலும் சரி, விண்ணிலும் சரி, மிக உயர்ந்த, மிகவும் தெய்வீகமான ஆற்றல் புனிதமே' என்கிறார் சுவாமி விவேகானந்தர். இவ்வாறு புனிதமும், புலக்கட்டுப்பாடும் பெற்றவர்கள் ஆன்மாவைக் காண்கிறார்கள்.

எங்கே? புத்தியினால்.

இதயக்குகை பற்றி ஏற்கெனவே (#2:2.7) இல் கண்டோம். இதய குகை என்றால் என்ன? அதுவே, புத்தி. அங்கே ஆன்மாவை ஒளிப்பொருளாகக் காண்கிறார்கள்.

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு க1ஸ்சித்3யத1தி1 ஸித்3த4யே |
யத1தா1மபி ஸித்3தா4னாம் க1ஸ்சின்மாம் வேத்2தி2 த1த்1த்1வத1: ||3||

<u>பகவத்கீதை 7.3:</u>

மனிதப் பிறப்பைப் பெற்றவர்களில் ஒரு சிலர் மட்டுமே உண்மையில் முழுமை பெற முயல்கிறார்கள். அவ்விதம் முயற்சிக்கின்ற ஆயிரக்கணக்கான யோகிகளில் என்னையே மேலான கதியாகக் கொண்ட யாரோ ஒருவன் மட்டும்தான் என்னை தத்வரீதியாக அறிகின்றான்.

**உண்மையே வெல்லும்:**

**ஸத்யமேவ ஜயதே நான்ரிதம்**
**ஸத்யேன பந்தா விததோ தேவயான: I**
**யேனாக்ரமந்தி ரிஷயோ ஹி ஆப்தகாமா**
**யத்ர தத்ஸத்யஸ்ய பரமம் நிதானம் II 6 II**

<u>பொருள்:</u>

உண்மையே வெல்லும். உண்மையற்றது வெல்லாது. ஆன்மீகப் பாதை என்பது உண்மையாலேயே அமைந்துள்ளது.

ஆசைகள் நிறைவேறப் பெற்ற முனிவர்கள் அதன் வழியாகவே செல்கிறார்கள். உண்மையான மேலான இருப்பிடம் அங்கேயே உள்ளது.

('**ஸத்யமேவ ஜயதே**' என்ற வாக்கியமே அசோக சக்கரத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாசகமாகும். அந்த வாக்கியம் இந்த உபநிஷதத்தில் இருந்தே எடுத்துப் பொறிக்கப்பட்டுள்ளது. நாம் தமிழில் அரசு இலச்சினையில் இதையே '**வாய்மையே வெல்லும்**' என்று பொறித்துள்ளோம்.

குழந்தைகளை சிறு வயது முதலே, இதுப்போல வேத வாக்கியங்கள், அரிச்சந்திரன் கதைகள் போன்றவற்றைக் கூறி வளர்த்தால், அவர்களுக்கு தீய வழிகளில் நாட்டம் உண்டாகாமலும், நல்ல வழிகளில் ஈடுபாடும் உண்டாகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

நம் நாட்டு வேதங்கள், புராண நூல்களில் மனிதனுக்கு நற்செயல்கள், பழக்கங்களில் ஈடுபாட்டைக் கொண்டு வரும் நன்னெறிக் கருத்துகள் (MORAL SCIENCE) நிறைய உள்ளன. ஆனால் அந்தக் காலங்களில் ஏதோ பெயரளவிலேனும் மாரல் சயின்ஸ் வகுப்புகள் நடத்தப்பட்டன! இப்போது அதுவும் நடப்பதாகத் தெரியவில்லை! வருங்காலங்களில் கண்டிப்பாக இவை பள்ளிகளில் கட்டாயப் பாடமாக வைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்)

**ஆன்ம தரிசனம் எங்கே வாய்க்கிறது?**

**ப்ருஹச்ச தத் திவ்யம் அசிந்த்யரூபம்**
**ஸூக்ஷ்மச்ச தத் ஸூக்ஷ்மதரம் விபாதி |**
**தூராத் ஸுதூரே ததிஹாந்திகே ச**
**பச்யத்ஸு இஹைவ நிஹிதம் குஹாயாம் || 7 ||**

<u>பொருள்:</u>

இந்த ஆன்மா பெரியது, ஒளிமயமானது, சிந்தனைக்கு எட்டாத வடிவம் உடையது, நுண்ணியவற்றுள் எல்லாம் நுண்ணியது. அது தூரமானவற்றுள் தூரமானது, அதே வேளையில் இங்கே மிக அருகிலும் இருக்கிறது. இதயக் குகையில் ஒளிர்வதாக மகான்கள் அதனை இந்தப் பிறவியிலேயே காண்கிறார்கள். இறைவன் என்ற மாபெரும் ஜோதியின் சுடரே ஆன்மாவாக நம்முள் உள்ளது என்று #2:1.1 – இல் கண்டோம்.

இறைவன் என்ற நிலையில் எல்லாவற்றையும் கடந்து இருப்பதால், நம்மிலிருந்து மிகத் தொலைவில் இருப்பவராகக் கூறப்படுகிறார். அதே வேளையில், ஆன்மா என்ற நிலையில் நமது இதயக்குகையில் இருப்பதால் மிக அருகிலும் உள்ளார்.

இந்த ஒளிக்குகையிலேயே ஆன்ம தரிசனம் வாய்க்கிறது. ஒளிப் பொருளாக அதனை மகான்கள் காண்கிறார்கள்.

ஆன்ம தரிசனம் என்பது ஏதோ மரணத்திற்குப் பின்னால் கிடைக்கப் பெறுகிற அனுபவம் அல்ல, வாழும்போதே பெறப்படும் அனுபவம் அது. அதை உணர்த்தவே '**இந்தப் பிறவியிலேயே**' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

(இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள பற்பல ஜீவராசிகளில் மனிதன் என்ற ஒரு ஜீவராசிக்கு மட்டுமே புத்தி, மனம் போன்ற நுண்ணிய தன்மைகள் கொடுக்கப்பட்டுள்ளன!

இதர ஐந்தறிவுள்ள ஜீவராசிகள் வரையிலும் அதிகமாக உணர்தல் என்ற தன்மை மட்டிலுமே இருக்குமே தவிர, பெரும்பாலும், அதிகமாக மனம் என்ற தன்மையும், புத்தி என்ற தன்மையும் கையாளாமல்தான் இருக்கின்றன. ஆனால், மனிதனிடம் உள்ள பகுத்தறியும் தன்மையான அந்த புத்தியால்தான் மனிதன் பல கண்டு பிடிப்புக்களை செய்கிறான்! சாதனைகள் படைக்கின்றான்.

ஆதி மனிதன் தன் பிற்கால சந்ததிகள் எல்லாம் இவ்வளவு ப்ரம்மாண்டங்களைக் கண்டறிவார்கள் என்று நம்பியிருக்க மாட்டான்!

ஆக பிரபஞ்சத்தில் உள்ள ரகசியங்களை எல்லாம் அவிழ்க்கும் புத்தியை உடைய மனிதன் இன்னும் தனக்கு மட்டும் அத்தனை சக்தி எங்கிருந்து வந்தது? என்று எண்ணுவதும் இயற்கையே!

இதன் விடையாக இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்கிய இறைவனின் அறிவுப் பிரகாசம் அதிகமாக மனிதனில் பிரகாசிக்கின்றது என்பதைத வைத்துத்தான் அரிது, அரிது மனிதனாகப் பிறப்பது அரிது என்றனர் நம் முன்னோர்கள். அந்த அறிவே ஆன்மா. அந்த அறிவே ஆகாயம் என்ற வெட்டவெளி, அந்த அறிவே அருட்பெருஞ்சோதி.

## ஆன்ம தரிசனம்:

<u>மூன்று நிபந்தனைகள்</u>

ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா
நான்யைர்தேவைஸ் தபஸா கர்மணா வா ।
ஜ்ஞானப்ரஸாதேன விசுத்தஸத்வஸ்–
ததஸ்து தம் பச்யதே நிஷ்கலம் த்யாயமான: ॥ 8 ॥

<u>பொருள்:</u>

அந்த ஆன்மா கண்களாலோ, வாக்கினாலோ, மற்ற புலன்களாலோ அறியப்படுவதில்லை; தவத்தாலோ கர்மங்களாலோ அடையப்படுவதில்லை. புத்தியின் தெளிவால் தூய்மையும் நுண்மையும் பெற்ற மனத்தால் அதனைத் தியானிப்பவன் பகுதிகள் அற்றதான அந்த ஆன்மாவைக் காண்கிறான்.

இங்கே ஆன்ம தரிசனத்திற்கான மூன் நிபந்தனைகள் கூறப்படுகின்றன. இந்த நிபந்தனைகளின் மூலம், தவம் போன்ற சாதனைகளை எச்சரிக்கையுடன் அணுகுமாறு இந்த மந்திரம் அறிவுறுத்துகிறது.

1 புலன்களால் ஆன்மா அடையப்படுவதில்லை. ஏற்கெனவே (#2:2.1) இதனை நாம் விரிவாகக் கண்டோம். புலன்கள் புறவுலகை அறிவதற்கான கருவிகள். எனவே அகவுலக சம்பந்தமான எதையும் அவற்றால் அறிய இயலாது.

2 தவத்தாலோ கர்மங்களாலோ அடையப் படுவதில்லை.

தவத்தால் ஆன்மா அடையப்படுவதாக #3:1.5 ஆம் மந்திரம் கூறியது. தவத்தால் ஆன்மா அடையப்படுவதில்லை என்று இங்கே கூறப்படுகிறது. முரண்பாடு போல் தோன்றும் இதனைப் புரிந்து கொள்வது அவசியம்.

பகவத்கீதை தவத்தை சாத்வீக தவம், ராஜச தவம், தாமச தவம் என்று மூன்றுவிதமாகப் பிரிக்கிறது. பாராட்டு, புகழ், மதிப்பு இவற்றிற்காக ஆடம்பரத்துடன் செய்யப்படுகின்ற தவம் ராஜசமானது.

அது உறுதியற்றது, தற்காலிகமானது. முட்டாள்தனமாகத் தன்னைத் துன்புறுத்தியோ பிறரை அழிப்பதர்காகவோ செய்யப் படுகின்ற தவம் தாமசமானது. இந்த இரண்டு வகைத் தவங்களும் மனிதனை கீழ் நிலைக்குத் தள்ளுகின்றன.

சாத்வீகத் தவம் மனிதனை இறைநெறியில் செலுத்துகிறது. இதற்கு நான்கு அடிப்படை நிபந்தனைகளை கீதை கூறுகிறது – 1 உடம்பை வருத்தாமல் செய்வது 2 பலனை விரும்பாதிருத்தல் 3 யோகத்தில் நிலைபெற்றிருத்தல் 4 ஆழ்ந்த சிரத்தை. இந்த நான்கு நிபந்தனைகளுடன் செய்யப்படுகின்ற தவம் ஆன்ம தரிசனப் பாதையில் ஒருவனை அழைத்துச் செல்கிறது. இவையின்றிச் செய்யபடுகின்ற தவங்களால் ஆன்மாவை அடைய இயலாது.

இதுப்போலவே செயல்களையும் மூன்று விதமாகக் கொண்டு சாத்வீகச் செயல் ஒருவனை இறைநெறியில் அழைத்துச் செல்கிறது என்கிறது கீதை. பலனில் ஆசை வைக்காமல், பற்றின்றி, விருப்பு வெறுப்பு இன்றி, தனக்கென்று விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வது சாத்வீகச் செயல் என்று அது விளக்குகிறது.

அத்தகைய செயல் ஒருவனை இறைநெறியில் அழைத்துச் செல்கிறது. ஆசை வசப்பட்டு, தன் முனைப்புடன் மிகவும் பாடுபட்டு செய்வது ராஜசச் செயல். செயலின் விளைவையும் நஷ்டத்தையும் துன்பத்தையும் சொந்த ஆற்றலையும் எண்ணிப் பாராமல் மனமயக்கத்தால் செய்யப்படுவது தாமசச் செயல்.

இத்தகைய செயல் ஆன்மீகப் பாதையில் ஒருவனை அழைத்துச் செல்லாது.

3 எதனால் ஆன்ம தரிசனம் வாய்க்கிறது?

மூன்று படிகளாலான ஒரு பாதையை இந்த மந்திரம் காட்டுகிறது. – 1 புத்தியின் தெளிவு 2 தெளிந்த புத்தியால் தூய்மை பெற்ற மனம் 3 தூய மனத்துடன் செய்யப்படுகின்ற தியானம்.

**மூன்று படிகள்:**

ஆன்ம தரிசனத்திற்கான மூன்று படிகள் பற்றிய விளக்கம் இங்கே

<u>1 புத்தியின் தெளிவு:</u>

அறிவு மூன்று நிலைகளில் செயல்படுகிறது – இயல்புணர்ச்சி (INSTINCT), அறிவு (INTELLECT) மற்றும்

உள்ளுணர்வு (INTUITION). இதில் உள்ளுணர்வே புத்தி எனப்படுகிறது. கற்றறிவு, கேட்டறிவு போன்ற எந்தப் புற உபகரணங்களின் துணையும் இன்றி உணர்வின் ஆழங்களிலிருந்து எழுகின்ற அறிவு இது.

இது ஒரு போதும் பொய்ப்பதில்லை. இதுவே உள்ளுணர்வு.

இதுவே சாஸ்திரங்களில் புத்தி, தீ:, இதயத் தாமரை, ஞானக் கண், நெற்றிக் கண் என்றெல்லாம் பேசப்படுகிறது. இந்த உள்ளுணர்வு விழிப்பதையே புத்தியோகம் என்று கீதை கூறுகிறது.

மனசஸ்து பரா புத்தி – கீதை (#2.49–58)

இதயத் தூய்மையினாலும், பிரார்த்தனையாலும், காயத்ரி போன்ற மந்திர ஜபங்களாலும் புத்தி விழிப்படைகிறது. புத்தி விழிப்புற்றவன் தன் இதயத்தில் பேரொளியைக் காண்கிறான்; அதனால் அவனது அறியாமை அகல்கிறது என்று கீதை கூறுகிறது.

'விழிப்படைந்த புத்தியைத் தேரோட்டியாகக் கொண்டவனின் பயணமே தனது லட்சியத்தை அடைகிறது; அவன் இறைவனை அடைகிறான்.

விழிப்படையாத புத்தியைத் தேரோட்டியாகக் கொண்டவனின் பயணம் லட்சியத்தை அடைவதில்லை;

அவன் உலகியலில் உழல்கிறான்' என்று இதனை விளக்குகிறது கட உபநிஷதம்.

புத்தி விழிப்புறுவதே இங்கு புத்தியின் தெளிவு என்று கூறப்பட்டது.

## 2 தெளிந்த புத்தியால் தூய்மை பெற்ற மனம்:

மனம் தூய்மை பெறுவது எப்படி? இதற்கு, ஆசைகளை விட வேண்டும், பற்று கூடாது, நல்லவற்றை நினைக்க வேண்டும் என்றெல்லாம் பல வழிகளைக் கூறுவதுண்டு.

இவையெல்லாம் வழிகள்தான். ஆனால் எத்தனை ஆசைகளை விடுவது? எப்படி விடுவது? ஆசைகளை ஒவ்வொன்றாக விட்டுக் கொண்டிருந்தால் அதற்கே ஒரு பிறவி போதாது. எனவே இவையெல்லாம் வழிகள்தான் என்றாலும் சிறந்த வழிகள் அல்ல. சிறந்த வழியை இந்த மந்திரம் கூறுகிறது. புத்தியை விழிப்புறச் செய்ய வேண்டும்.

புத்தி விழிப்புற்றால் மனம் தானாக வசப்படுகிறது; தூய்மை பெறுகிறது. ஏனெனில் 'மனத்தை விட ஆற்றல் வாய்ந்தது புத்தி' என்கிறது கீதை. எனவே புத்தி விழித்தெழும் போது மனம் தானாக வசப்படுகிறது; தூய்மை பெறுகிறது.

<u>3 தியானம்:</u>

இவ்வாறு புத்தி விழிப்புற்று, அதனால் தூய்மை பெற்ற மனத்தை தியானத்தில் ஈடுபடுத்தும் போது ஆன்மக் காட்சி வாய்க்கிறது.

**ஆன்ம தரிசனத்திற்கான கருவி மனம்:**

ஏஷோஅணுராத்மா சேதஸா வேதிதவ்யோ
யஸ்மின் ப்ராண: பஞ்சதா ஸம்விவேச ।
ப்ராணைச்சித்தம் ஸர்வமோதம் ப்ரஜானாம்
யஸ்மின் விசுத்தே விபவத்யேஷ ஆத்மா ॥ 9 ॥

<u>பொருள்:</u>

நுண்ணியதான இந்த ஆன்மாவை மனத்தால்தான் அறிய வேண்டும். உடம்பில் பிராணன் ஐந்து விதமாகச் செயல்படுகிறது. உயிரினங்களின் மனம் முழுவதும் புலன்களால் வியாபிக்கப்பட்டுள்ளது. இந்த மனம் தூய்மை பெறும் போது ஆன்மா அங்கே ஒளிர்கிறது.

அகவுலகம் சம்பந்தமான எதையும் சாதிப்பதற்கு நம்மிடம் உள்ள ஒரே கருவி மனம் மட்டுமே. ஆன்மக் காட்சி பெறுவதற்கும் இங்கே அந்த மனமே கருவியாக வைக்கப்பட்டுள்ளது. எந்த மனம் ஆன்மாவைக் காட்ட வல்லது?

கட்டாயமாக சாதாரண மனம் அல்ல. முந்தின மந்திரங்களில் கூறியது போல் உண்மை, தவம், உறுதியான அறிவு, பிரம்மச்சரியம் போன்றவற்றால் புனிதம் பெற்ற மனம். தெளிவு பெற்ற புத்தியால் தூய்மை பெற்ற மனம். இத்தகைய மனம் '*தீபம் போன்றது, ஆன்மாவின் மூலைமுடுக்குகளை எல்லாம் காட்டக் கூடியது*' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆன்மக் காட்சிக்கான கருவி மனமாக இருந்தாலும் சாதாரண நிலையில் அது அந்தத் தகுதி வாய்ந்ததாக இல்லை. ஏனெனில் அது 'புலன்களால் வியாபிகப்பட்டுள்ளது. புலன்கள் புறவுலகிலிருந்து கொண்டு வருகின்ற அறிவால் நிறைந்துள்ளது.

புத்தி விழிப்புறும் போது, அதன் ஒளியால் மனம் இந்த அறிவிலிருந்து விடுபடுகிறது. 'புத்தி விழிப்புற்றவன் தன் இதயத்தில் பேரொளியைக் காண்கிறான்; அதனால் அவனது அறியாமை அகல்கிறது' என்று இதையே கீதை கூறுகிறது.

உடம்பும் மனமும் இரண்டு கருவிகள். மனத்தைத் தூய்மைப்படுத்துவது பற்றிக் கண்டோம். உடம்பும் தகுதியானதாக இருக்க வேண்டுமென்று இந்த மந்திரம் கோடி காட்டுகிறது.

உடம்பை எவ்வாறு தகுதியானதாக வைத்துக் கொள்வது? பிராணன் (மேல் நோக்கிய இயக்கம்), அபானன் (கீழ் நோக்கிய இயக்கம்), வியானன் (எல்லாப் பக்க இயக்கம்), உதானன் (மரண வேளையில் உயிர் வெளியேற உதவுதல்), ஸமானன் (உணவு ஜீரணம், உணவை ரத்தமாக போன்றவையாக மாற்றுதல்) என்று பிராணன் ஐந்து விதமாக நம் உடம்பில் செயல்படுகிறது.

பிராணனைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உடம்பையும் நாம் கட்டுக்குள் கொண்டு வர முடியும். 'எல்லையற்ற ஆற்றலின் கதவை இது நமக்குத் திறந்து விடுகிறது. உதாரணமாக ஒருவன் ஒருவேளை பிராணனை முற்றிலுமாக அறிந்து அதைக் கட்டுப்படுத்தி விட்டால் உலகின் எந்த சக்திதான் அவனுடையது ஆகாது?' என்று கேட்கிறார் சுவாமி விவேகானந்தர்.

**மனத்தின் ஆற்றல்:**

பிராணனை முழுவதுமாகக் கட்டுப்படுத்திய தெளிவு பெற்ற மனத்தின் ஆற்றல் பற்றி இந்த மந்திரம் கூறுகிறது:

யம் யம் லோகம் மனஸா ஸம்விபாதி
விசுத்தஸத்வ: காமயதே யாம்ச்ச காமான் ।
தம் தம் லோகம் ஜாயதே தாம்ச்ச காமான்ஸ்–
தஸ்மாத் ஆத்மஜ்ஞும் ஹ்யர்ச்சயேத் பூதிகாம: ॥ 10 ॥

<u>பொருள்:</u>

தூய்மையும் நுண்மையும் பெற்ற மனத்தால் ஒருவன் எந்தெந்த உலகங்களை நினைத்திருக்கிறானோ அந்தந்த உலகங்களை அடைகிறான்; என்ன பொருட்களை விரும்புகிறானோ அந்தப் பொருட்களைப் பெறுகிறான். அதனால் செல்வத்தை விரும்புபவன் ஆன்மஞானியைப் போற்ற வேண்டும்.

மனத்தால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை – சாதாரண மனத்தால் அல்ல, தூய்மையும் நுண்மையும் பெற்ற மனத்தால். அத்தகைய மனத்தைப் பெறுவதற்கு ஓர் எளிய வழி

இங்கே கூறப்படுகிறது – ஆன்மாவை உணர்ந்த மகான்களைப் போற்றுதல். மகான்களின் அருளால் சாதிக்க இயலாதது எதுவும் இல்லை.

(பிராணனைக் கட்டுப்படுத்தும் செயல்பாடுகள் உடல் ரீதியிலானவை. இவையே மிகக் கடினமான யோக முறைகளால் மட்டுமே செயல்படுத்த இயலும் என்பது வெளிப்படை.

இதையும் தாண்டி மனத்தைக் கட்டுப்படுத்துதல்!! ஒரு மனிதன் ஒரு நாளில் தூங்கும் நேரம் தவிர மீதமுள்ள அனைத்து நேரத்திலும் இயங்கக் கூடிய ஒரு பெரிய இயந்திரம் மனமாகத்தான் இருக்க முடியும்! இன்னும் மனம் என்பது அலைபாயும் தன்மை உடைய ஒன்று!

மனோவேகம் என்று சொல்வார்கள் அல்லவா? அதேப்போல்தான்!

நீங்கள் அமெரிக்க நாட்டுக்கு விமானத்தில் செல்ல ஒன்றரை நாட்கள் ஆகலாம். ஆனால் மனம் அங்கு சென்று திரும்ப பத்தே வினாடிகள் போதும். இன்னும் நீங்கள் எந்த இயந்திரத்தையும் எப்படி வேண்டுமானாலும் இயக்கலாம் ஆனால், மனத்தை உங்கள் விருப்பப்படி இயக்குவது என்பது மிக மிகக் கடினம்! நீங்கள் இதை நினைக்காதே என்று உங்கள் மனதுக்குக் கட்டளையிட்டால் அது அதை மட்டுமே அதிகமாக நினைக்கும் தன்மை உடைய ஒன்றாகும்.

அதனால்தான் மனம் ஒரு குரங்கு என்று கூறுகிறார்கள். இன்னும் ஆன்மீக சாதனைகள் புரிந்த ரிஷிகள், முனிவர்கள் எல்லோரும் உண்மையில் முதற்படியாக மனத்தைக் கட்டுப்படுத்தியவர்களாகவே இருப்பார்கள்! இல்லாதவர்கள் எந்த ஆன்மீக சாதனையையும் புரிதல் இயலாது)

இத்துடன் முண்டக உபநிஷதத்தின் மூன்றாம் பகுதியின் முதலாம் அத்தியாயம் முடிவுற்றது.

# மூன்றாம் பகுதி

## அத்தியாயம் – 2

### இறையனுபூதி:

சாதாரண அறிவு உலக இன்ப, துன்பங்களில் ஆழ்த்தி மீண்டும், மீண்டும் பிறவிக்கே வழிவகுக்கும். உயர் அறிவு இறைநெறியைக் காட்டும். அந்த இறைவனைக் காட்டித் தரும் (#1:1). எனவே சாதாரண அறிவை விட்டு, விட்டு, உயர் அறிவை நாட வேண்டும்.

இந்த உலகம் உண்மையல்ல, என்பதை உணர்ந்துக் கொண்டு, இறைவனை நாட வேண்டும். இதுவே துறவு. இதற்கு தவம், நல்லொழுக்கம், ஆராய்ச்சி, பற்றின்மை, தெளிவான நோக்கம், குருவை நாடுதல் ஆகியவைகள் முதற்படிகள் (#1:2)

நாம் தெய்வீகமானவர்கள் என்று ஆழ்ந்து சிந்திப்பது பற்றி #2:1 லும், இறையனுபூதிக்கு ஆன்ம அநுபூதி அவசியம் என்பது பற்றி #2:2 லும் கண்டோம்.

இந்த இறுதி அத்தியாயத்தில் **இறையனுபூதி** என்னும் இறுதிநிலை பற்றி காண்கிறோம்.

**முதற்படி:**

<u>ஆன்ம ஞானம்</u>

எங்கும் நிறைந்த இறைவனே நம்மில் ஆன்மாவாக விளங்குகிறார். என்று ஏற்கெனவே (#2:2.7) கண்டோம். அந்த ஆன்ம தரிசனம் முதற்படி. இதன் மூலம் ஒருவன் தன்னை உடம்பிற்கு அப்பாற்பட்டவனாக, மனதிற்கு அப்பாற்பட்டவனாக, ஓர் அறிவு ஒளிப் பொருளாகத் தன்னை உணர்கிறான். இவனே, இறைவனை, அந்த அறிவை அனுபூதியில் அறியத் தக்கவன்.

**ஸ வேதைதத் பரமம் ப்ரஹ்ம தாம**
**யத்ர விச்வம் நிஹிதம் பாதி சுப்ரம் ।**
**உபாஸதே புருஷம் யே ஹ்யகாமா–**
**ஸ்தே சுக்ரமேதத் அதிவர்த்தந்தி தீரா: ॥ 1 ॥**

<u>பொருள்:</u>

யாரிடம் பிரபஞ்சம் நிலைபெற்றுள்ளதோ, மேலான இருப்பிடமும், புனித ஒளியுடன் பிரகாசிப்பவருமான அந்த இறைவனை ஆன்ம ஞானிகள் அறிகின்றனர். ஆசையற்ற, விழிப்புணர்வு பெற்ற அவர்கள் மட்டுமே, அவரை வழிபட்டு, பிறவிகளற்ற நிலையை அடைகிறார்கள்.

ஆன்ம ஞானம் ஏன் அவசியம்?

அழியாத அறிவை, அந்த ஆன்மாவை, இறைவனை நாடுபவனுக்கு, அழியக்கூடிய புற விசய, சுகங்களான மற்ற ஆசைகள் தேவையில்லை. ஆனால், ஆசைகளை விடுவது என்பது அவ்வளவு சுலபம் அல்ல. அதே சமயம், ஒவ்வோர் ஆசைகளாக விடுவது என்பதும் சாத்தியம் அல்ல.

இங்கே ஆன்ம தரிசனம் மட்டுமே, ஆசைகளை ஒழிப்பதாக கூறப்படுகிறது. ஆன்ம உணர்வு அடையப் பெற்றவன், தன்னை ஆன்மாவாக உணர்ந்தவன் மற்ற ஆசைகள் அனைத்தையும் விட்டு, விலகி விடுகின்றான்.

காமான்ய: காமயதே மன்யமான:
ஸ காமபிர்ஜாயதே தத்ர தத்ர ।
பர்யாப்த காமஸ்ய க்ருதாத்மனஸ்து
இஹைவ ஸர்வே பிரவிலீயந்தி காமா: ॥ 2 ॥

<u>பொருள்:</u>

யார் ஆசைவசப்பட்டு, ஆசைக்குரிய பொருட்களைப் பற்றி அடிக்கடி சிந்திக்கிறானோ? அவன் அந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, இங்கும், அங்கும் என மீண்டும், மீண்டும் பிறக்கிறான். அந்த ஆசைகளைப் பற்றி அறியப்பெற்ற ஆன்ம ஞானிக்கோ, அதன் உண்மைத் தன்மை உணரப்பட்டதால், அவனது எல்லா ஆசைகளும் இங்கேயே ஒடுங்கி விடுகின்றன.

(உலகின் மோட்சம் தொடர்பான அனைத்துத் தத்துவங்களின் சாரமாக இதைக் கொள்ளலாம்! இந்தத் தத்துவ சாரத்தை முதன்முதலில் உரைத்ததும் நம் சனாதன தர்மமே என்றும் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம். புத்தர் பெருமான் '**ஆசையே துன்பத்துக்கு வழிகோலும்**' என்று கூறியது மீண்டும், மீண்டும் பிறவிச் சுழலில் மாட்டிக் கொண்டு அவதிப்படும் துன்பத்தையே!

ஆகவே, அந்தத் துன்பம் நீங்க வேண்டுமென்றால் பிறவாமை வேண்டும் என்ற தத்துவமே இங்கு **முக்தி, மோட்சம், பிறவாநிலை** என்று பல்வேறு பெயர்களில் சொல்லப்படுகிறது.

ஆசைகள் இல்லாத் மனிதனுக்கு துன்பமும் இல்லை. இதை சொல்வது மிக எளிது. பின்பற்றுவது மிக மிகக் கடினம்.

சரி எந்த விதமான உலகியல் ஆசையும் இல்லாமல் ஒரு மனிதன் தனித்து வீட்டிலோ அல்லது காட்டிலோ வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று கொள்ளுங்கள்! அவனுக்கும் கூட ஆசைகள் இருக்கும்! ஏதேனும் உணவில் விருப்புடன் இருப்பான்.

அந்த உணவு கிடைத்தால் மகிழ்வதும் இல்லையென்றால் துன்பப்படுவதும் அவன் வழக்கமாக இருக்கும்!

**ஆன்ம ஞானத்திற்கான நிபந்தனைகள்:**

இறையனுபூதிக்கு முதற்படி ஆன்ம ஞானம். அதைப் பெறுவதற்கான சில நிபந்தனைகளை 3 – 4 மந்திரங்கள் கூறுகின்றன.

**மன ஏக்கம்:**

நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ
ந மேதயா ந பஹுனா ச்ருதேன ।
யமேவைஷ வ்ருணுதே தேன லப்ய–
ஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனும் ஸ்வாம் ॥ 3 ॥

<u>பொருள்:</u>

சொற்பொழிவுகளாலோ, புலமையாலோ, பலவற்றைக் கேட்பதாலோ இந்த ஆன்மாவை அடைய இயலாது. யார் அதை அடைவதற்காக மன ஏக்கம் கொள்கிறானோ? அவன் மட்டுமே அதனை அடைகிறான்.

அந்த ஆன்மா அவனுக்குத் தனது சொந்த இயல்பை வெளிப்படுத்துகிறது.

மன ஏக்கம் என்பதை ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் ஆன்மீக சாதனையாகக் கூறுவதுடன், இறைக் காட்சிக்கு முந்தின நிலையாகவும் வைக்கிறார்; 'ஆழ்ந்த மன ஏக்கத்துடன் அழுதால் அவரைக் காண முடியும்.... மன ஏக்கம் வந்து விட்டாலே அருணோதயம் ஆகி விட்டது. அதன் பிறகு கதிரவன் தன்னைக் காட்டியருள்வான். அது போல் மன ஏக்கத்திற்குப் பிறகு இறைக்காட்சி வருகிறது.

தீவிரமான தேவை ஏற்படும்போதுதான் மன ஏக்கம் வருகிறது. உள்ளார்ந்த ஏக்கமின்றி, சொற்பொழிவுகளைச் செய்வதாலோ, கேட்பதாலோ நூல்களைப் படிப்பதாலோ ஆன்மீகத்தில் எதையும் அடைய இயலாது. உயர் உண்மையை அடைய வேண்டும், இறைவனைக் காண வேண்டும், என்பதெல்லாம் உணவு, உடை போன்ற நமது அன்றாடத் தேவைகளுள் ஒன்றாக வேண்டும். அப்போது மட்டுமே அதற்காக நாம் ஏக்கம் கொள்வோம். ஏக்கம் கொள்ளும் போதுதான் வழி பிறக்கும், உண்மை தெரியும்.

(சாதாரணமாகப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களே முதல் மதிப்பெண் பெற வேண்டும் என்றால் அதற்கு அடிப்படை அதற்கான ஏக்கம் அவனுக்கு இருக்க வேண்டும்.

முதலில் ஏக்கம் இருந்தால்தான் படிப்பதில் ஆர்வம் உண்டாகும். மிகவும் கடினமான பாடமாக இருக்கிறதே, இதை எவ்வளவு நேரம் படிப்பது, நமக்கு முதல் மதிப்பெண் எல்லாம் வேண்டாம் என்று நினைப்பவன் என்றுமே அதை அடைய இயலாது. இந்தப் பாடங்களை நான் சிறந்த முறையில் படிக்க வேண்டும், விடாது படிக்க வேண்டும், பல முறைகள் படிக்க வேண்டும், சந்தேகம் தோன்றினால் உடன் ஆசிரியரிடம் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும், பரீட்சை முடியும் வரை பொழுதுபோக்கு விஷயங்களில் ஈடுபடக் கூடாது என்றெல்லாம் சிந்தித்து முதல் மதிப்பெண்ணைப் பெற எந்த மாணவன் ஏக்கம் கொள்கிறானோ அவனே அந்த மதிப்பெண்ணை அடைகிறான்.

இதுவே ஆன்ம ஞானத்துக்கும் ஆன்ம தரிசனத்துக்கும் பொருந்தும்)

## வலிமை

நாயமாத்மா பலஹீனேன லப்யோ
ந ச ப்ரமாதாத் தபஸோ வாஅப்யலிங்காத் ।
ஏதைருபாயைர்யததே யஸ்து வித்வாம்–
ஸ்தஸ்யைஷ ஆத்மா விசதே ப்ரஹ்மதாம ॥ 4 ॥

பொருள்:

இந்த ஆன்மா வலிமையற்றவனால் அடையப்படுவதிலை; கவனமின்மையாலோ, சின்னங்கள் இல்லாத தவங்களாலோ அடையப்படுவதில்லை. எந்த மகான் (மன ஏக்கத்துடனும், உடல் மற்றும் மன வலிமைகளால் பிறந்த உறுதியுடனும்) முயற்சிக்கிறானோ அவன் இறைவனின் இருப்பிடமான இந்த ஆன்மாவை அடைகிறான்.

இங்கே மூன்று கருத்துக்கள் கூறப்படுகின்றன.

1 ஆன்மா வலிமையற்றவனால் அடையப்படுவதில்லை. உடல் வலிமை, மன வலிமை இரண்டும் இங்கே கருத்தில் கொள்ளப்படுகின்றன. சுவாமி விவேகானந்தர் விளக்குகிறார்:

'வலிமையான, தீரம் மிக்கவர்களே இதற்கேற்ற மாணவர்கள், பலமற்ற நோஞ்சான்களால் என்ன சாதிக்க முடியும்?'

யோகங்களில் ஏதேனும் ஒன்றைப் பயிலும் போது, உடலிலும் உள்ளத்திலும் மறைந்து கிடக்கும் ஆற்றல் சிறிது விழித்தெழுந்தால் போதும், அதைத் தாங்க முடியாமல் இவர்கள் சிதறிப் போவார்கள்.

"இளமையையும் ஆரோக்கியமும், வலிமையையும்" உடையவர்களே வெற்றி பெற முடியும். எனவே உடல் வலிமை மிகவும் இன்றியமையாதது. பொறிகளை அடக்கி ஆளும்போது ஏற்படக் கூடிய அதிர்ச்சிகளை ஆற்றல் படைத்த உடம்புகளினால் மட்டுமே தாங்க முடியும்".

'மன வலிமை அற்றவர்களாலும் ஆன்மாவை அடைய முடியாது....உற்சாகமாக இருக்க வேண்டும். உற்சாகமானவர்களே முயற்சி உடையவர்கள். உறுதியான உள்ளம் படைத்தவர்களே ஆயிரக்கணக்கான துன்பங்கள் முளைத்தாலும் அவற்றை வெட்டிச் சாய்த்து முன்னேறுபவர்கள். மிக மிகக் கடினமான இந்தக் காரியம், மாயையின் வலையிலிருந்து வெளியேறும் இந்தச் செயல், அபாரமான மன உறுதி கொண்டவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட பணியாகும்.

'உடம்பிலும் மனத்திலும் வலிமை இல்லாமல் போனால் ஆன்மாவை அடைய முடியாது. நல்ல சத்தான உணவைச் சாப்பிட்டு முதலில் உடம்பை வலிமைப்படுத்த வேண்டும்.

அதன் பிறகே மனம் வலிமை பெறும். மனம் என்பது உடம்பின் நுட்பமான பகுதிதான்'. மனத்திலும் வாக்கிலும் மகத்தான வலிமையை ஏற்றிக் கொள்.

'உங்கள் உடம்பை நினைத்து அது நலமாக, உறுதியாக இருப்பதாக எண்ணுங்கள். உடல்தான் நம்மிடம் உள்ள சிறந்த கருவி. அது வஜ்ரம் போல் உறுதியுடன் இருப்பதாகவும், அதன் துணையுடன் நீங்கள் வாழ்க்கைக் கடலையே தாண்டி விடலாம் என்றும் எண்ணுங்கள். முக்தி என்பது பலவீனர்களுக்கு கிடையாது. எல்லா பலவீனத்தையும் தூக்கி எறியுங்கள். உங்கள் உடம்பு உறுதியாக இருப்பதாக அதனிடம் சொல்லுங்கள். உங்கள் மனம் உறுதியாக இருப்பதாக அதனிடம் சொல்லுங்கள். உங்களிடமே எல்லையில்லா நம்பிக்கை, முழு நம்பிக்கை வையுங்கள்'.

**கவனமின்மை:**

கவனமின்மையால் ஆன்மீக வாழ்க்கையை என்றல்ல, வாழ்க்கையையே இழந்தோர் பலர். எனவே ஒவ்வொரு படியிலும் கவனமும் எச்சரிக்கையும் தேவை.

படிகளின் உச்சியில் நிற்கின்ற ஒருவன் ஒரு கணம் கவனத்தைச் சிதற விட்டதால் கையிலிருந்து தவறி வீழ்ந்த பந்தினைக் காட்டி இதனை விளக்குகிறார் ஸ்ரீ சங்கரர்.

வீழ்ந்த வேகத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, படிகள் தோறும் உருண்டு, படிப்படியாக வீழ்ந்து எங்கேயோ கண்ணுக்கெட்டாத தொலைவில் போய் விடுகிறது.

வாழ்க்கையில் தவறான அடி எடுத்து வைக்கும் போது, அது பெரிதாகத் தெரிவதில்லை. ஒரு வேளை மனம் ஒரு சமிக்ஞை தரும், ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் விட்டு விடுவோம். கடைசியில், மீள முடியாத அளவிற்குத் தவறுகளில் புதையுண்ட பிறகே புரிந்து கொள்வோம். எனவே கவனமின்மைக்கு ஒரு போதும் இடம் தரலாகாது.

**ஆன்ம ஞானி இறைவனை அடைகிறான்:**

ஆன்மீக வாழ்வின் முக்கிய இறுதிப் படிகளில் ஒன்று இங்கே கூறப்படுகிறது. முதலில் புத்தியின் விழிப்பு, தொடர்ந்து ஆன்ம தரிசனம், மூன்றாவதாக இறைக் காட்சி. தொடரும் இரண்டு மந்திரங்கள் அது பற்றிக் கூறுகின்றன.

ஸம்ப்ராப்யைனம் ரிஷயோ ஜ்ஞானத்ருப்தா:
க்ருதாத்மானோ வீதராகா: ப்ரசாந்தா: |
தே ஸர்வகம் ஸர்வத: ப்ராப்ய தீரா
யுக்தாத்மான: ஸர்வமேவா விசந்தி || 5 ||

<u>பொருள்:</u>

இந்த ஆன்ம ஞானத்தைப் பெற்ற முனிவர்கள், ஆன்ம ஞானத்தில் திருப்தி பெற்றவர்களாக, ஆன்மாவில் நிலை பெற்றவர்களாக, விருப்பு – வெறுப்பு அற்றவர்களாக, அமைதியில் நிலை பெற்றவர்களாக ஆகிறார்கள். விழிப்புணர்வு பெற்ற, தியானத்தில் நிலைபெற்ற அவர்கள் எங்கும் நிறைந்த, எல்லாமான இறைவனை அடைந்து அவரிலேயே நிலைபெறுகிறார்கள்

வேதாந்த விஜ்ஞான ஸுநிச்சிதார்த்தா:
ஸன்யாஸ யோகாத் யதய: சுத்தஸத்வா: ।
தே ப்ரஹ்மலோகேஷு பராந்தகாலே
பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே ॥ 6 ॥

<u>பொருள்:</u>

வேதாந்தத்தின் உண்மைப் பொருளை நன்றாக அறிந்தவர்களும், இந்த உலகம் உண்மையல்ல என்பதை ஏற்றுக் கொண்ட துறவு வாழ்க்கையால், மனம் தூய்மை பெற்ற, புலன்களை வசப்படுத்திய மகான்கள் மட்டுமே மரணமற்ற

நிலையை அடைகிறார்கள். இவர்கள் உடல் வீழ்ந்த பிறகு, மனமற்ற நிலையில், இனி உடல் எடுப்பதிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு, பிறவாப் பெரு நிலையாகிய இறைநிலையை அடைகிறார்கள்.

(ஆன்ம தரிசனம் என்பது சாதாரணமாகக் கிட்டக் கூடிய ஒன்றல்ல! ரசாயனப் பாடத்தில் REVERSIBLE PROCESS AND IRREVERSIBLE PROCESS என்று வரும்.

முதல் செயலில் எந்த இயக்கத்தை மேற்கொள்கிறோமோ? அந்த இயக்கத்தை திரும்ப அதற்கு எதிர் வழியில் மேற்கொண்டு ஆரம்ப நிலையை அடைய இயலும்.

ஆனால், இரண்டாவது செயலிலோ எந்த இயக்கத்தை மேற்கொள்கிறோமோ அந்த இயக்கத்தை திரும்பவும் எதிர் வழியில் மேற்கொண்டு ஆரம்ப நிலையை அடைய இயலாது;

உதாரணமாக நீரிலிருந்து நம் பனிக்கட்டியை குளிர வைப்பதன் மூலம் பெற முடியும். அதே பனிக்கட்டியை சூடாக்கி நீராகவும் பெற முடியும்.

ஆனால், பொறை ஊற்றி வைக்கப்பட்ட பால் தயிராக மாறியதும், மீண்டும் அந்தத் தயிரை பாலாக மாற்ற முடியவே முடியாது. அதாவது, நம்மால் எந்த வகையிலும் தயிரைப் பாலாக்க முடியாது.

இந்த ஆன்ம தரிசனம் என்பதும் அப்படிப்பட்டதே!

ஆன்மதரிசனம் பெறும் அளவுக்கு ஒருவன் தகுதியானவனாக ஆகி விட்டால், அதைப் பெற்ற பின்னால், மற்றவர்கள் போன்று, அவனால் உலகியல் வாழ்வில் ஈடுபடவே இயலாது! உலகில் உள்ள எந்த ஒரு பொருளாலும், அவனை ஈர்க்க இயலவே இயலாது!)

**மூன்று நிபந்தனைகள்:**

மரணமற்ற பெருநிலையை அடைய இங்கே மூன்று நிபந்தனைகள் கூறப்படுகின்றன –

**1 வேதாந்தத்தின் உண்மைப் பொருளை நன்கு அறிந்திருத்தல்:**

'தத் த்வம் அஸி' என்பது வேதாந்தத்தின் மகாவாக்கியங்களில் ஒன்று. '**அது நீ ஆகிறாய்**' என்பது இதன் பொருள். உடம்பையும், மனத்தையும் கடந்த ஆன்மாவே மனிதன். உடம்பும், மனமும் மாறுபவைகள், அழியக் கூடியவைகள், ஆனால், ஆன்மா அழியாதது.

அதுவே உண்மை. மனிதன் என்பவன் அனுபூதியில் இந்த உண்மையை அறிந்திருக்க வேண்டும்.

### 2 துறவு வாழ்க்கையால் மனம் தூய்மை பெற்றிருத்தல்:

தூய மனம் வேண்டும். தூய மனம் என்றால் ஆசைகள் அற்ற மனம். அது உண்மையை உணர்ந்து, மனதினால், இந்த உலகத்தை துறக்கும் துறவினால் உண்டாகின்றது. அதாவது தியாகத்தால் அடையப்படுகிறது.

### 3 புலன் கட்டுப்பட்டிருத்தல்:

புலன்கள் புறப் பொருட்களை நோக்கி அலைப்பாயாமல், ஆன்மாவில் நிலைபெற்றனவாக இருக்க வேண்டும்.

இந்த மூன்று நிபந்தனைகளும் நிறைவேறும் போது, ஒருவன் மரணமற்ற நிலையை அடைகிறான். அதாவது, தான் மரணமற்ற ஒருவன் என்பதை உணர்கிறான். ஆனாலும், அவன் தொடர்ந்து வாழ வேண்டும்.

பிராரப்த கர்மம், அதாவது எந்த வினைப்பயனை அனுபவிப்பதற்காக அவன் பிறந்தானோ? அந்தக் கர்மம் தீரும் வரை அவன் வாழ்ந்தேயாக வேண்டும்.

அவனுடைய அந்த வாழ்க்கை பிறருக்குப் பயன் தருவதாக அமைகிறது. இனி, அவன் அடைய வேண்டியது எதுவும் இல்லை. ஆனால், அவனது வாழ்வு மற்றவர்களும் அந்த உயரிய நிலையை அடைவதற்கு ஒரு தூண்டு கோலாக அமைகிறது.

சுவாமி விவேகானந்தர் தமது 'துறவியின் பாடலில்' இவ்வாறு கூறுகிறார் –

இன்பம், துன்பம் என்ற இருநிலைக் கடந்த இடம் அடைந்து எங்கும் போய் அன்னோர் கதி பெற மாய இருள் தீர்ப்பாய். கருமம் அதன் பிடிப்பெல்லாம் கழியும் மட்டும் நிதம் முயன்று நிரந்தரமாகத் தளை நீக்கி நிலவச் செய்வாய் ஆன்மாவை என்றும் இனிமேல் பிறப்பில்லை.

துறவினாலும் ஆன்மீக சாதனைகளாலும் ஒருவன் தான் ஆன்மா என்பதை உணர்ந்து, மரணமற்ற நிலையை அடைகிறான். பிறகு, ப்ராரப்த கர்மம் தீரும் வரை இந்த உலகில் வாழ்ந்து உடல் வீழும்போது பிறவாப் பெரு நிலையாகிய இறைநிலையை அடைகிறான்.

ஆன்ம ஞானியின் உடல் வீழும்போது என்ன நடக்கிறது?

உடம்பு என்பது உருவாகியது. எனவே அது அழிந்தே தீரும். அதையே நாம் மரணம் என்கிறோம். சாதாரண மனிதனும் மரணத்திற்கு உள்ளாகிறான்.

ஆன்ம ஞானியும் மரணத்திற்கு உள்ளாகிறான். இருவரின் மரணத்தில் ஏதாவது வேறுபாடு உண்டா?

சாதாரண மனிதன் இறக்கும்போது தூல உடம்பு மட்டுமே அழிகிறது. மனம், பிராணன் போன்றவை அடங்கிய

நுண்ணுடம்பு பயணத்தைத் தொடர்கிறது. ஆனால், ஆன்ம ஞானி மரணமடையும்போது, அவனது பரு உடலாகிய இந்த தூல உடம்பு மட்டுமின்றி, மனம் எனும் நுண்ணுடம்பும், எவற்றால் ஆக்கப்பட்டதோ, அதனுடன், அதன் பகுதிகளாகப் பிரிந்து கரைந்து விடுகிறது.

இதுப்பற்றி, பின்வரும் இரண்டு மந்திரங்கள் கூறுகின்றன.

கதா: கலா: பஞ்சதச ப்ரதிஷ்ட்டா
தேவாச்ச ஸர்வே ப்ரதிதேவதாஸு ।
கர்மாணி விஜ்ஞானமச்ச ஆத்மா
பரேஅவ்யயே ஸர்வ ஏகீ பவந்தி ॥ 7 ॥

பொருள்:

பதினைந்து கலைகளும் அவற்றின் இருப்பிடத்தை அடைகின்றன. அதிஷ்டான தேவதைகள் தங்கள் தேவர்களை அடைகிறார்கள். வினைப்பயன்களும், உணர்வு வடிவான ஆன்மாவும் அழிவற்ற மேலான பொருளை அடைந்து எல்லாம் ஒன்றாகின்றன.

## கலைகள்:

எவற்றால், இந்த உடம்பும், மனமும் ஆக்கப்பட்டுள்ளதோ? அவையே கலைகள்.

அவைகள் மொத்தம் பதினாறு – பிராணன், சிரத்தை, வெளி, காற்று, நெருப்பு, நீர், பூமி, புலன்கள், சடங்குகள், உலகங்கள், உலகிலுள்ள பெயர்கள்.

இவற்றில் தனி நபர் சம்பந்தப்பட்டவையும் உள்ளன, பிரபஞ்ச நிலையில் உள்ளவையும் அடங்குகின்றன. பிரபஞ்ச நிலையிலுள்ள உலகங்கள், பெயர்கள் போன்றவற்றின் அம்சம் நம்மில் உள்ளது.

மரண வேளையில் இந்தக் கலைகள் அவற்றின் பிரபஞ்ச நிலையை அடைகின்றன. தனி நபர் பிராணன் பிரபஞ்சப் பிராணனை அடைகிறது. தனி நபரின் மனம் பிரபஞ்ச மனத்தில் கரைகிறது.

இவ்வாறே ஒவ்வொன்றும் அனைத்தும் தனி நபர் தன்மையை இழந்து பிரபஞ்சப் பரிமாணத்தில் ஒடுங்குகின்றன.

## தேவதைகளும் தேவர்களும்:

ஆன்ம ஞானியின் உடல் வீழும்போது, என்ன நடக்கிறது என்பதில், அந்த 16 கலைகளைத் தாண்டிய இன்னும் இரண்டு தன்மைகள் பற்றிக் காண்போம்.

தேவதைகளும் தேவர்களும்:

காண்கின்ற புறவுலகை இயக்குகின்ற தூல சக்திகள் ஆயினும் சரி, காணாத அகவுலகை இயக்குகின்ற சூட்சம சக்திகள் ஆனாலும் சரி ஒவ்வொன்றையும் ஒரு தெய்வமாகக் கண்டனர் உபநிஷத ரிஷிகள்.

இந்த தெய்வங்களை தனி நபர் நிலையில் நமது உடம்பு, மனம் ஆகியவற்றை இயக்கும்போது அபிமானி தேவதை அல்லது அதிஷ்டான தேவதை என்று வழங்கப்படுகின்றனர்.

பிரபஞ்ச நிலையில் பொதுவாக தேவர்கள் எனப்பட்டனர். உதாரணமாக சூரியனுக்கும் கண்ணுக்கும் அதிஷ்டான தேவதை அர்யமான். பகலுக்கும் பிராணனுக்கும் அதிஷ்டான தேவதை மித்ரன்.

ஒருவன் பிரம்ம ஞானம் பெறும்போது, அதற்கான அதிஷ்டான தேவதைகள் பிரபஞ்ச நிலையிலுள்ள தங்கள் தேவர்களுடன் கலந்து விடுகின்றனர்.

**வினைப்பயன்கள்:**

நாம் செய்கின்ற செயல்கள் அனைத்தும் ஒரு பலனை உண்டாக்குகின்றன. இந்தப் பலன் ஒரு பதிவாக ஆழ்மனத்தில் சேமிக்கப்படுகிறது. இதுவே சம்ஸ்காரம்.

இவற்றின் தொகுதிக்கேற்ப, அதாவது வினைப்பயன்களுக்கு ஏற்ப வாழ்க்கை அமைகிறது. இந்த வினைப்பயன் ஒரு வாழ்க்கையில் ஏற்பட்டது மட்டுமல்ல; எத்தனயோ பிறவிகளில் நாம் செய்த வினைகளின் ஒட்டு மொத்தப் பலன்கள் மனத்தில் உள்ளன.

இறைவனை அடைந்தவனின் அனைத்து கர்மங்களும், அதாவது அனைத்து வினைப் பயன்களும் அழிகின்றன; இனி பிறவியே இல்லாமல் போகிறது.

<u>ஜீவன்–இறைவன்:</u>

இறைவனே நம்மில் ஆன்மாவாக விளங்குகிறார் என்பதை ஏற்கெனவே (#2:2.7) கண்டோம்.

அவன் பெற்ற இறையனுபூதியில் இந்தப் பிரிவுகள் விலகி விடுகிறது. ஜீவன், இறைவன் என்ற வேறுபாடு விலகி இரண்டும் ஒன்றாகிறது.

**கலக்கும் நதி போல:**

ஆன்ம ஞானியின் உடல் வீழ்ந்தால் என்ன நடக்கும் என்று சென்ற இரண்டு பதிவுகளில் கண்டதை ஒரு உதாரணத்தின் மூலம் அடுத்த மந்திரம் விளக்குகிறது.

யதா நத்ய: ஸ்யந்தமானா: ஸமுத்ரே
அஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய ।
ததா வித்வான் நாமரூபாத் விமுக்த:
பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் ॥ 8 ॥

<u>பொருள்:</u>

ஆர்பரித்து பெருகி ஓடுகின்ற நதிகள் தங்கள் பயணப்பாதையின் முடிவில், தங்கள் பெயரையும் வடிவத்தையும் இழந்து கடலில் கலக்கின்றன. அதுப்போல, உண்மையை உணர்ந்தவன், தனது பெயர் மற்றும் உருவத்திலிருந்து விடுபட்டு, உயர்ந்தவற்றுள் உயர்ந்தவரும், ஒளி வடிவானவரும் ஆன பரம்பொருளை அடைகிறான்.

**இறையனுபூதியின் விளைவு**

**ஸ யோ ஹ வை தத் பரமம் ப்ரஹ்ம வேத**
**ப்ரஹ்மைவ பவதி நாஸ்ய அப்ரஹ்மவித் குலே பவதி ।**
**தரதி சோகம் தரதி பாப்மானம்**
**குஹாக்ரந்திப்யோ விமுக்தோ அம்ருதோ பவதி ॥ 9 ॥**

<u>பொருள்:</u>

மேலான பரம்பொருளை உணர்ந்தவன் பரம்பொருளாகவே ஆகிறான். பிரம்ம ஞானி அல்லாத யாரும் அவனது குலத்தில் பிறக்க மாட்டான். அவன் கவலையும், பாவமும் அற்றவன் ஆகிறான். மனக் கோணல்களிலிருந்து விடுபடுகிறான்.

இறைவனை உணர்கின்ற ஒருவன் எப்படிப் பரம்பொருளாகவே ஆகிறான், அதாவது தன் தனித்துவத்தை இழந்து ஒருமையுணர்வில் நிலைக்கிறான் என்பதை #7–8 மந்திரங்களில் கண்டோம்.

இறையனுபூதி பெற்ற ஒருவனின் குலத்தில் பிரம்ம ஞானிகளே அதாவது இறையனுபூதி பெற்றவர்களே பிறப்பார்கள். இங்கே குலம் என்பதை பரம்பரை என்று விளக்குகிறார் சுவாமி பூதேஷானந்தர்.

இறையனுபூதி பெற்ற ஒருவரின் வழிகாட்டுதலின் படி சாதனைகள் செய்பவன் கவலையும், பாவமும் அற்றவன் ஆகிறான்; மனக் கோணல்களிலிருந்து விடுபடுகிறான். இறுதியாக இறையனுபூதியும் பெறுகிறான்.

உயர் உண்மைகளை யாருக்குச் சொல்வது?

உபநிஷதங்களையும் அதுப்போன்ற உயர் உண்மைகளையும் தகுதி வாய்ந்தவர்களிடம் மட்டுமே சொல்ல வேண்டும். யாரிடம் சொன்னால், அவர்கள் சாதனைகள் செய்து இறையனுபூதிக்கு முயல்வார்களோ? அவர்களுக்கு மட்டுமே சொல்ல வேண்டும்.

(இது வேத காலங்களில் இருந்து வந்த ஒரு நடைமுறை. பாத்திரமறிந்து பிச்சையிடு என்பார்கள்! இன்றைக்கு எதோ பிராமணர்கள் வேதங்களை எல்லாம் கற்க விடாமல், இதர வர்ணத்தாரை பழி வாங்கியது போலப் பல விமர்சனங்கள் வருகின்றன.

ஆனால், உண்மை என்னவென்றால், பிராமணர்களுக்கு உரிய தினசரிக் கடமைகள் மிகக் கடுமையானவை! இன்று வேண்டுமானால் அவைகள் கடைப்பிடிக்கப்படாமல் இருக்கலாம் ஆனால் அன்று பெரும்பாலோனோர் கடைப்பிடிக்கவே செய்தனர்.

ஆனால், ரிஷிகள், முனிவர்கள் உயர் உண்மைகளை அனைத்து பிராமண சிஷ்யர்களுக்கும் சொன்னார்களா? என்றால் இல்லை! மிகக் கடுமையான சோதனைகள் வைத்து தம் உபதேசங்களைக் கேட்கும் சிஷ்யன் அதைக் கடைப்பிடித்து ஒழுகுவானா என்றெல்லாம் சோதித்துத்தான் செய்தனர்.

ஆக, ஒரு முனிவரிடம் முப்பது சீடர்கள் பயின்றால், உயர் உண்மைகளை ஒரு மூன்று பேருக்கு சொன்னால் அது பெரிய விஷயம்! ஏனென்றால், அவர்களுடைய செயல்பாடுகள், கற்பதில் உள்ள ஆர்வம், ஒழுக்கம் இத்தனையும் கணக்கில் எடுத்துக் கொண்டே அவர்களுக்கு முனிவர்கள் அவற்றை உபதேசம் செய்தனர்.)

ததேதத் ரிசாஅப்யுக்தம்–
க்ரியாவந்த: ச்ரோத்ரியா ப்ரஹ்மநிஷ்ட்டா:
ஸ்வயம் ஜுஹ்வத ஏகர்ஷிம் ச்ரத்தயந்த:
தேஷாமேவைதாம் ப்ரஹ்மவித்யாம் வதேத
சிரோவ்ரதம் விதிவத்யைஸ்து சீர்ணம் || 10 ||

<u>பொருள்:</u>

வேத சாஸ்திரங்களில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

'சாதனைகள் செய்பவன், கற்றுணர்ந்தவன், இறைவனில் நிலைபெற்றவன், சிரத்தை உள்ளவன்,

தன்னையே ஆஹுதியாக அளித்து வாழ்பவன், சாஸ்திர விதிகளின்படி சிரோவிரதத்தைக் கடைப்பிடிப்பவன் இத்தகையோருக்கு மட்டுமே ஆன்மீக ஞானத்தை அளிக்க வேண்டும்.'

சிரோ விரதம் என்றால், தலையில் அக்கினியை வைத்துக் கொண்டு செய்யப்படுகின்ற ஒரு சாதனை. இது பற்றி **அதர்வண வேதம்** கூறுகிறது. அதாவது சாதனைகளைத் தவறாமல், செய்பவனிடம் மட்டுமே உயர் உண்மைகளைக் கூற வேண்டும் என்பதை உபநிஷதத்திற்கு ஒரு பின்னுரையாகக் கூறுகிறது இந்த மந்திரம்.

## மாமுனிவர்களுக்கு வணக்கம்:

ததேதத் ஸத்யம் ரிஷிரங்கிரா: புரோவாச
நைதத சீர்ணவ்ரதோ அதீதே
நம: பரமரிஷிப்யோ நம: பரமரிஷிப்ய: || 11 ||

## பொருள்:

முன்பு இந்த உண்மையை அங்கிரஸ் என்ற முனிவர் உபதேசித்தார். சாதனைகள் செய்யாதவன் இந்த

உபநிஷதத்தைப் படிக்கக் கூடாது. இந்த உபநிஷத உண்மைகளை அளித்த மாமுனிவர்களுக்கு வணக்கம்.

சாதனை வாழ்க்கை என்ற ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டவன்தான் உபநிஷதங்களைப் படிக்க வேண்டும் என்பதை இந்த மந்திரம் ஓர் எச்சரிக்கை போல் கூறுகிறது. சாதனை வாழ்க்கையில் முன்னேறுவதற்காக மாமுனிவர்களைப் பணிவதுடன் உபநிஷதம் நிறைவுறுகிறது.

(பொதுவாக உபநிஷதங்களில் சொல்லப்பட்ட சாதனை முறைகள் எல்லாம் மறைபொருள் உள்ள ஒன்றாகும். வேதங்களும் அப்படித்தான். அக்காலத்தில் அவற்றைப் பயிற்றுவிக்கும் மாணவர்கள் அதை தவறான நோக்கங்களுக்கு பயன்படுத்தாமல் இருப்பார்களா? என்பதை ரிஷிகள், முனிவர்கள் பல சோதனைகள் மூலம் கண்டறிந்து அவர்களுக்கே இந்த மந்திரங்களை, சாதனை முறைகளை உபதேசித்தனர். அதனால், அவற்றில் மறைந்துள்ள பொருளை ஓரளவே கண்டறிய முடிகிறது.


அதேப்போல, பயிலும் சீடர்களில் எத்தனை பேர் சிரத்தை உள்ளவர்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களுக்கு மட்டுமே இந்த சாதனை முறைகளைக் கற்றும் கொடுப்பர்.

பிரச்ன உபநிஷதத்தில் பிப்பலாத முனிவரிடம் பல சந்தேகங்களுக்கு தெளிவு பெற வேண்டி வந்த ஆறு சீடர்களும் இறையுணர்வில் சிறந்தவர்கள், வேதம் கற்றவர்கள்,

ஞானத்தில் சிறந்தவர்கள்! ஆனால், அவர்களையும்கூட ஒரு ஆண்டு தன் ஆஸ்ரமத்தில் பணிவிடைகள் செய்ய வைத்து, அவர்களுடைய சிரத்தை, இறையுணர்வு, ஞானம், சாதனை முறைகள் என எல்லா வற்றையும் கண்டு, திருப்தி அடைந்த பின்னரே பிப்பலாத முனிவர் அவர்களுடைய கேள்விகளுக்கு விடை பகர்ந்தார் என்பது நோக்கத்தக்கது! அதனால்தான் சாதனை வாழ்க்கையை நோக்கமாகக் கொண்டவன் மட்டுமே உபநிஷதங்களைப் படிக்க வேண்டும் என்று சொல்லப் படுகிறது!)

இத்துடன் **முண்டக உபநிஷதம் நிறைவு** பெறுகிறது.

# முண்டக உபநிஷதம்



பராபரம் பாடசாலை